Registered as a News paper in Ceylon ★ விலை சதம் 20

# ஈழநாடு

வாரமலர்

மலர் 12 | தை 6 | ஜுலிகஸ் 21 | ( 19—1—71 ) | செவ்வாய்க்கிழமை | இதழ் 339

அரிச்சுவடி மட்டை

பாலர் பாடசாலைகள் அத்தாட்சிப் பத்திரங்களை சமர்ப்பித்து அரிச்சுவடி மட்டைகளை இனமாகப் 31-1-71 க்கு முன்னர் பெற்றுக்கொள்ளலாம்.

மில்க்வைற்

சோப் தொழிற்சாலை

த. பெ. இல. 77 - யாழ்ப்பாணம்.

## புதிய அரசியல் திட்டம்:

# அடிப்படைத் தீர்மானத்தில் பொது மக்களுக்கும் பங்கு!

## திருத்தங்களை வரவேற்கிறார் அமைச்சர் கொல்வின்

(நமது நிருபர்)

புதிய அரசியல் திட்டங்களுக்கென சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படைத் தீர்மானத்தில பொது மக்களின் திருத்தங்களுக்கும் இடம் அளிக்கப்படவுள்ளது. அடிப்படைத் தீர்மானம் சம்பந்தமாகப் பொது மக்கள் சமர்ப்பிக்கும் திருத்தங்களும் இடம் பெறும் என்று நேற்று அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா தெரிவித்தார்.

ஆட்சிமன்ற அலுவலகத்தில் நடந்த பத்திரிகையாளர் மகாநாடொன்றிலேயே மேற்கண்ட தகவலை அவர் வெளியிட்டார்.

இம்மகாநாட்டில் அமைச்சர் கொல்வின் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா குடியரசு ஒரு ஐக்கியமுடைய நாடாகவே இருக்கும். தமிழரசுக் கட்சியினர் அனுப்பிய மகஜரையும் நான் ஆலோசனை செய்தேன்

பலவனை அமைப்புக்களாலும், பெரும்பாலான தனி நபர்களாலும் எனது அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்ட மகஜர்களை நான் ஆலோசனை செய்தேன். இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படைத் தீர்மானம் எனது தீர்மானங்களே தவிர விஷயாலோசனைக் கமிட்டியின் கருத்தல்ல. இப்பொழுது சமர்பபிக்கப்பட்ட அடிப்படைத் தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ விஷயாலோசனைக் குழுவுக்கு முழு சுதந்திரம் உண்டு என்றார்.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள அடிப்படைத் தீர்மானங்களில் ஏதாவது திருத்தங்கள் செய்யவேண்டுமானால் தங்கள் திருத்தங்களைச் சமர்ப்பிக்குமாறு அவர் மக்களைக் கேட்டுள்ளார்

## யாழ்ப்பாணத்தில் இன்று தமிழ் விழா

(நமது நிருபர்)

தமிழ் தாய் மன்றமும் முன்றநாடு மாமன்றத்தினரும் யாழ்ப்பாணத்தில் இன்று தமிழ்விழா எடுக்கின்றனர். இன்று மாலை 4 மணியளவில் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் தலைமையில் ஆரம்பமாகும் இவ்விழாவில் யாழ். நகரதுணை முதல்வர் திரு. ஆ. துரைசிங்கம் கொடியேற்றி வைப்பார். திரு ஐ. தி. சம்பந்தன் வரவேற்புரை நிகழ்த்துவார் மூதூர் எம். பி. திரு. அ. தங்கத்துரை, ஈழவேந்தன், அண்ணாதாசன், மு. தி. நாவுக்கரசு. இலநாகலிங்கம், கரிகாலன், செ. வி. நாதன், பங்கயம்[ நளன், செல்வி இராஜம் புஷ்பவனம், குறிஞ்சில் மனோகரன் ஆகியோர் உரை நிகழ்த்துவர். முன்னாள் வட்டு. எம். பி. திரு. அமிர்தலிங்கம் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். திரு. அ. கொ. பொன்னுச்சாமி பரிசுகள் வழங்குவார். திருமதி சரோஜினி தனபாலசிங்கம் இன்னிசை விருந்தளிப்பார்.

(கு. வி. ம.)

## "அண்ணரும் தாக்கப்பட்டு கிடப்பதைக் கண்டேன்"

ஊரதீவு. ஞாயிறு

"சம்பவம் நடந்த தினத்துக்கு இரண்டு மாதங்களுக்கு முன் எனது மனைவி என்னை விட்டுப்பிரிந்து ஒருபிள்ளையுடன்போய்விட்டார். அவர் எங்கிருந்தார் என்று எனக்குத்தெரியவில்லை எதிரியின் உதவியுடன்தான அவர் தொண்டமானாறில் இருப்பதாகக் கேள்விப்பட்டு, எனது சகோதரியின் புதல்வரான எதிரியின் வீட்டுக்குப்போய் இதுபற்றி எதிரியிடம் வினவினேன். அப்போது அவர் என்னை இரும்புக்கம்பியால் தாக்கினார் அந்த அடி எனது தலையில் விழுந்தது. உடனே பக்கத்திலுள்ள எனது அண்ணர் வீட்டுக்குப்போக, வீட்டுப்படலையில் எனது அண்ணரும் தாக்கப்பட்டுக்கிடப்பதைக்கண்டேன். எனது அண்ணரின் மனைவியும் அங்கே நின்றார். இந்நேரத்தில் அங்கு குழுமிநின்ற மக்களும் அழுகைக்குரல் எழுப்பினர். காயத்துடன் பொலிஸ் நிலையத்துக்குப் போன நான் அங்கு முறைப்பாடு கொடுத்துவிட்டு பொலிசார் மூலம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டேன்"

இவ்வாறு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் சாட்சியமளித்த வேலணை கிழக்கைச் சேர்ந்த மாதன் மாரிமுத்து சொன்னார் இவ்வழக்கில் வேலணை கிழக்கைச் சேர்ந்த மாதன் மாரிமுத்து, மாதன் செல்லத்துரை, செல்லத்துரை பராசக்தி ஆகியோரைத் தாக்கியதாக அதே ஊரைச் சேர்ந்த நமசிவாயம் கனகரத்தினத்தின்மீது ஊர்காவற்றுறைப் பொலிசாரால் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

இவ்வழக்கில் சாட்சியமளித்த மாதன் செல்லத்துரை தொடர்ந்து சாட்சியமளித்ததாவது"

எதிரிவீட்டில் கூக்குரல் கேட்பதாக நித்திரையாயிருந்த என்னை எழுப்பிவிட்டு எனது மனைவி ஓடினார் நானும் பின்னே போனேன். நான் எதிரியின் வீட்டுப் படலைக்குள் போனபோது எதிரி இரும்புக் கம்பியால் எனது வாயில் அடித்தார். உடனே அறிவு மயங்கிய நிலையில் நான் விழுந்துவிட்டேன். பின்னர் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது.

விசாரணை முடிவில் இருநூறு ரூபாய் பிணையில் இரண்டுவருட நன்னடத்தைக்கென எதிரியை நீதவான் விடுதலைசெய்தார் எதிரி சார்பில் வழக்கறிஞர் ஜிம்மி இராசரத்தினமும் வழக்காளிகள் சார்பில் வழக்கறிஞர் ஆர் விசுவநாதனும் ஆஜராகிவாதாடினர்.

## "கோரிக்கைகளை வழங்குவதால் அரசாங்கத்தை ஆதரிக்கிறோம்"

### வட்டுக்கோட்டை எம். பி. கூறுகிறார்

யாழ்ப்பாணம். செவ்.

"தேசிய அரசாங்கம் தட்டிக்கழித்துவந்த தமிழ் காங்கிரசின் காரிக்கைகளை ஐக்கிய முன்னணி அரசாங்கம் வழங்கமுன் வந்துள்ளது. ஆதலால் இந்த அரசாங்கத்தின் திட்டங்களை நாம் ஆதரிப்பதில் தவறொன்றுமில்லை"

வட்டுக்கோட்டை எம். பி. திரு. தியாகராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்க் காங்கிரஸ் எம். பி. களை கட்சியிலிருந்து வெளியேற்றவேண்டும் என்ற கோரிக்கை உண்மையான தமிழ் காங்கிரஸ் இளைகளிடமிருந்து வரவில்லையென்றும் சிலவிஷமிகளின் நடவடிக்கைதான் இது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்

திரு. தியாகராசா மேலும் கூறியதாவது: வடக்கில் பல்கலைக்கழகம் அமைப்பது, மகாவலிகங்கையைவடக்கே திருப்புவது, வடக்கில் உபவானொலி நிலையம் அமைப்பது, வடக்கில் தொழிற்சாலைகளை நிறுவுவதுபோன்ற தமிழ்க்காங்கிரசின் கோரிக்கைகளை தேசிய அரசாங்கம் தட்டிக்கழித்துவந்தது. இதே கோரிக்கைகளை ஐக்கிய முன்னணி அரசாங்கம் செயல்படுத்திவருகிறது, ஆதலால் அரசாங்கத்தை ஆதரிப்பதில் தவறென்ன?

ஆசிரியர்கள் விஷயத்தில் கூட தேசிய அரசாங்கம் அக்கறை காட்டவில்லை இந்த அரசாங்கம் ஆசிரியர்களின் குறைகளை நீக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

தேசிய அரசாங்க காலத்தில் சிறுபான்மைத் தமிழர் ஒருவரை செனெட்டராக்குவதற்கு தமிழ் காங்கிரஸ் மட்டுமன்றி தமிழரசும் பாடுபட்டு, பலனெதுவும் ஏற்படவில்லை. ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்ததும், வராததுமாக சிறுபான்மைத்தமிழர் ஒருவருக்கு ஆட்சிமன்றத்தில் இடம் கொடுத்தது: தேசிய அரசாங்க காலத்தில் பெறமுடியாமலிருந்த வற்றையெல்லாம் இன்றைய அரசாங்கம் வழங்கமுன்வந்துள்ளது. இதனாலேயே நாம் அரசாங்கத்தின் திட்டங்க

(16- பக்கம் பார்க்க)

## பண்டிதர் நடாத்தும் கண்காட்சி

(நல்லூர் நிருபர்)

மக்கள் அரசாங்கத்தின் தமிழ்ப்புறக்க விப்பு நடவடிக்கைகளை தமிழ்மக்களுக்கு எடுத்து விளக்கும் வகையில் தீவுப்பகுதி எம். பி. பண்டிதர் கா பொ. இரத்தினம் கண்காட்சி ஒன்றினை அடுத்தமாத முற்பகுதியில் ஊர்காவற்றுறையில் நடத்தப் போவதாக அறிவித்துள்ளார்.

இக்கண்காட்சியில் அரசாங்கம் தமிழ் எம். பிக்களுக்கு தனிச்சிங்களத்தில் அனுப்பிய கடிதங்கள், காசோலைகள், பஞ்சாங்கங்கள் அனைத்தும் வைக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெறுகின்றன.

## அரசியல் அரங்கு

# காமன்வெல்த் குடும்பத்தின் எதிர்காலம்

சிங்கப்பூரில் கூடிய காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டிலே கருத்து வேற்றுமைகள் பல இருந்தன. இது எதிர்பார்க்கப்பட்டதே. என்றாலும் அரசியல் சுதந்திரம் பெற்ற 31 நாடுகளின் தலைவர்கள் மனக்கசப்பு சிறிதுமின்றி ஒருங்கே கூடிப்பேச முடிந்ததே பெரிய காரியம். தங்களிடையே கருத்து வேற்றுமைகள் என்ன இருப்பினும் காமன்வெல்த் குடும்பம் நீடித்து இருக்க வேண்டுமென்பதிலும், அதன் உறவுகள் பலப்பட்டு பரஸ்பர உதவியாக இருக்கவேண்டுமென்பதிலும் பொதுவாகக் கருத்து ஒற்றுமை நிலவியதென்பது குறிப்பிடத்தக்கது. இஷ்டப்பட்டால் எந்த ஒரு நாடும் இக் குடும்பத்திலிருந்து பிரிந்து செல்லலாம். சேர்ந்திருக்கவேண்டுமென்ற கட்டாயமில்லை. என்றாலும் இந்நாடுகளெல்லாம் சேர்ந்திருக்குமாயின் அதற்கு முக்கிய காரணம் இருக்கத்தான் வேண்டும். சென்றவாரம் குறிப்பிட்டது போல் யுத்தமோ எதிர்ப்போ இன்றி பிரிட்டன் இந்நாடுகளுக்கெல்லாம் அரசியல் சுதந்திரத்தை அளித்ததால், இவற்றிற்குப் பிரிட்டனின் பால் விசேஷ அபிமானமுள்ளது. பிரிட்டன் ஆதிக்கம் இருந்த காலத்தில் விரும்பத்தகாத பல காரியங்கள் நடந்திருக்கலாம். நடந்துள்ளன. என்றாலும் பிரிட்டன் தானாக சுதந்திரம் அளித்த காரணத்தால் அவற்றையெல்லாம் அரசியல் அடிமைப்பட்டு விடுதலை அடைந்த நாடுகள் மறந்துவிட்டன. புதிதாக விடுதலை பெற்ற நாடுகளிடையே பல பிரச்னைகளி பொதுவானவை. சிறப்பாக பொருளாதார விடுதலை பெற்று முன்னேற ஆம் மக்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். தனிப்பட்ட முயற்சியிலும் பார்க்க இப்பொருளாதார விடுதலைக்குக் கூட்டு முயற்சியும் ஒத்துழைப்பும் மிகவும் பயன்படுவதாக இருக்கும். ஆகவே தான் காமன்வெல்த் குடும்பம் இனிப் பலப்பட்டு, அந்நாடுகளிடையே அதிக ஒத்துழைப்பு ஏற்பட வேண்டுமென்பதில் சம்பந்தப்பட்ட நாடுகள் அதிக ஆவலுடன் உள்ளன.

தென்னாபிரிக்காவிற்கு ஆயுதங்களைப் பிரிட்டன் அளிக்கக்கூடாதென்பதில் இலங்கை உள்ளிட்டுப் பல நாடுகள் ஒன்றுபட்டு எதிர்த்தனவெனின் அதற்குக் காரணம் தங்கள் சுயமரியாதையைக் காத்துக்கொள்ளத்தான். கேவலம் தோலின் நிறத்தைக்கொண்டு ஒருவர் வெள்ளையரல்லாதவர் என்ற காரணத்தால் ஒரு நாடு அவர்களை வேற்றுமைப் படுத்தி, பல பல சிறுமைகளுக்கும் கொடுமைகளுக்கும் உட்படுத்துவதாயின் மானமுள்ள வெள்ளையரல்லாதவர் யார்தான் அதை எப்படி ஒப்பமுடியும்? இதை உணர்ந்தும் காமன்வெல்த்தைச்சேர்ந்த பெரும்பாலான நாடுகளின் உணர்ச்சியை மதித்தும் தென்னாபிரிக்காவை இக் குடும்பத்திலிருந்து பிரிட்டன் வெளியேற்றியது. என்றாலும் வர்த்தகம், பாதுகாப்பு என்ற வேறு காரணங்களுக்காக பிரிட்டன் சுயநலத்துடனே தென்னாபிரிக்காவுக்கு ஆயுதம் முதலிய உதவிகளை அளிப்பதாயின் நிறவேற்றுமைக் கொள்கைக்கு அது மறைமுகமாக ஆதரவு அளிப்பதாகவே கொள்ளப்படும். உலகில் பல பாகங்களிலும் பிரிட்டனுக்குப் பல உரித்துக்கள் இருக்கலாம். அவற்றைப் பாதுகாத்துக் கொள்ளச் சில விசேஷ நடவடிக்கைகளைத் தன் விருப்பத்திற்கு மாறாக எடுக்கவேண்டியும் ஏற்படலாம். என்றாலும் ஒரு குடும்பத்தில் ஒருவர் எவ்வளவு பலவீனமானவராக இருப்பினும் அவரை அவமதிப்பதைச் சகிக்க முடியாது. மேலும் இக்குடும்பத்தில் பெரும்பாலோரும் வெள்ளையரல்லாதவர்கள். அப்படியிருக்க, அவர்கள் தென்னாப்பிரிக்காவின் நிறத்துவேஷக் கொள்கையை பிரிட்டன் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ ஆதரிப்பதை எப்படிப்பேசாமல், எதிர்க்காமல் இருக்கமுடியும்? சிங்கப்பூர் மகாநாட்டில் பல ஆசிய, ஆபிரிக்க நாடுகள் இவ்விஷயம்பற்றி உணர்ச்சிததும்பப் பேசிய உண்மைக் காரணத்தைப் பிரிட்டிஷ் பிரதமர் ஹீத் உணர்ந்திருக்கவேண்டும். பிரிட்டனை காமன்வெல்த்திலிருந்து வெளியேற்றவேண்டுமென்பது, இலங்கையுள்ளிட்டு வேறெந்த நாடுகளின் நோக்கமுமல்ல. தங்கள் உணர்ச்சிகளைத் தெரிவித்தால் பிரிட்டன் தனது போக்கை மாற்றிக்கொள்ளவும், உலகில் நிறவேற்றுமைக் கொடுமை ஒழியவும் வழிபிறக்குமென்ற ஆவலில்தான், தென்னாபிரிக்காவுக்கு பிரிட்டன் ஆயுதங்கள் அளிப்பதை எதிர்த்தார்கள், எதிர்க்கிறார்கள்.

இதுபற்றி இம்மகாநாட்டில் ஒரு முடிவைக்கூறமல், பின்னர் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் தமது முடிவை அறிவிப்பதாக பிரதமர் ஹீத் கூறியுள்ளார். காமன்வெல்த் பிரதமர்கள் பலரது உணர்ச்சிகளையும் நேரில் அறிந்த பிரிட்டிஷ் பிரதமர் ஹீத், இவ்விஷயத்தில் தமது பிடிவாதத்தைத் தளர்த்தி, மேலான அரசியல் ஞானத்துடன் நடந்துகொள்வாரென்றே எதிர்பார்க்கப்படுகிறது. தென்னாபிரிக்காவுக்குப் பிரிட்டன் ஆயுதங்களை சப்ளை செய்யாவிட்டாலும், அதற்கு அமோகமான ஆயுதங்கள் கிடைக்க வழியுண்டு. ஏற்கெனவே பிரான்ஸ் அதற்குப் பெருவாரியான ஆயுதங்களை அளித்துள்ளது. இப்போது மேற்கு ஜெர்மனி, தேவைப்பட்ட ஆயுதங்களையெல்லாம் அளித்துவருகின்றதாம். மூன்றாவது கைமூலம் மறைமுகமாகவும் தென்னாபிரிக்காவுக்கு ஆயுதங்கள் கிடைக்க வழியுண்டு. ஆகவே பிரிட்டன் ஆயுதங்களை உதவாவிடில் தென்னாபிரிக்காவுக்கோ அல்லது கடல்பாதைகளுக்கோ ஆபத்து ஏற்பட்டுவிடுமென்று அஞ்சத்தேவையில்லை. காமன்வெல்த் குடும்பத்தைச் சேராத அமெரிக்கா, தான் இஷ்டப்பட்ட ஆயுத உதவிகளையெல்லாம் தென்னாபிரிக்காவுக்கு அளிப்பதாயின், காமன்வெல்த் நாடுகள் அதைத் தடுக்க முடியுமா?

மேலும் சோவியத் ரஷ்யாவால் தென்னாபிரிக்காவைச் சுற்றிய கடல்பாதைகளுக்கு ஆபத்து ஏற்படுவதாகவும், அதைத் தடுத்துப் பாதுகாக்கவே ஆயுதங்களைத் தென்னாபிரிக்காவுக்கு அளிக்க வேண்டிய அவசியமேற்பட்டுள்ளதாகவும், பிரதமர் ஹீத் சமாதானம் கூறுகிறார். இந்தக் குற்றச்சாட்டை ரஷ்யா பலமாக மறுத்துள்ளது. உலகிலுள்ள கடல் பாதைகள் எல்லா நாடுகளுக்கும் பொதுவானவை. எக்காரணம்பற்றியும் எந்த நாட்டுக்கும் அவ்வுரிமையை நீடித்துமறுக்கமுடியாது. எவ்வளவு சீக்கிரத்தில் வல்லரசுகள் தங்களுக்குள் கலந்துபேசி, இவ்விஷயமாக ஒத்துழைக்கின்றனவோ, அவ்வளவும் அந்நாடுகளுக்கும் உலக அமைதிக்கும் நன்மையாகும். இதைவிட்டு எவ்வளவு ஆயுத பாதுகாப்புகளைச் செய்தாலும், பரஸ்பர போட்டிகளும் பொறாமைகளும்தான் அதிகரிக்குமேயன்றி அமைதிக்கும் சுபீட்சத்துக்கும் வழி செய்ய முடியாது. வல்லரசுகளுக்கு இதெல்லாம் தெரியாததல்ல. என்றாலும் குறுகிய தேசியவாதமும், சுயநலமும் அவர்களைப் பிடித்து ஆட்டு வரை அவர்கள் திருந்துவதும் உலக அமைதி ஏற்படுவதும் சுலபமா?

0 0 0

சில வருடங்களுக்கு முன் பிரிட்டனில் பிரதமராக இருந்த மாக்மிலன் அவர்கள் இலங்கைக்கு வந்திருந்தார். அலரி மாளிகையில் பத்திரிகைக்காரர்களைச் சந்தித்துப் பேசினார். காமன்வெல்த் உறவுகளைப் பலப்படுத்துவது பற்றி கேள்வி எழுந்தது. "காமன்வெல்த் பார்லிமெண்ட்" அமைத்து அதன் பிரதிநிதிகள் அடிக்கடி, தங்கள் பிரச்னைகளைப் பற்றிப் பேசித் தீர்த்துக் கொள்ள முயலுவதுடன், யாத்திரை, குடியேற்றம், பரஸ்பரம் உதவி செய்து ஒத்துழைப்பது முதலியன பற்றியும் ஆக்க முறையில் ஆலோசனை நடத்தி காரியங்கள் செய்ய முடியாதா? என்று கேட்டேன். அவர் இக்கேள்வியை எதிர்பாராததால், சற்றுநேரம்யோசித்துவிட்டு, "இது நல்ல யோசனைதான். ஆனால் இதைச் செயற்படுத்துதற்கு இது சரியான சமயமல்ல' என்று பதிலளித்தார். அவர் இப்படிக் கூறி 12 வருடங்களுக்கு மேலாகின்றன. யோசனை நல்லதாயின், ஏன் இதைப்பற்றிய நடவடிக்கையை எடுக்க முயலப்படாது. சில பிரச்னைகள் யுத்தத்திலும் முடிகின்றன. ஆனால் பிரச்னைகள் யுத்தத்தால் தீருவதற்குப் பதில் அதிகம் சிக்கலாகின்றன. ஒரு துரும்பும் தூணாகி, மக்களுக்குப் பெரும் பெரும் சங்கடங்கள் ஏற்படுகின்றன. காமன்வெல்த் ஒரு குடும்பமாயின், அந்தக் குடும்பப் பிரச்னைகளை அக்குடும்பத்துக்குள்ளாகவே பேச்சு வார்த்தைகள்மூலம் தீர்த்துக்கொள்ள முயலுவதே விவேகமாகும். காமன்வெல்த் பிரதமர்கள் பல வருடங்களுக்கு ஒரு முறை கூடுவதால் மட்டும் இந்த உறவுகள் பலப்பட முடியாது. இதற்கான ஒரு பார்லிமெண்ட் அமைத்து, பிரதிநிதிகள் ஒவ்வொரு காமன்வெல்த் நாட்டிலும் மாறி மாறி வருடத்தில் மூன்று அல்லது நான்கு முறை கூடி பொதுநன்மைக்கான முறையில் பேசுவதாயின், இது பெயரளவில் காமன்வெல்த்தாக இல்லாமல் உண்மையில் ஒரு "பொதுச் செல்வமாக" வளர்ந்தோங்க முடியும்.

0 0 0

சிங்கப்பூர் மகாநாடுமுடிந்ததும் பிரிட்டிஷ் பார்லிமெண்டிலே, காமன்வெல்த் மக்களையும் இனி அந்நியர்கள்போல் கருதி சட்டம் கொண்டுவரப்போகிறார்களாம்! இது உண்மையானால் காமன்வெல்த் எதற்காக இருக்கவேண்டுமென்று தெரியவில்லை. பொருளாதாரத்தில் தாழ்ந்துள்ள சில காமன்வெல்த் நாடுகளிலிருந்து, பிரிட்டன் முதலிய முன்னேறியுள்ள நாடுகளுக்கு அதிகமான மக்கள் குடியேற முயல்கிறார்கள். இதனால் பிரிட்டனுக்கு அதிக பிரச்னைகள் ஏற்படுவது இயற்கையே. இதற்காக காமன்வெல்த் மக்களை அந்நியர்களாகக் கருதுவது பிரச்னையைத் தீர்க்காது. காமன்வெல்த் நாடுகளிடை உள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க ஆவன செய்வதே இப்பிரச்னையைத் தீர்ப்பதுடன், காமன்வெல்த் குடும்பம் சிதையாமல் பலப்பட்டு முன்னேறவும் வழிசெய்வதாகும்.

— பராசரன் —

# தொகுதி ரீதியாக பிரசாரக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், செவ்.

மட்டக்களப்பில் அடுத்த மாதம் 7-ந்திகதி நடைபெறவிருக்கும் தமிழரசுக் கட்சியின் பொதுச்சபைக் கூட்டத்தில் நடவடிக்கை குழுவின் முடிவுகள் சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. தொகுதிரீதியாக தற்பொழுது தொண்டர்கள் திரட்டப்பட்டு வருகின்றனர்.

தற்போதைய அரசியல் சூழ்நிலையை விளக்கியும்தமிழரசுக்கட்சி எடுக்கவேண்டிய நடவடிக்கை பற்றியும் வடக்கு மாகாணத்தில் தொகுதிரீதியாக பிரசாரக் கூட்டங்களில் கூறப்பட்டு வருகிறது.

இம்மாதம் 25-ந் தேதி நல்லூரிலும், 26-ந் தேதி வட்டுக்கோட்டையிலும், அடுத்தமாதம் 1-ந் தேதி உடுப்பிட்டியிலும், 2-ந் தேதி ஊர்காவற்றுறையிலும், 16-ந் தேதி கோப்பாயிலும் 17 ந் தேதி உடுவிலிலும் பிரசாரக் கூட்டங்கள் நடைபெறவிருக்கின்றன.

மட்டக்களப்பில் அடுத்த மாதம் 7-ம் திகதி பொதுச் சபைக்கூட்டமும், 9-ந் தேதி செயற்குழுக்கூட்டமும்நடைபெறவிருக்கிறது.

## இன்று ஞானசம்பந்தர் ஆதீனத்தில்

(நமது நிருபர்)

இன்று நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஸ்ரீதியாகப் பிரஹ்ம மஹோற்சவம் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிகள் மாலை 5 மணி பூஜை, மாலை 6 மணி செல்வி ராதா, செல்விசீதா பாட்டு செல்வி எஸ். சுப்புலக்ஷ்மி வயலின், செல்வி எஸ் பானுமதி மிருதங்கம். இரவு 7 மணி சங்கீதவித்துவான் செல்வி ஜெகதாம்பிகை பரந்தாமன் பாட்டு, திரு ஜி சண்முகானந்தம் வயலின், திரு ஏ எஸ் ராமநாதன் மிருதங்கம், திரு ஏ சுப்புசாமி கடம், திரு பி ஆத்மானந்தன் முகர்சிங். இரவு 9 மணி இசைப்புலவர்சண்முகரெட்ணம் பாட்டு. இரவு 11-30 திரு என் கே பத்மநாபன் குழுவினர் நாதஸ்வரக்கச்சேரி.

## சுயேச்சையாக மேனன் போட்டி

திருவனந்தபுரம், ஜன, 18

முன்னாள் இந்தியப் பாதுகாப்பமைச்சர் திரு. வி. கே. கிருஷ்ணமேனன் வரவிருக்கும் லோகசபைத் தேர்தலுக்கு திருவனந்தபுரத் தொகுதியில் சுயேட்சை அபேட்சகராகப் போட்டியிட இருக்கிறார் இத்தகவலை அவர் தெரிவித்தார்.


## பாராட்டுவிழா

யாழ்ப்பாணம், செவ்.

இலங்கை திவ்விய ஜீவன சங்கங்களின் போஷகர் யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தஜீக்கும், அன்னாரின் அமெரிக்க ஆத்மயோகசிடர்களுக்கும் யாழ்ப்பாணம் திவ்வியஜீவனசங்கத்தாரால் இம்மாதம் 20-ம், 21-ம் தேதிகளில் சங்க மண்டபத்தில் பாராட்டு உபசாரவிழா நடைபெறவிருக்கிறது.

திரு. செ. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் செல்வி தர்மினி கனகராசாவின் இன்னிசைக் கச்சேரியும், பஞ்சமுக வீணை வாத்தியமும், அத்துவித படக்காட்சியும் இடம்பெறும். இருதினங்களும் சுவாமிஜி அருளுரை நிகழ்த்துவார்கள்.

# விவசாயம் செய்வோம்!



மண்ணில் பயிர் விளைச்சலை அதிகரிக்க விஞ்ஞானம் தந்துள்ள பல கருவிகளில் இதுவுமொன்று. வயல் வேலைகளைத் துரிதப்படுத்த இந்த இயந்திரம் பெரிதும் உதவுகிறது.

**படித்துவிட்டு உத்தியோகம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் காலத்தை போக்கும் இளைஞர்களுக்கு விவசாயத்தின் அருமையை உணர்த்துகிறது இக்கட்டுரை. விவசாயத் துறையில் இளைஞர்களை ஈடுபடுத்தி, அவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்க இளைஞர் விவசாயக் கழகங்கள் எந்நேரமும் தயாராகவுள்ளதென்கிறார் கட்டுரையாளர். அமெரிக்கா சென்று அங்கு விவசாயத்துறையில் விஷேஷ பயிற்சி பெற்றவர் இவர்.**

சி. சிறிஸ்கந்தராசா
(கிருஷிகப் போதனாசிரியர், இளம் விவசாயக் கழகம்)

இன்றைய எமது கிராமப்புற வாழ்க்கை ஐம்பது ஆறுபது ஆண்டுகளுக்கு முன்பிருந்தது போலல்ல. சமூக அமைப்பில், பொருளாதார நிலையில் பலவித மாறுபாடுகளையடைந்துள்ளது. முன்னையதுபோலல்லாமல் சாதாரண ஒரு இளம் ஆண் அல்லது பெண்ணின் வாழ்க்கை தனது தாய், தந்தை, பாட்டன், பாட்டிமார்களின் வாழ்க்கையைப் போலல்லாமல் பல படிகளைத் தாண்டி முன்னுக்கு நிற்கின்றது. இலகுவான, சொகுசான, விரைவான போக்குவரத்துக்கள் கிராமத்தையும் நகரத்தையும் மிக அண்மையில் சேர்த்துள்ளன. வானொலி ஒலிபரப்புச்சேவைகள் பல புதப்புதுக் கருத்துக்களையும் முன்னேற்ற வழிகளையும் கிராமப்புற மக்களின் மத்தியில் செலுத்த உதவுகின்றன. விவசாய விஸ்தரிப்புச் சேவையாளர்கள் விவசாயிகட்கு விளைவைக் கூட்டும், விளைவின் தரத்தைக்கூட்டும் நவீன முறைகளை போதிக்கிறார்கள். நவீன முறைகளும் பாவனைப் பொருட்களும் பெண்களின் வீட்டு வேலைகளை சுலபமாக்கியுள்ளன. கிராமவாழ்க்கையில் ஒருசில அடிப்படைப் பரம்பரையான கொள்கைகள் நிலைத்து நிற்க, புது அறிவும் திறமையும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. முன்பிருந்தது போலல்லாமல் தன்னுணர்ச்சியும, தன்னம்பிக்கையும் தனைத்தானே பாதுகாத்துக்கொள்ளும் தன்மையும் இன்று கிராமப்புறத்தில் மிக அவசியமாகின்றன. இதற்குவிஸ்தாரமான அறிவு தேவைப்படுகின்றது. இளம் ஆண் பெண்கள் பயிற்றப்பட வேண்டியவர்களாகிறார்கள். இவர்கட்கு பயிற்சி அளிப்பதில் முன்னிற்பது இளைஞர் விவசாயக்கழகங்களாகும். இக்கழகத்தின் குறிக்கோள்களின் முன்னிற்பது! "விவசாய முன்னேற்றத்திலும், மனையாசுகத்திலும், கிராம வாழ்க்கையிலும் கிராம இளைஞர்களிடையே அக்கறையைவளர்த்தலாகும்."

## எங்கே போவது?

'இங்கிருந்து நான் எங்கே போவேன்?' இது பல கிராமப்புற வாலிபர்கள் இலகுவாக நடத்துவந்த வாழ்க்கைப் பாதையின் (கல்விப் பொதுத் தராதரவகுப்பு சித்தியெய்தியபின்) சந்தியில் வந்து நின்று தம்மைத் தாமே கேட்டுக்கொள்ளும் ஒரு பொதுவான கேள்வியாகும். ஒருவனின் வாழ்க்கையை, இளம்வயதைப் பின் நோக்கிப் பார்க்கும்பொழுது எவ்வளவு இலகுவாக தன் வாழ்க்கைப் பாதையில் நடந்து வந்துள்ளான் என்றுதெரிகிறது. அவனுக்கு எவ்வித கஷ்டமும் வரவிடாமல் பெற்றோர்கள் பார்த்துக்கொள்ளுகிறார்கள். பெற்றோரினால் அன்புடனும், ஆதரவுடனும்வளர்க்கப்படுகிறான். தமது வாயை வயிற்றைக்கட்டி பெற்றோர்கள் மூன்றுநேரமும் தவறாமல் உணவு கொடுக்கின்றனர். நல்லஉறையுள்கிடைக்கிறது. விதவிதமான உடைகள் அவனுக்கு அணிவித்து மகிழ்கிறார்கள். நோய் வந்தால் தகுந்த வைத்தியனிடம் காட்டிப் பரிகரிக்கிறார்கள் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகட்கு எவ்வித குறையும் விட்டு வைப்பதில்லை. சில பிள்ளைகள் விரும்பியோ அல்லது பெற்றோரின் வற்புறுத்தலாலேயோ தமது பெற்றோரின் தோட்டத்தில் தகப்பனுக்கு உதவிசெய்கிறார்கள். சில பெற்றோர்கள் 'சிச்சி', படிக்கிற பிள்ளையை இப்படிக் கஷ்டவேலைகளில் போட்டு மாய்ப்பதா என்று விட்டுவிடுகிறார்கள். அவனுக்கு பல நண்பர்கள் இருப்பார்கள். நல்லவர் கூடாதவர் என்று இல்லை. எல்லோருமே நண்பர்கள்தான். பலர் அவனை விரும்புபவர்களாக இருப்பார்கள். தன்னைப்பற்றியோ தன்தோற்றத்தைப் பற்றியோ இவன் அதிகம் அக்கறை கொள்ளமாட்டான். ஆனால், வயது 14 வரும்பொழுது இவனிடம் சில மாற்றங்களைக்காணலாம். தன்னைப்பற்றிக்கூட சிந்திப்பவனாகிறான். நண்பர்களைக் குறைத்துக் கொள்கிறான். தனது தோற்றம் அழகாக இருத்தலில் அதிகநேரம் செலவிடுகிறான். வயது மூத்தவர்களிடம் முன்பிடுத்த அடக்கம் குறைவாக இருக்கும். தன்னைப் பிரபல்யப் படுத்தும் ஒருசில முயற்சிகளில் ஈடுபடுவான். சுதந்திர புருஷனாக இருப்பதிலும், எந்த விடயத்திலும் தானே தீர்மானம் எடுத்துக்கொள்வதிலும் கருத்தாக இருப்பான். இவனுக்கு வயது 18 ஆகும்பொழுது உலகம் வித்தியாசமாகத் தோன்றுகின்றது. பொதுவாக இவ்வயதை என்னுத்தெறிக்கும் வயது என்பார்கள். எனவே ஒருவன் வாழ்வில் இவ்வயதுக் காலம் மிக முக்கியமாகத் தொன்றுகும். நல்லவர்களுடன் கூடி நல்லவனாகலாம். தீயவர்களுடன்கூடித் தீயவனாகலாம். எந்தப் பெற்றோரும் தன் மகன் தீயவழிகளில் ஈடுபடுகிறான் என்று கேட்க விரும்பமாட்டார்கள். எடுக்கும்வரை ஏதாவதொரு அலுவலில் அவனை ஈடுபாடுடையவனாக்குதல் வேண்டும். ஒருவனைப் பிரயாசையுடையவனாக்க, நாட்டின் நற்பிரஜையாக்க நல்வழிப்படுத்த இளைஞர் விவசாயக் கழகங்கள் பெரும்பாலான கிராமங்களில் அதன் இரண்டாவது முக்கிய குறிக்கோளாக 'சேவை, தலைமைத் தன்மை சிறந்த பிரஜைக்கான தகைமைகள்' ஆகிய வற்றின் உணர்வை கிராம இளைஞர்களிடையே விருத்தி செய்வதாகக் கொண்டு இயங்கி வருகின்றது.

## உத்தியோகம் குதிரைக்கொம்பு

கல்லூரியில் கல்வி கற்கும் மாணவன் கல்லூரிப் படிப்பின்பின் எப்படியாவது அரசாங்கத்திலோ அல்லது வெளியார்துறையிலோ உத்தியோகம் பார்ப்பதையே விரும்புகிறான். அவன் மட்டுமல்ல அவன் பெற்றோர், இனத்தவர் எல்லோரும் அவன் உத்தியோகம் பார்ப்பதையே விரும்புகிறார்கள். கல்விப் பொதுத் தராதரப் பத்திர வகுப்புடன் தற்பொழுது உத்தியோகம் எடுப்பது குதிரைக்கொம்பாகி விட்டது. பலர் எப்படியாவது லஞ்சம் கொடுத்தாவது உத்தியோகம் எடுக்கவேண்டும் என்று பலரிடம் பணத்தைப் பறிகொடுத்தவர்கள் ஏராளம். கிராமப்புற வாலிபர்கட்கு நகர வாழ்க்கை பொன்போல மின்னுகிறது. நகரத்துக்குப் போனால் வேலை கிடைக்கும் என்று நம்பி பெற்றோரின் பணத்தையும் எடுத்துக்கொண்டு நகரத்தையடைகிறார்கள். அங்கு பலரை நம்பி ஏமாறுகிறார்கள். கொண்டுவந்த பணம் கரைந்துபோக தீயவர்களுடன் கூடித் தீயவழிகளில் ஈடுபடுகிறார்கள். நாட்டுக்கே வேண்டாதபிரஜைகளாகிறார்கள். சிலர் தூரத்துப் பார்வைக்கு பொனபோல மின்னியது உண்மையான பொன்னல்ல என்று தெரிந்து திரும்பவும் கிராமத்திற்கே திரும்பி விடுகிறார்கள். விவசாயம் செய்வதுதான் தனக்கு வகுத்தவழி, சுதந்திரமான வழி என்று தெரிந்து மிக்க பிரயாசையுடன் விவசாயத்தில் ஈடுபடுகிறார்கள். இவர்கள்தான் வளர்ந்தவர்களாகும்பொழுது நாட்டின் உயிர்நாடியான விவசாயியாகிறார்கள். இளைஞர் விவசாய கழகங்களும் 'எல்லாக் கிராம நிலதன்மைகளிலும் கிராம இளைஞர்களைக் கற்பித்து அவர்களிடையே கிராம வாழ்க்கையிலும் நிலத்திலும் அன்பினை விருத்தி செய்தலைக் குறிக்கோளாகக் கொண்டே இயங்கி வருகின்றது.

## விவசாயத்தின் தரம் உயர...

பெருகிவரும் ஜனத்தொகைக்கு உணவு அளிக்க விவசாயத்தின்தரம் உயரவேண்டும். விவசாய ஆராய்ச்சியாளர்கள் புதுப்புது முறைகளை அளித்துக்கொண்டே இருக்கிறார்கள். அவை விவசாயியின் செயல்முறைகளை பல வழிகளில் இலேசாக்கியுள்ளன. நிலம் கட்டுப்படுத்தப்பட்டது. விவசாயிகள் பெருகலாம், விவசாயத்தரம் உயரலாம். ஆனால் நிலம் வளர்வதில்லை. எனவே இருக்கும் நிலத்தில் எங்ஙனம் நன்முறைகளை திருந்திய முறைகளைப் பாவித்து விளைவைக் கூட்டலாம் என்பதே இப்போதைய ஆராய்ச்சி. இளம் விவசாயிகள் மூலம் விவசாய விஸ்தரிப்புச் சேவையைப் பெருக்கும் அவசியத்தை வளர்ந்துவரும் நாடுகளில் ஒன்றான எமது நாட்டில் பலர் உணரத் தொடங்கியுள்ளார்கள். இளம்கன்று பயமறியாது' என்பதற்கிணங்க விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள் தமது பகுதிகளிலுள்ள இளம் விவசாய கழகங்களை விஸ்தரிப்பு சேவைக்கு பெரிதும் பயன்படுத்துகிறார்கள் புதுப்பயிர்கள். புது இனங்கள், செயற்கைப் பசளைப் பரிசோதனைகள் இளம் விவசாயிகளின் தோட்டங்களில் பரீட்சிக்கிறார்கள். அண்டை அயலிலுள்ள விவசாயிகள் இவற்றைப் பார்த்துத் தெரிந்தாமும் அவற்றை உபயோ

(14-ம் பக்கம் பார்க்க)

## தலையெழுத்து!

பரிசாரகர் ஒருவர் வாடிக்கைகாரர் ஒருவருடன் வாக்குவாதப் பட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்துவிட்ட சைவஓட்டல் முதலாளி கிண்டலாக வாடிக்கையாளரிடம் சொல்கிறார்:

எங்கள் ஓட்டல் பணியாளர்களைப்பற்றி என்னவென்று நினைத்தீர்கள். இங்கு எல்லாம் அறிஞர்கள். கலைஞர்கள், பகுத்தறிவாளர்கள்தான் இருக்கிறார்கள், ஆமாம்...

முதலாளியின் கிண்டலைப் புரிந்துகொண்ட பரிசாரகர் வெறுப்போடு சொல்கிறார்:

என்ன செய்யலாம் எங்கேயோஎப்படியோ இருக்கவேண்டியவன் உங்க ஓட்டலிலேவந்து மாட்டிக்கிட்டு முழிக்கிறேன். என் தலையெழுத்து!

முதலாளி விட்டுக் கொடுக்காமல் பதில் சொல்கிறார்:

நானும்தான், பைத்தியக்கார ஆஸ்பத்திரி வைத்து நடத்தியிருக்க வேண்டும் தெரியாத்தனமாக ஓட்டலை வைத்து உங்களையெல்லாம் சேர்த்துக்கிட்டு கிடந்து முழிக்கிறேன். என் தலையெழுத்து!

— 'பேனா'

### நாகசுரத்தின் மகிமையைப் பேணிய

# முது பெரும் கலைஞர் கோவிந்தசாமி

**அண்ணுசாமி, முத்துகிருஷ்ணன், பெரிய சண்முகசுந்தரம் முதலிய நாகசுர ஜாம்பவான்கள் புகழோங்கி விளங்கிய காலத்தில், பல்லவி வாசிப்பில் புலியாக வாழ்ந்தார் நவாலி கோவிந்தசாமி. காந்தர்வ வாத்தியமாகிய நாகசுரத்தின் புனிதம் மாசுபடாமல் இன்றும் வெற்றிக்கொடி நாட்டி வருகிறார் இப்பெரும் கலைஞர்.**

1910-ம் ஆண்டளவில் சுமார் 14, 15 வயது மதிக்கத்தக்க ஓர் இளைஞன் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள நரசிங்கம்பேட்டை ரயில்வே ஸ்டேசனில் கையை நாடிக்கு முட்டுக் கொடுத்துக்கொண்டு ஆழ்ந்த யோசனையில் உட்கார்ந்திருந்தான். பக்கத்திலே ஆயுதம் இருந்தது. எங்கேயோ வெளியூருக்குச் சேவகத்துக்குப் போனவன் வீடு திரும்புவதற்கு ஜட்கா வரும்வரையில் காத்திருந்தான். கடுங்காலி போல இறுக்கமான தேகம். கண்டவர் கவர்சியுறும் சுட்டியான முகம். அடர்த்தியான அள்ளு கொண்டை. காதுகளில் டால்வீசும் கடுக்கன். கண்களில் மட்டும் கவலையும் ஏக்கமும் கலந்திருந்தன.

தற்செயலாக அவ்விடத்திற்கு வரநேர்ந்த யாழ்ப்பாணம், காரைநகர் வாசியான ஆறுமுகம் என்பவரின் திருஷ்டி பையன்மீது விழுந்தது. ஆறுமுகம் மேளக்கார வகுப்பைச் சேர்ந்தவர். இந்தியாவிலிருந்து ஒரு நல்ல மேளசெட் ஏற்பாடு செய்து யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் செல்லும் நோக்கத்துடன் வந்திருந்தார். மெதுவாக பையனிடம் கதை கொடுத்தார். அவருக்கு விபரமெல்லாம் புரிந்துவிட்டது.

'ஏ, பையா! பேசாமல் என்னுடன் யாழ்ப்பாணத்திற்கு வந்துவிடு. அங்கே நிறையப் பணம் சம்பாதிக்கலாம். திருவிழா சீசன் முடிந்தவுடனே ஊருக்குத் திரும்பி விடலாம் என்று ஆசை வார்த்தை சொன்னார் ஆறுமுகம்.

தன்னுடைய வாழ்க்கையில் ஒரு முக்கியமான திருப்பம் உண்டாகிறதென்பதை உணர்ந்தானோ என்னவோ வீட்டில் தாய் தகப்பனுரோடு ஏற்பட்ட சிறு மனஸ்தாபம் அந்த இளம் நெஞ்சில் முள்ளுப்போல் உறுத்த உலகத்தில் தானும் நல்ல பெயரும் புகழும் ஈட்டி, பெரிய பணக்காரனாய் வர வேண்டுமென்ற ஆசையினால் தூண்டப்பெற்று, 'சரி வருகிறேன்!' என்று ஒப்புக்கொண்டுவிட்டான் பையன்.

தூத்துக்குடியில் கப்பலேறி கொழும்புக்கு வந்து அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்கள். மானிப்பாயில் ஒரு வீட்டில் குடியிருப்பு. ஆறுமுகம் தவில்காரர். ஒத்துக்காரர், தாளக்காரர் எல்லோரையும் ஏற்பாடு செய்து மேளம் கட்டியாகி விட்டது. திருவாவடுதுறை மடத்தில் புழங்கிய பையனுக்கு யாழ்ப்பாணத்து சாப்பாட்டுவகை ஒத்துக்கொள்ளவில்லை. அடிக்கடி குமட்டிக்கொண்டு வந்தது. நாலைந்துநாள் போக எல்லாம் பழக்கமாகி விட்டது.

இந்தியாவிலிருந்து வந்த புதுமேளத்திற்கு கல்லளை பிள்ளையார் கோவிலில் முதலாவது கச்சேரி கிடைத்தது. அந்த முதல் கச்சேரியிலேயே பையன் தனது அற்புதமான வாசிப்பினுல் ஜனங்களை மயக்கி விட்டான் எல்லோரும் ஓஹோ என்று அவனைப் புகழ்ந்தார்கள். நவாலியைச் சேர்ந்த குமாரசூரியர் என்னும் ஓர் ரஸிகப்பிரபு திருவிழா முடிந்ததும் பையனை அழைத்து தம்முடன் கூட வந்திருக்கும்படியும் தாம் வேண்டிய உதவிகள் யாவும் செய்வதாகவும் கூறினுர். பையனும் ஒப்புக் கொண்டான்.

அன்று முதல் இந்த அறுபது வருட காலம்வரை 'பையன்' நவாலியையே தனது சொந்த ஊராக்கிக் கொண்டான். திருவாவடுதுறை கோவிந்தசாமி நவாலி கோவிந்தசாமியானுர், திருவிழா சீஸன் இல்லாத காலங்களில் சில சமயம் இந்தியாவுக்குப்போய்ப் பெற்றோர், சகோதரர்களைப் பார்த்து வருவார். விஸா முதலிய கெடுபிடிகள் வந்தபின் அதுவும் நின்று விட்டது. இப்போ முழுக்க முழுக்க அவர் நவாலியார்.

நாகசின்னத்தின் அளவுக்கு வளர்ந்திருந்த போதே கோவிந்தசாமி அதைத் தூக்கி வாசிக்க ஆரம்பித்து விட்டார். முன்ஜென்மத்தில் விட்ட குறையோ தொட்ட குறையோ மிகச் சிறு வயதிலேயே சகலவாணியின் கடாட்சம் அவருக்குக் கிட்டி விட்டது! அபூர்வமான ராகங்களையும் பல்லவிகளையும் அநாயாசமாக ஊதித்தள்ளுவார். இவருடைய குடும்பத்தவருக்கு திருவாவடுதுறை ஆதீன மடத்தில் வாசிக்கும் புரோகித உரிமை பரம்பரையாக இருந்தது. மடத்தில் அவருக்கு நல்ல கியாதி ஏற்பட்டது. காலஞ் சென்ற நாகசுரமேதை ராஜரத்தினம்பிள்ளை இவருக்கு நெருங்கிய உறவினர். இருவரும் மடத்தில் சேர்ந்து வாசிப்பார்கள். கோவிந்தசாமியின் சுழி அவரை சிறுவயதிலேயே ஈழத்துக்குத் திருப்பி விட்டது.

யாழ்ப்பாணத்தில் அவருக்கு மளமளவென்று சேவகங்கள் வந்தன. கிசு கிசுவென்று பேரும் புகழும் ஏறியது. கொள கொளவென்று காசும் வந்து கொட்டியது. அவர் வாசிக்குமிடமெல்லாம் ஏகப்பட்ட கூட்டம் கூடியது. வட்டுக்கோட்டை செல்லத்துரை, புத்தூர் ராஜா போன்ற பெரிய கைகளின் பக்கபலமும் நன்மதிப்பும் கிடைத்தது. நவாலியிலுள்ள பெருமக்கள் ஒன்றுசேர்ந்து அவருக்குத் 'தங்க நாயனம்' செய்து கொடுத்தார்கள். கொழும்பிலிருந்தும் கச்சேரிக்கு அழைப்புகள் வந்தன. சுறுவாக்காட்டில் நடந்த ஒரு கலியாணத்துக்கு மட்டும் அவருக்கு மூவாயிரம்ரூபாய் கொடுத்தார்கள்.

இடக்கர் முடக்கரான பல்லவிகளை தத்தகாரமாக வாசித்து மற்றமேளகாரரை திக்குமுக்காடச் செய்வதில் கோவிந்தசாமி மகாசமர்த்தர். சுன்னுகத்து ஐயனர் கோயிலில்ஒருதிருவிழாவுக்கு 29 கூட்டம் மேளம் வந்திருந்தது. கோவிந்தசாமியும் போனுர். கோவில் வாசலில் இவருடைய அபிமானி ஒருவர் மடியைப்பிடித்துக் கொண்டு, 'கோவிந்தசாமி, இன்றைக்கு நீ வாசிக்கும் பல்லவியை மற்றவர் எவரும் வாசிக்கப்படாது. அப்படி வாசித்தால் இதோ இந்த சங்கிலி. இல்லாவிட்டால்...' என்று சொல்லி கையிலிருந்த கிறிஸ்கத்தியைக் காட்டினுர். கோவிந்தசாமிக்கு அப்படி செய்வது கொஞ்சமும் விருப்பமில்லையென்ருலும் என்ன செய்வதென்று வாசித்தார். கீரவாணி ராகத்தில் மிஸ்ரசாபு தாளத்தில் ஒரு தத்தகாரப் பல்லவி. கடைசிவரை எவருமே அதை வாசிக்கவில்லை.

ஒருமுறை நாவலர் சந்தி பிள்ளையார் கோவிலில் புத்துவாட்டி சோமு அவர்கள் நடத்திய அபிஷேகம் ஒன்றுக்குமேல் சோமு, அண்ணுசாமி, முத்துகிருஷ்ணன் முதலிய நாகசுர ஜாம்பவான்கள் எல்லோரும் வந்திருந்தார்கள். சோமுவாசித்த ராகம் இன்னதென்று ஒருவருக்கும் தெரியவில்லை. உடனே புத்துவாட்டியார் கோவிந்தசாமியை அழைத்து வரும்படி நவாலிக்குகுதிரை வண்டி அனுப்பினுர். கோவிந்தசாமி வந்ததும் சோமு அவரிடம் இரகசியமாக 'தம்பி, இதென்ன ராகம்' என்று கேட்டார்.

## 'லாவண்யம்'

மேளகாரருக்கே உரிய பரிபாஷையில் கோவிந்தசாமி 'ய, ர, ல, வ' என்று மொட்டையாக சொன்னுர். சோமுவுக்கு உச்சிமேல 'ஐஸ்' வைத்த புழுகம். உடனே தமது சொந்த நாகசின்னத்தைக் கொடுத்து அந்த ராகத்தை வாசிக்கும்படி வேண்டினுர். மேளகர்த்தா வரிசையிலுள்ள நான்காவது ராகமாகிய வனஸ்பதியே அந்த ராகம்.

பழைய நாகசுர பத்ததியும் சாஸ்திர முறையும் தவருமல் கோவிந்தசாமி இந்த 75-வது வயதிலும் சேவகம் செய்துவருகிருர். வாலிப காலத்து மூச்சுமிடுக்கும் வயதுக்கேற்ப சற்றே குறைந்துவிட்டபோதிலும் விவகாரத்துக்கோ ஞானத்துக்கோ கொஞ்சமேனும் குறைவில்லை. சினிமா பாட்டுகளை அவர் கேட்பதுமில்லை, ரஸிப்பதுமில்லை, வாசிப்பதுமில்லை. இந்தக்காலத்து ரஸிகர்களுக்கு இது ஒரு குறைபாடாகத் தோற்றலாம். ஆனுல் கோவிந்தசாமியோ என்னதான் நேரினும் பழைய சம்பிரதாயங்களிலிருந்து அணுவளவேனும் பிசகுவதில்லையென்ற தீர்மானத்தோடு நாகசுரவித்தைக்கு மாசுமறு ஏற்படாத முறையில் அந்தப்புனிதமான வாத்தியத்தை இன்றும் கையாண்டுகொண்டு வருகிருர்.

தள்ளாத இந்த வயதிலும் தமது கலைஞானத்தையும் ஆயுகத்தையும் நம்பி துணிச்சலோடு வாழ்க்கை நடத்துகிருர் இந்த முதுபெரும் கலைஞர். மாமியாருள்ள இடத்தில் மருமகள் வரமாட்டாள் என்ற பழமொழி உண்மைதானு? இளம் வயதில் கலாபிமானிகளான செல்வந்தர்கள் கோவிந்தசாமிக்கு வீடுதேடிவந்து காலடியில் பணத்தைக் கொட்டினுர்கள். இன்று அவர்களை காணவில்லை. வயது வந்த கலைஞர்களுக்கு நமது அரசாங்கமாவது ஏதாவது உதவி செய்கிறதா? அதுவுமில்லை. வாழ்நாள் முழுவதும் தங்கள் தேகத்தைக் கசக்கிப்பிழிந்து மற்றவர்களுக்கு கலையின்பத்தை ஊட்டிவந்த கலைஞர்கள், கோவிந்சாமியைப் போல, இன்னும் எத்தனையோபேர் பிற்காலத்தில் கஷ்டப்படுகிருர்கள் இவர்களுக்கெல்லாம் விமோசனம் கிடைக்கும் நாள் எந்நாளோ?



# நமது நூல் நிலையம்

**அருள்நெறிககோவை**

காங்கேசன் துறை
திரு. மூ. சின்னத்தம்பி
அவர்கள் நினைவுமலர்

காங்கேசன்துறை வாசியாகிய திரு. மூ. அ. சின்னத்தம்பி அவர்களின் நினைவாக அவரது குடும்பத்தவர் இந்நூலை 14-12-70-ல் நடைபெற்ற அந்தியேட்டிக் கிரியையின்போது வெளியிட்டுள்ளனர்.

'வெறும் அழுகையும் ஒப்பாரியும் காலத்திறுற் கரைந்துபோவனவாகும். அவரது நினைவு நிலைத்துவம பெற வேண்டுமாகுல் அவர் வாழ்வில் கைக்கொண்ட வழியில் முதன்மையானதாகவும், உறுதியானதாகவும் உள்ள ஒரு நினைவுச்சின்னம் அமைக்க முற்பட்டதன்காரணமாகவே இந்த அருள்நெறிக்கோவை உருவாகியுள்ளது' என்று பின்னை 'எங்கள் தந்தை' என்ற மகுடத்தின்கீழ் குறிக்கின்றதற்கு அமைய இந்நூலில் ஆன்மீகப்பற்றை உண்டாக்கும் பாடல்களே இடம்பெற்றுள்ளன. திருமயிலை வே. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள் திரட்டிய 'சமயாசாரியர் சந்தானுசாரியர் சரித்திர சங்கிரகம்' என்னும் நூலிலிருந்து நாயன்மார் சரித்திரத்தையும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரது சைவவினைவிடையிலிருந்து நால்வரின் அற்புதங்களையும், காஞ்சிபுரம் வித்துவான் சபாபதி முதலியார் இயற்றிய 'நால்வர் ஆனந்தக்களிப்பு' என்ற நூலிலிருந்து பாடல்களையும். பின்னர் நாயன்மார் பாடிய தேவாரங்களையும் திருமுறை ஒழுங்கின்படி இந்நூலில் வெளியிட்டுள்ளனர்'

சமயகுரவர்களான திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் ஆகியோரின் படங்களும் நூலை நனிசெய்து படிப்பவர்களின் சமயப்பற்றையும் எழுப்புகின்றன.

சிவசிவ சங்கர சம்பு—
என்னும்
திருஞான சம்பந்த
சுவாமியை நம்பு
கவலையெலா மின்று தீரும்
—நெஞ்சே
கலங்காதே வாழ்வெலாம்
நம்மையே சேடும் (சிவ)

இத்தகைய நல்ல சந்தப்பிடிப்புந்துடிப்புமுள்ள பாடல்களினுல் அமைக்கப்பட்டுள்ள சமயகுரவர்கள் நால்வரின்ஆனந்தக்களிப்பும் சிறுர்களுக்கும், வில்லிசைக் கலைஞர்களுக்கும் விருந்தாகவுள்ளன.

நினைவுமலர்கள் யாவிலும் புதுமையான அமைப்புடைய அருள்நெறிக்கோவை உண்மையில் திரு. திரு மு. அ. சின்னத்தம்பி அவர்களை நினைவில் நிறுத்துகின்றது.

— ஈழு

**சிலம்பொலி**

ஆசிரியர்:
பழையூர் சுந்தரம்பிள்ளை
வெளியீடு: கம்பன்கழகம்
விலை: சதம் 25

'தமிழகத்துப் பத்திரிகைகள் தரமற்றவைகளா?' என்ற தலைப்பினைக்கொண்ட முதலாவது கட்டுரையே பிரச்சினையைக் கிளப்புவதாகவும், அதேவேளை காத்திரமான விடயத்தை அலசுவதாகவும் அமைந்துள்ளது.

சிலம்பொலி என்ற தலைப்பின்கீழ் சிந்தனையைத் தூண்டும் விடைத் துணுக்குகள் இடம்பெற்றுள்ளன

(14 ம் பக்கம் பார்க்க)

# இன்னும் ஒரு விடுதி

"டு லெட்'' என்ற விளம்பரம் தொங்கியிருந்த வீடு ஒன்றுக்குள் நடேசன் நுழைந்தான். விருந்தையில் யாரையும் காணவில்லை. ஆனபடியால் அவன் அங்கே இருந்த மின்சாரப் பொத்தானை அடித்தான். சில நிமிடங்களில் எழில் மிகுந்த நடுவயதிலுள்ள பெண்ணொருத்தி வெளிவந்தாள்.

"அந்த அறை எங்கே?'' என்று நடேசன் கேட்டான்.

"அங்கே இருக்கிறது. போய்ப்பாருங்கள்.''

உத்தரவு கிடைத்தவுடன் உள்ளே போன நடேசன் அறையை விபரமாகப் பரிசோதித்தான்.

அங்கே குறைபாடு ஒன்றுமிருக்கவில்லை. ஆனால் ஒரு விதமான பாழ்நிலை பரவியிருந்தது.

"அறை நல்லாய் இருக்கிறது. ஆனாலும் பாழ்நிலையில் இருக்கிறது. அப்படியிருந்தாலும்'' என்று நடேசன் முணுமுணுத்தான்.

"அறை கலகலப்பாக இருக்க வேண்டுமானால் மேலும் போதிய அளவு ஆட்களை எடுக்கலாம். ஆனால் எனக்கு அப்படி எடுக்க விருப்பமில்லை.''

"ஏன்?''

"நான் மட்டும் தனியே இருந்தால் அப்படிச் செய்யலாம். எனக்கு ஒரு மகளும் இருக்கிறாள். அவள் அழகியாக இருக்கிறபடியால் பல பேர்களை இங்கே வைத்திருப்பதற்கு நான் விரும்பவில்லை.''

நடேசன் தான் புத்துயிர் பெற்றதுபோல உணர்ந்தான். முந்தி அவன் நினைக்க பாழ்நிலை இச்செய்தியால் அவன் மனத்திலிருந்து அழிந்துபோயிற்று.

"பாடசாலைக்குப் போகிற பிள்ளையா?''

"இல்லை, சீனியர்பரீட்சையில் சித்தியடைந்துவிட்டு வீட்டிலே இருக்கிறாள். என்றும் வீட்டுக்குள்ளேயே இருக்கிறாள். நடுநிசியில் மாத்திரமேவெளிவருவாள். அற்புதமான பிள்ளை. அதோ உள்ளே இருக்கிற அறையில் இருந்து இரவும் பகலும் நாவல். நாவல், சஞ்சிகை புத்தகம் இவற்றை வாசிப்பதே அவளின் வேலை.''

நடேசன் அந்த அறையை வாடகைக்கு வாங்கினான். அதிக முற்பணமும் கொடுத்து மாதம்மாதம் கொடுக்க வேண்டிய வாடகையிலும் சிறிதுகூடக்கொடுத்து அந்த அறையை அமர்த்தினான் நடேசன்.

விடுதிச் சொந்தக்காரியாகிய திருமதி பார்வதியம்மாள் தனது மாதினி என்ற பெயருள்ள மங்கையைப் பற்றி சில வேளைகளில் நடேசனுடன் பேசுவாள். ஆனால் நடேசன் அங்கேதங்கியிருந்த பல வாரங்களில் ஒரு நாளேனும் மாதினியைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அவள் எப்பொழுதும் தங்கியிருப்பதாகச் சொல்லப்பட்ட அறை இரவும்பகலும் பூட்டிக் கிடப்பதைக்கண்டான். சில நாட்கள் அந்த அறையில் அருகே அங்குமிங்கும் போய்ப் பார்த்தான்.

சில நாட்கள் இரவுகளில் அந்த அறைக்குள் பக்கத்திலிருந்து பியானோ சங்கீதமும் வருவதைக் கேட்டான். அப்போது மாதினி பியானோ வாசிக்கிறாள் என்று அவன் நினைத்தான்.

ஒருமாதம் கழிந்துவிட்டது. நடேசன் அவனுடைய அறையில் மிக மனவேதனையுடன்தான் இருந்தான். வேலையில்லாத நேரங்களில் சந்தோஷத்துடன் பேசிக்கொண்டிருப்பதற்கு இங்கே யாருமே இல்லை. மாதினியைப் பார்ப்பதற்கு அவன் மனத்தில் உண்டான ஆசை நாள்தோறும் அதிகரித்துவந்தது.

ஒருநாள் வீட்டைப்பார்த்துக் கொள்ளும்படி நடேசனுக்குச் சொல்லிவிட்டு திருமதி பார்வதியம்மாள் சந்தைக்குப் போனாள். உடனே நடேசனுக்குத் திகைப்பும் திடுக்காட்டமும் உண்டாயின. மாதினியைப் போன்ற அழகான இளம் பெண்ணை தன்னந்தனியே வீடொன்றில் வைத்துவிட்டு அங்கே ஒருஇளம் பையனும் இருக்கும்பொழுது வெளியே போகிற தாயைப் பற்றி நடேசன் இதற்குமுன்கேட்டிருக்கவில்லை. "இரவும் பகலும் அறைக்குள்ளேயே இருக்கும் அற்புதமான வாழ்க்கையில் ஈடுபடுகிற தனது மகளாகிய மாதினியோடு நான் காதலில் விழுந்துவிடுவதைப் பார்க்க ஆசைப்பட்டே இப்படிச் செய்கிறாள்'' என்று நடேசன் நினைத்தான்- சந்தேகித்தான் எப்படியானாலும் இந்த அருமையான சந்தர்ப்பம் பகவான் அவன் மேற் காட்டிய கருணையும் அவர் கொடுத்த வரமுமே என்று அவன்எண்ணினான். அப்படி நினைத்த அவன் சாடை சாடையாக வீட்டுக்குள்ளே நுழைந்தான். இப்பொழுது வீட்டுக்குள் அவர்கள் இருவரையும் தவிர வேறு எவரும் இல்லாதபடியால் பயதுக்கும் காரணம் ஒன்றுமே இல்லை. என்றும் மூடப்பட்டிருக்கும் குறிப்பிட்ட அறையின் அருகே போனான் நடேசன் முதன்முதலாக அந்த அறையின் கதவை மிருதுவாகத் தட்டினான். மாதினியின் உடம்பு இதிலும் பார்க்க மிருதுவாகத் தான் இருக்கும் என்று நினைத்துமகிழ்ந்தான். தனது கன்னத்தை கதவின் மேல் சிறிது நேரம்வைத்துக் கொண்டிருந்தான். பிறகு மாதினி என்று மெல்லிய குரலிற் கூப்பிட்டான். மறுபடியும் கூப்பிட்டான். மீண்டும் மீண்டும் கூப்பிட்டான். உரத்த குரலில் சினத்தோடு கூப்பிட்டான்.

"கடவுளே, இவள் ஒரு செவிடியா?'' என்று மேலும் சத்தத்தோடு கூவினான். அறையிலிருந்து எதுவித சத்தமும் கேட்கவில்லை. கதவில் பலத்துடன் அடித்துப் பார்த்தான். ஆயினும் பதில் ஒன்றும் இல்லை.

"மாதினி நீ எனக்குப் பயமா? நானும் உன்னைப் போல அழகான மனிதன்! கண்மணியே, மாதினி! உங்களைக்காணப்பெரும் ஆசைப் படுகிறேன். பெண்ணே கதவைக் கொஞ்சம் திற.''

அவன் எதைச் சொன்னாலும்உள்ளேநிசப்தம். அவன் மீண்டும்பலத்துடன் கதவை அடித்துப் பார்த்தான். பதில் இல்லை. எதுவித சத்தமும் இல்லை. மீண்டும் அடித்தான் அவனுடைய கை சிவந்தது.

திருமதி பார்வதிஅம்மாள் உள்ளே நுழையும்போது நடேசன் அறைக்கதவை பிடித்துக்கொண்டு அதை அடித்துக்கொண்டிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டாள்-உள் மனதில் சிரித்தாள்.

"நடேசா, நடேசா. இதென்ன விபரீதம்!'' என்றாள் திருமதி பார்வதி அம்மாள். நினைவு வந்த நடேசன் வெட்கப்பட்டான். அவன் உடனே அருமையான ஒரு பொய்யை முடைந்து சொன்னான்.

"திருமதி பார்வதிஅம்மா முகங்கழுவுவதற்கு நான் இவ்வழியாக வெளியேபோகும்போது இவ்வறையிலிருந்து ஒரு பயங்கரமான சத்தம் கேட்டேன்'' என்றான் நடேசன்.

"இவ்வறையிலிருந்தா? ''

"ஓம்''

"முடியாது''

"பார்ப்போம்'' என்றும் சொல்லி திறப்பை எடுத்து அறையை திறந்து பார்ப்பதற்கு ஆயத்தமாகிவிட்டாள் திருமதி பார்வதி அம்மாள்.

நடேசனுடைய ஆனந்தம் பொங்கிவிட்டது. இன்னும் சில விநாடிகளில் தான் மாதினியைக் காணமுடியும் என்ற நோக்கம் தோன்றிய படியால் நடேசன் ஆனந்த சாகரத்தில் மூழ்கினான். திருமதி பார்வதிஅம்மாள் கதவைத் திறந்துவிட்டாள்.

அறைக்குள்ளேயிருந்தது காரிருள் மாத்திரமே. நடேசனுடைய தலை சுழல ஆரம்பித்தது. திருமதி பார்வதி அம்மாள் உள்ளேயிருந்த சுவிச்சைப்போட்டாள். அது ஒரு பொருளறை. (ஸ்டோர் ரூம்) பழைய அலுமாரி ஒன்றும் சில பெட்டிகளும் அங்கே இருந்தன. மாதினி இல்லை.

"மாதினி எங்கே?'' என்று கேட்டான் நடேசன். திருமதி பார்வதி அம்மாவின் அசட்டுச் சிரிப்புமட்டுமே இக்கேள்விக்குப் பதிலாயிற்று.

"மாதினி எங்கே? திருமதி அம்மாள் எனக்குப்பொய் சொல்லியிருக்கிறாள்.''

"நீ ஏன் அதைநம்பினாய்?''

"அப்படியானால் இரவில் யார் பியானோ வாசித்தது.''

"நான்.''

"மாதினிக்காகத்தான் நான் இங்கே தங்கினேன். இல்லாவிடில்இந்தப்பாழான இடத்தில் நான் ஒரு நிமிடங்கூட இருக்கமாட்டேன்.'

"சீ சீ பேராசை, பெண்ணாசை,''-திருமதி பார்வதி அம்மாள் மறுபடியும் சிரித்தாள்.

தன் அறைக்குள்ளே உடனே புகுந்த நடேசன் தனது சாமான்களை 'சூட்கேஸ்' ஒன்றில் அடுக்கிக் கொண்டு திருமதி பார்வதி அம்மாவுக்குச் சொல்லாமல் வெளியே போனான். தான் கொடுத்திருந்த முற்பணத்தையும்கேட்காமல்வேறொரு விடுதியைத் தேடிப்போனான் நடேசன்.

திருமதி பார்வதி அம்மாள் மீண்டும் "டு லெட்'' பலகையை சுவரின்மேல் தொங்கவைத்தாள்.

(யாவும் கற்பனை)

— டி. டி. நாணயக்காரா —

# ஜப்பானில் தைப் பொங்கல்

காட்டிலும் மலையிலும் காய்கனிகளைப் பிடுங்கித் தின்று காட்டு மிருகங்களை வேட்டையாட வேண்டி ஓயாமல் உறங்காமல் ஓரிடத்தில் தங்கி நில்லாமல் இரவு பகலாய் அலைந்து திரிந்த வாழ்க்கை மாறி ஒரேயிடத்தில் அமைதியாக குடிசைகளைக் கட்டிக்கொண்டு நிம்மதியான வாழ்க்கை நடத்த ஏதுவாயிருந்தது. ஒரு தானியத்தை நிலத்தில் போட்டால் அது முளைவிட்டு வளர்ந்து பல தானியங்களைத் தரும் என்ற கண்டுபிடிப்பே, மந்தை மந்தையாக அலைக்கழிந்த மனிதன் இந்த இரகசியத்தை தெரிந்து கொண்டதுதான், அவனுடைய பூவுலக வரலாற்றில் ஏற்பட்ட முதலாவது பெரிய புரட்சி. இதன் விளைவாகவே அவன் கூட்டம் கூட்டமாக வாழத்தொடங்கி சமுதாயங்களையும் ஊர்களையும் நிர்மாணித்தான். ஒழுங்கான நிலையான நிம்மதியான வாழ்க்கையை அவனுக்கு தந்தது விவசாயமே.

தான் வாழும் குடிசைக்குப் பக்கத்திலுள்ள வெற்று நிலப்பரப்பில் தானியங்களை விதைத்துவிட்டு வளர்ந்த பயிர்களை காட்டு மிருகங்கள் அழிக்காமல் பாதுகாத்து வரம்புகளைக்கட்டி நீரைத் தேக்கி, கொத்துக் கொத்தாகக் கனிந்து பொன்னிறத் தானிய மணிகளைக் கையாரக் கொய்தபோது அவற்றை ஈந்தவர்களுக்கு மனமார நன்றி செலுத்த வேண்டுமென்று அவனுடைய உள்ளம் பொங்கியது; மழையையும் காற்றையும் வெய்யிலையும் தந்து தனது பயிரை வளர்த்த சூரிய தெய்வத்துக்கு பலியும் படையலும் வழங்கிக் கொண்டாடினான்.

நாகரிக முதிர்ச்சியடைந்த எல்லா சமுதாயங்களிலும் இந்த உழவன்விழா பண்டைக்காலம் தொட்டு நடந்து வந்திருக்கிறது அந்தந்த நாட்டின் சீதோஷ்ண நிலைமைக்கேற்ப தானியம் முற்றி அறுவடையாகும் சமயத்தில் இந்த நன்றியறிதல் வைபவம் நடக்கும்.

ஜப்பான்தேசத்தில் பொதுவாக ஒக்டோபர் மாதத்திலேயே நெல் அறுவடை முடிந்து விடுமாதலால் அம்மாதம் பத்தாந் திகதியளவில் உழவர்விழா நடக்கும். எம்மைப் போலவே ஜப்பானியருக்கும் பிரதான உணவு அரிச்சோறு. அறுவடை முடிந்தவுடனே நெல்லைக் குற்றித் தீட்டி, அவரைப்பர்ணியும் கலந்து புற்கை பொங்கி கமக்கடவுளுக்கு நைவேத்தியம் செய்து தாமும் உண்டு மகிழ்வார்கள். இப் பண்டிகைக்கு 'துக்கன்-யா' என்று பெயர். சில இடங்களில் செப்டம்பர் மாதத்திலேயே இவ்விழா முடிந்து விடும்.

இஷிக்காவா என்ற ஜப்பானிய தீவில் சுமார் 30 40 அடி உயரமான சிவப்பு நிறத் துணியாலான கொடிகளை அயல் கிராமத்தவர்கள் பலர் ஒன்றுகூடித் தூக்கிக் கொண்டு மேளதாளங்களுடன் ஊர்வலம் வருவார்கள். இக் கொடிகளை அடிக்கடி நில மட்டத்திற்கு சாய்த்துப் பின்னர் மேலே உயரத்தூக்குவார்கள். தானியம் நிறைந்த நெற்பயிர்கள் காற்றில் நிலத்தோடு சாய்வதையும் பின் ஓங்கி உயர்வதையும் இது குறிக்கிறது.

சில தீவுகளில் ஜப்பானிய கமக்காரர் தமது உழைப்புக்கு உதவியாக வயல்களில் நின்று பறவைகளை விரட்டிய வெருளிகளையும் மறப்பதில்லை. மனித உருவத்தில் செய்யப்பட்ட இந்த வெருளிகளுக்கும் அறுவடை விழாவின்போது படையலிடப்படும்.

ஏழாம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட 'நீரு மேஸாய்' என்ற பண்டிகை இன்று வரை நவம்பர் 23-ந் திகதியில் கொண்டாடப்படுகிறது. இதுவும் ஓர் உழவர் விழாவே.

ஜப்பானிய சக்கரவர்த்தியே இந்த விழாவை தமது அரண்மனையிலும் கொண்டாடுவார். புது அரிசியைப் பொங்கி அத்துடன் ஜப்பானியரின் பிரபலமான 'ஸேக்' என்றழைக்கப்படும். மதுபானத்தையும் தெய்வங்களுக்கு படையல் செய்வர். ஷின்ரோ ஆலயங்கள் எல்லாவற்றிலும் இப் பண்டிகை கொண்டாடப்படும். 1948-ம் ஆண்டு தொடக்கம் நவம்பர் 23-ந் திகதி 'தொழிலாளர் நன்றியறிதல்' தினமாகக் கருதப்பட்டு கொண்டாடப்படுகிறது.

தமிழருக்கு எவ்விதம் தைப்பொங்கல் முக்கியமான பண்டிகையோ அது போல ஜப்பானியருக்கும் இந்த உழவர் விழாவே மிகவும் பிரதானமான பண்டிகையாகும்.

— வி. என். பி —

வட்டியுடன் இனாம்!

ரூபா 500/- ஐஞ்ஞூறுக்கு

வருடம் 7 சதவீத வட்டியுடன்
ஏழு நாள் அறிவித்தலில்
எப்பொழுதும் எடுக்கலாம்

ஒவ்வொரு மாதமும்
அதிட்டமுள்ள ஒருவருக்கு

ரூபா 25/- இருபத்தைந்து

இனாமாகக் கொடுக்கப்படும்

மறு விபரங்களுக்கு:

தம்பி அன் கோ.,

வண்ணார்பண்ணை

# பஞ்சாமிர்தம்

## செட்டியாரின் சரக்கு

வெங்காயஞ் சுக்கானால் வெந்தயத்தா லாவதென்ன
இங்கார் சுமந்திருப்பா ரிச்சரக்கை — மங்காத
சீரகத்தைத் தந்திரேல் தேடேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டியாரே!

— சொக்கநாதப் புலவர்

(வெம்காயம் - கொடியசரீரம், சுக்கானால் - சுக்குப் போல உலர்ந்தால், வெந்தை அத்தால் - வெப்பமாகிய அவ்வினையால், சீர் அகம் - சிறந்தவீடு, பெருங்காயம் - பல சரீரம், ஏரகத்துச் செட்டியார் - திருவேரகத்திலுள்ள முருகன்).

## அவர் எழுதிய தமிழ்

துவாரக யுகத்து பெர்னர்ட் ஷா என்று பெயர் பெற்ற புரொபஸர் வேதவியாசர் மொத்தம் மூன்றரைக்கோடி வார்த்தைகளைக்கொண்ட பதினெட்டுப் புராணங்களை இயற்றினாரல்லவா? அந்தப் பதினெட்டுப் புராணங்களையும் நைமிசாரண்ய வனத்தில் சூத புராணிகர் சௌனகாதி முனிவர்களுக்கு எடுத்துச் சொன்னாரல்லவா? அவ்வளவையும் கேட்டுவிட்டு அம்முனிவர்கள், ''அடாடா, பதினெட்டுப் புராணத்துக்குப்பிறகு பத்தொன்பதாவது புராணம் இல்லாமற் போய்விட்டதே! இனிமேல் நாங்கள் எதைக்கேட்டுக் கொண்டு தூங்குவோம்?'' என்று புலம்பினார்கள். அதற்குச் சூதர், 'முனிவர்களே! கவலை வேண்டாம். பத்தொன்பதாவது புராணமாகிய கலிபுராணம் ஒன்று இருக்கிறது. அதைக் கேட்டுக்கொண்டே நிம்மதியாகத் தூங்குங்கள்'' என்று சொல்லி, கமண்டலத்திலிருந்து ஒரு அவுன்ஸ் தண்ணீர் ஆசமனம்செய்துவிட்டு, பத்தொன்பதாவது புராணத்தைத் தொடங்கினார்.

அவ்வளவு பெருமைவாய்ந்த கலிபுராணத்தில் நாட்டுப் படலத்துக்கும் நகரப்படலத்துக்கும் அடுத்தபடியாக வீட்டுப்படலம் வருகிறது. வீடு தேடும் படலம் என்றும் சொல்லலாம், அல்லது ஒன்றும் சொல்லாமல் வாயை மூடிக்கொண்டும் இருக்கலாம். எனினும் கடமையைச் செய்யுங்கள்', 'கடமையைத் தானே செய்யுங்கள்', 'கடமையைக் கட்டாயஞ் செய்யுங்கள்' என்று பகவத்கீதையில் பேராசிரியர் கிருஷ்ண பகவான் முக்காலேமூன்று வாட்டியும் கதறியிருப்பதை முன்னிட்டு இங்கே நாம் எம் கடமையைச் செய்யத் தொடங்குகிறோம்,

— 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி

## தீர்க்க தரிசனம்

1907-ம் ஆண்டு கனடாவிலுள்ள கொம்பனி ஒன்று இங்கிலாந்திலிருந்து 1908-ம் ஆண்டுக்குரிய கலண்டர்களை 'ஓடர்' செய்திருந்தது. கப்பல் பிந்தியதாலும், துறைமுகத்திலிருந்து கலண்டர்களை ஏற்றிவந்த ரயில் தடம்புரண்டதாலும், ரயில்வே ஸ்டேசனிலிருந்து அவற்றைக் கொண்டுவந்த குதிரைவண்டி ஒரு லொறியைக்கண்டு வெருண்டு பாதையைவிட்டு பரதேசம் போனதாலும், கலண்டர்கள் 1908-ம் ஆண்டு மார்ச் மாதத்திலேயே கொம்பனிக்கு வந்து சேர்ந்தமையாலும், அவை பிரயோசனமற்றுவிட்டன. ஆனால் கொம்பனிமுதலாளி, சில ஆராய்ச்சிகள் செய்துவிட்டு, கலண்டர்களை ஒரு அலுமாரியில் பூட்டி, '1963 நவம்பர்வரை திறக்கப்படாது' என்று கதவில் எழுதி முத்திரை வைத்துவிட்டார். 1964-ம் வருடம் கலண்டர்கள் வாடிக்கையாளருக்கு விநியோகம் செய்யப்பட்டன. 1908-ம் ஆண்டு, மாதம், திகதி, கிழமை, எல்லாவற்றிலும் 1964-ம் ஆண்டை ஒத்திருந்ததை அந்தக்கெட்டிக்கார முதலாளி கண்டுபிடித்துவிட்டார்!

## 'உண்மை விளம்பேல்'

அமெரிக்க ஜனாதிபதியாயிருப்பது சொகுசான ஓர் உத்தியோகம். அடிப்படைச் சம்பளம் வருடத்தில் ஒரு லட்சம் டாலர். படிகள் பலவேறு. வெண்மாளிகைக்கு வாடகையில்லை வேலைக்காரச் சிப்பந்திகள், கார்கள் எல்லாம் சும்மா. விமானங்கள் கப்பல்கள் எல்லாம் இனாம். பெரிய பிரபுக்கள் அடிக்கடி விருந்துக்கு அழைப்பார்கள், இப்படி எல்லாம் இருந்தும் அப்பதவிக்குப் போட்டிபோடுபவர் இந்த உண்மைகளை வெளிவிடாமல், தாம் அதை விரும்பவேயில்லை என்பதாக எப்பொழுதும் மூஞ்சியை நீட்டிவைத்துக்கொள்ள வேண்டும், தியோடோர ரூஸ்வெல்ட் என்ற ஜனாதிபதி இந்த உண்மையை மறந்துவிட்டு, 'இந்த உத்தியோகம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது' என்று பகிரங்கமாகக் கூறிவிட்டார். அடுத்த தேர்தலில் அவர் தோல்வி!

## 'என்ன அதற்குள்ளாகவா?'

லண்டன் நகரின் மீது ஜெர்மன் குண்டுகள் சொரிந்துகொண்டிருந்தன ஆண்களும் பெண்களும் நெருக்கடியடித்து பாதாளப் பாதுகாப்பு அறைக்குள் தஞ்சம் புகுந்தனர். சில நிமிடங்கள் கழித்து ஒருசிவில் பாதுகாப்பு அதிகாரி அறையின் வாசலுக்கு வந்து, 'இங்கே கர்ப்பிணிகள் யாராவது இருக்கிறார்களா?' என்று கேட்டார். கொஞ்சநேர மௌனம். பின்பு,

'நாங்கள் வந்து பத்து நிமிடம்தான் ஆகிறது' என்றது ஒரு மெல்லிய பெண்குரல்!

— தயாரிப்பு: வழிப்போக்கன்

# கோடிக்கணக்கான மக்களின் எதிர்காலத்தை பயமுறுத்தும் சிறுதீவு

இந்துமா சமுத்திரத்தில் பிரிட்டனின் ஆதரவுடன் அமெரிக்கா ராணுவத்தளம் அமைக்கவிருக்கும் தீவில் 300 பேர்தான் குடியிருக்கிறார்கள். ஆனால் இச்சிறிய தீவு இப்பிரதேசத்தில் வாழும் கோடிக்கணக்கான மக்களின் எதிர்காலத்தைப் பயமுறுத்துவதாக இருக்கும் என்கிறார் இக் கட்டுரையாளர்.

- ஏ. கோரோலியோவ் -

இந்து மகா சமுத்திரத்தில் இருக்கும் டியகோகார்சியா என்ற சிறிய தீவு இப்பொழுது பத்திரிகைத்தலைப்புகளில அடிக்கடி காணப்படுகிறது. இந்தத் தீவில் 300 பேர் தான் குடியிருக்கின்றனர். ஆனால் இதன் எதிர்காலம் கோடிக்கணக்கான ஆசிய மக்களுக்குக் கவலை தருவதாக உள்ளது.

இது ஒரு பிரிட்டிஷ் காலனியாகும் இதில் பிரிட்டனும் அமெரிக்காவும் கூட்டு ராணுவ தளம் ஒன்றைக் கட்டுவதற்குத் திட்டமிடுகின்றன; இது ஒரு பெரிய தளமாக இருக்கும், போலாரிஸ் ஏவுகணைகளுடன் கூடிய அமெரிக்க அணுஆயுத நீர்மூழ்கிகள் தங்குவதற்கு ஏற்ற இடமாக இருக்கும். இந்தத் திட்டத்தைப் பற்றி பிரிட்டிஷ், அமெரிக்க ஆளும் வட்டாரங்கள் நெடுங்காலமாக மௌனம் சாதித்து வந்தன. லண்டனில் நவம்பர் 18-ல் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் ''டியகோ-கார்சியாவில் ராணுவ தளம் நிறுவும் திட்டத்தைப் பற்றி ஒருசில வார்த்தைகள் கூறுங்கள்'' என்று பிரிட்டிஷ் பாதுகாப்புச் செயலாளர் காரிங்டன் பிரபுவிடம் பத்திரிகையாளர்கள் கேட்டபொழுது, ''இவையெல்லாம் பத்திரிகைக்காரர்களின் யூகங்கள்'' என்று அவர் சீறினார்.

அதற்கு மூன்று வாரங்களுக்குப் பிறகு ''பத்திரிகைக்காரர்களின் யூகங்களை'' அமெரிக்க அரசாங்கம் நேரிடையாக ஊர்ஜிதம் செய்து விட்டது. டியகோ-கார்சியா என்ற பவளத் தீவில் ஒரு தகவல் கேந்திரத்தையும், ராணுவ விமான தளத்தையும், நங்கூரம் பாய்ச்சும் இடத்தையும் கட்டுவதற்கு நிதிஉதவுமாறு அமெரிக்க அரசாங்கம் அமெரிக்க காங்கிரஸைக் கேட்டுள்ளது. என்று வாஷிங்டன் டெய்லி நியூஸ் டிசம்பர் 7-ல் செய்தி வெளியிட்டது.

எனவே, மர்மம் விளங்கிவிட்டது: பல வருடங்களுக்கு முன்பு தீட்டிய அபாய கரமான திட்டத்தை அமெரிக்காவும் பிரிட்டனும் நிறைவேற்றப் போகின்றன என்பதில் ஐயமில்லை. இந்து மகா சமுத்திரத்திலுள்ள டியகோ - கார்சியாவையும் இதர தீவுகளையும் கூட்டாகப் பயன்படுத்துவது சம்பந்தமாக, பிரிட்டிஷ், அமெரிக்க ஆளும் வட்டாரங்கள் 1966-ல் ஓர் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டன. ''பாதுகாப்பு நோக்கங்களுக்காக'' இத்தீவைப் பயன்படுத்த வேண்டும் என்று அவை தீர்மானித்தன. இத்தகைய இரகசிய ஒப்பந்தம் இருப்பதை பிரிட்டிஷ் அயல்துறை அதிகாரி ஒருவர் அண்மையில் ஊர்ஜிதம்செய்தார்.

டியகோ-கார்சியா எவ்வாறு பயன்படுத்தப்படும் இப்போது தெளிவாகி விட்டது. அமெரிக்க உளவுக் கோள்களுடன் கூடிய தகவல் கேந்திரம் ஒன்றும் அமெரிக்கப் போர் விமானங்களுக்கான தளம் ஒன்றும் இத் தீவில் நிறுவப்படும் என்று மேலைப் பத்திரிகைகள் கூறுகின்றன, இந்தத் தீவின் ஆழமான பகுதி மிகப் பெரிய கப்பல் தளமாக மாற்றப்படும். அமெரிக்காவின் ஏழாவது கடற்படையின் தேவைகளுக்கு இத் தளத்தைப் பயன்படுத்த வேண்டும் என அமெரிக்க ராணுவ நிபுணர்கள் முடிவு செய்துள்ளனர் என்றும், வியட்நாம் போர் முடிந்த பிறகு அமெரிக்காவின் ஏழாவது கடற்படை படிப்படியாக இந்து மகாசமுத்திரத்திற்கு மாற்றப்படும் என்றும், 'வாஷிங்டன் டெய்லி நியூஸ்' கூறுகிறது. டியகோ-கார்சியாவில் ராணுவத் தளம் கட்டுவதற்கு மிகச் செலவாகும். ஆயினும் இதற்காக 40 இலட்சம் டொலர்களை ஒதுக்கத்தயார் என்று அமெரிக்கா பிரிட்டனிடம் கூறியுள்ளது: ஆனால் இந்தத் தீவைப் பயன்படுத்துவதற்குத் தனக்கும் உரிமை வேண்டும் என்று அது வலியுறுத்தியுள்ளது.

டியகோ-கார்சியா தீவைப் பயன்படுத்துவது சம்பந்தமாகப் பிரிட்டனும், அமெரிக்காவும் தீட்டியுள்ள நடைமுறைத் திட்டம் இதுதான்'

# முத்தான மொழிகள் சில

கோயிலில் மூன்று நாட்கள் விரதம் இருப்பதிலும் ஒரு நற்காரியம் செய்வதுமேல்.
— ஜப்பானிய மொழி.

உன் நம்பிக்கையைப் பணத்தின் மீது வைக்காதே. பணத்தை நம்பிக்கையான இடத்தில் வை.
— ஹோம்ஸ்

ஞானத்தின் மூத்த குழந்தைக்குப் பெயர் எச்சரிக்கை.
—விக்டர் ஹியூகோ

ஆணுக்கு உலகமெல்லாம் வீடு. பெண்ணுக்கு வீடுதான் உலகம். கோயிலுக்கு வெளியே வந்து விழுந்துவிட்டால் தெய்வமும் கல்லாகிவிடும்.
— காண்டேகர்

தான் கூவுவதைக் கேட்பதற்காகவே சூரியன் உதிக்கிறான் என்று கோழி நினைக்குமானால் அது தான் அகந்தை.
— ஜோர்ஜ் எலியட்

மணம் செய்வதா? செய்யாமல் இருப்பதா? எது செய்தாலும் 'ஏன் செய்தோம்' என்று வருந்துவாய்.
—சோக்கிறட்டீஸ்

தன்னையே புகழ்ந்து கொள்பவன் ஒரு முட்டாள். தன்னையே இகழ்ந்து கொள்பவன் ஒரு பைத்தியக்காரன்.
—டென்மார்க்மொழி

உலகம் பிளவுபட்டிருப்பதைவிட ஒன்றுபட்டிருப்பது நல்லது. உலகம் அழிந்து போவதைவிடப் பிளவுபட்டிருப்பது அதிலும் சிறந்தது.
— சர்ச்சில்

மனிதரை நம்பினோர் ஒருகால் காலைவாரிவிடப்படலாம். கடவுளை நம்பினோர் எக்காலமும் காப்பாற்றப்படுவார்கள்.
—இத்தாலியமொழி

ஊர் முழுவதும் எதிர்த்தாலும் உரைக்க வேண்டியதை உரைக்க அஞ்சாதவனே உத்தமமான மனோதைரியமுள்ளவன்.
—லோங்வெலோ

மனிதகுலம் நம்மை வெறுப்பதைத் தாங்கலாம். ஆனால், குழந்தைகள் நம்மை வெறுப்பதைத் தாங்கமுடியாது.
—ஆங்கிலமொழி

தருபவர்: புலோலித்தம்பி

# இந்தப் 'பறவைகள்' புதுவிதம்

## புதுமை செய்ய முயன்றிருக்கின்றார் டைரக்டர்!!



புத்தாண்டின் புதுநாடகமாகவும், கொழும்பில் முதல் தமிழ் நாடகமாகவும் 'லிட்டில் ஸ்ரேஜ்ஜினர்' அளித்த 'பறவைகள்' ஹவ்லொக் டவுன் லும்பினி மண்டபத்தில் மேடையேறியது.

காதல் என்ற புனிதமான வார்த்தையின் பொருளைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் நடந்துகொண்டதனால் ஏற்படும் விளைவுகளைச் சித்தரிப்பதே இந் நாடகத்தின் கதை. சாந்தி, லலி, ராதா என்ற மூன்று உயிர்த் தோழிகளையும் அவர்களோடு நட்பாக இருக்கும் சுந்தரராஜன் என்ற வாலிபனையும் சுற்றிச் சுழலுகின்றது. மூன்று தோழிகளும் ஒருவர் மற்றொருவருக்குத் தெரியாமல் அவ்வாலிபனைச் சந்திப்பது மட்டுமன்றி அவனைக் காதலிக்கவும் செய்கின்றனர். இறுதியாக நால்வரும் ஒரே இடத்தில் சந்திக்கும்போதுதான் தாங்கள் மூவரும் ஒருவனிடமே ஏமாந்து விட்டதை அறிந்து கொதித்தெழுகின்றனர். முடிவில் அவன் எவரையாவது காதலிக்கவில்லையென்பதையும், புனிதமான நட்பின் பேராலேயே தங்களோடு அவன் பழகினனென்பதையும் புரிந்து கொள்கின்றனர்.

'பறவைகள்' நாடகத்தின் கதையமைப்பு, நடைச் சிறப்பு ஆகியன போற்றுதற்குரியவை. கடைசி வரையில் ஆவலைத் தூண்டும் பண்பை (சஸ்பென்ஸ்) வெளிப்படுத்தாமலிருந்ததமையும் இந் நாடகத்தின் வெற்றிக்கு ஒரு காரணமாகும். இந் நாடகத்தின் கதை வசனத்தை எழுதியதன் மூலம் நாடக உலகிற்குப் புதியவராக அறிமுகமாகும் போல் கிறீஸ்டி பாராட்டப்பட வேண்டியவரே!

இந்நாடகத்தின் மூலம் புதிய பறவையாக நாடக உலகிற்கு அறிமுகமாகும் ஜோதீஸ்வரி ஒரு கல்லூரி மாணவி என்பதை அறியும் போது அதிசயமாகத்தான் இருக்கின்றது. நடிகையர்கள் பஞ்சமுள்ள இந்நாளில் கல்லூரி மாணவியொருத்தி துணிந்து நடிக்க முன்வந்தாரென்றால் அவரைப் போற்றத்தானே வேண்டும். நர்ஸ் பாத்திரத்தில் தோன்றிய இவர் தனது அடக்கமான நடிப்பினால் ரசிகர்களைக் கவர்ந்து கொண்டார்.

பள்ளி ஆசிரியை சாந்தியாகத் தோன்றிய தேவகுமாரியும் நன்றாகவே நடித்தார். ஆரம்பத்தில் கதாநாயகனைச் சந்தித்து உரையாடியபோதும், கடைசிக் காட்சியில் அவன் தங்களை ஏமாற்றி விட்டதனால் ஆத்திரங்கொண்டு அவனை ஏசும் கட்டத்திலும் மிகச் சிறப்பாக நடித்தார்.

'சோஷல்' பெண்ணான லலி பாத்திரம் ரசிகர்களைப் பெருமளவில் திருப்திப்படுத்தியது. இவ்வளவு நாளும் சோகத்திற்கு ஒரு நடிகை எனப் பாராட்டப்பட்டுக் கொண்டிருந்த செல்வி ஜெயா லலி பாத்திரத்தை ஏற்றிருந்தார். சென்ற ஆண்டில் பல நாடகங்களில் சிறப்பாக நடித்ததனால் முன்னணி நடிகையாகத் திகழ்ந்த இவர், இந் நாடகத்தின் மூலம் இவ்வருடமும் நான்தான் முன்னணியில் ஜொலிப்பேன் எனக் கூறாமற் கூறுகின்றாரோ!

ஆண் பறவையாக ஸ்ரீசங்கர் தோன்றினார்.

ஒளியமைப்பு சமீபகால தமிழ் நாடகங்களிலும் பார்க்க, இந் நாடகத்தில் மிகச் சிறப்பாகக் கையாளப்பட்டிருந்தது. சிங்கள நாடக-திரைப்பட நடிகரான 'பியதாச பண்டாரநாயகா'வை இதற்காக நிச்சயம் பாராட்டத்தான் வேண்டும், தமிழ் நாடகமொன்றிற்கு சிங்களக் கலைஞர் ஒருவர் கைகொடுத்து உதவியது போற்றுதற்குரியது.

அந்தனி ஜீவா இந்நாடகத்தை நெறிப்படுத்தியிருந்தார். பிரச்னைக்குரிய 'முள்ளில் ரோஜா'வை மேடையேற்றியவர். புதுமை செய்ய முயன்றிருக்கிறார். மூன்று பெண்களையும், ஓர் ஆணையும் வைத்துக்கொண்டு நாடகத்தை விறுவிறுப்பாக்கியிருக்கும் இவரைப் பாராட்டலாம்.

வலிவை. ஆ. தங்கன்




கூட்டுறவுப் பரிசளிப்புவிழாவில்

# நினைவில் நிலைத்த நாட்டிய நிகழ்ச்சிகள்

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் 33வது வருடாந்தக்கூட்டுறவு மகாநாட்டையொட்டி கடந்த 26-ந் திகதி இரவு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் முதலாவதாக நடைபெற்ற யாழ்ப்பாணம் கலை மன்றத்தினரின் பரதநாட்டியமே இரசிக உள்ளங்களை ஆடவைத்தது. இவ் விழாவையொட்டி நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்க பாரியாருடன் உள்நாட்டு. வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்ன வருகை புரிந்தார். இடைவேளையில் அமைச்சர் பேசுகையில், "பரதநாட்டியம் உலக ஸ்தானத்தில் எந்தக்கலைக்கும் ஈடுகொடுக்கவல்லதரத்தில் மிகவும் உயர்ந்த கலை" என்று கூறினார்.

பரதநாட்டியம் சசிகலா திருநாவுக்கரசு, சாந்தா வேலாயுதம் ஆகியோரின் அலாரிப்புடன் ஆரம்பமானது. "ஆனந்த நடமிடும்" என்ற பாடலுக்கு உமையாள் இரத்தினசிங்கம் தனது அபிநயத்தாலும் ஆடல்ஒயிலாலும் ஆடவல்லானின் ஆடற்தோற்றத்தை எம்முன்னே தோன்றச் செய்து ஆடவல்லாளாகத் திகழ்ந்தார். நளாயினி செல்வராசா, ஜானகி குமாரசாமி ஆகியோரின் தில்லானாவுக்கு ரசிகர்களிடமிருந்து கரகோஷம் கிடைத்தது. லயம் பிசகாது பண்ணுடன் ஆடினர்.

'திக்குத்தெரியாத' என்ற பாடலுக்கு அபிநயம்பிடித்த கௌரி நாகலிங்கம், நளாயினி செல்வராசா ஆகியோர் பாரதியாரின் கவிச்சித்திரத்தை எம்முன்னே கொண்டுவந்தனர். இதையடுத்து ஜானகி குமாரசாமி பாம்பு நடனம் ஆடினார்.


அடுத்து சதங்கை நர்த்தனாலயத்தினர் அளித்தநடன நிகழ்ச்சியில் நாட்டியக் கலாபமயில் லீலா நாராயணன் பிடித்தபதமும், அரஸ்கோ சகோதரிகள் ஆடிய மயில்நடனமும் ரசிகர்களை மிகவும் கவர்ந்தன. "பட்டுச்சிறகடித்து" என்ற 'தேஷ்' இராகப் பாடலுக்கு நாட்டியக்கலாபமயில் உணர்ச்சி பாவம் ததும்ப அழகாக அபிநயம் பிடித்தார். திரு. எம். ஏ சந்திரசேகரன் உணர்ச்சியுடன் இனிமையாக இப்பாடலைப் பாடினார்.

மயில் நடனம் ஆடிய அரஸ்கோ சகோதரிகள் இரு வண்ண மயில்கள் என்று வர்ணிக்கும்படி அழகாக ஆடினார்கள்.

— எழில்வண்ணன்

## ரஷ்ய 'ஷொல் பொன்' நடனம்

பெண் உயர்ந்தவளா? ஆண் உயர்ந்தவனா? என்ற போட்டி நாட்டியக் கலைக்கு இல்லைப் போலும். இருவரின் ஒத்துழைப்பு மின்றி இக்கலை ஒளிராதுதான் "ஷொல் பொன்" என்ற ரஷ்ய பலே நாட்டிய நிகழ்ச்சியில் ஆண் நடனக்காரரின் கையில் உயர்ந்து ஒயிலாக நிற்கிறார் பெண்.



'கொப்பலியா என்ற பலே நாட்டிய நிகழ்ச்சியில் ஒரு கண்கவர் கட்டம்! ரஷ்யாவின் பிரபல பலே நாட்டியக் காரரான ராகேர்சிஞ என்பவரது உன்னத தயாரிப்பு இது!


"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரீ சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்
★ காஸ்மேஸ் (Nylon & Cotton)

லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

# கலைக்கு ஒரு நிலைக்களமாகவு
# எங்கள் குரும்பசிட்டி

ஈழத்து இலக்கியப் பரவையில் எமது கிராமமக்கள் ஆற்றிய — ஆற்றுகின்ற தொண்டு கணிசமான இடம் பெறுகின்றதென்றே கூறவேண்டும். வாசகர்கள் தொகை மிகக்குன்றிய காலத்திலேயே துணிவுடன் 'ஈழகேசரி' என்ற வார வெளியீட்டை நாற்பது ஆண்டுகளுக்குமுன் ஆரம்பித்து இருபத்தைந்தாண்டுகள் தொடர்ந்து நடத்தியது நமது கிராமத்து இலக்கிய மூச்சுத்தான். ஆற்றல் வாய்ந்த எமது கிராமத்து அச்சுக்கலை வல்லுநர்களும் தமிழ் ஆசிரியர்களும் மறைமுகமாக இத்தொண்டுக்கு உறுதுணையாய் இருந்தனர். இப்பத்திரிகை ஈழத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் இலக்கியப் பாலமாக அமைந்திருந்தது

கேயே பாடநூல்கள் எழுதப்படல் வேண்டும். அவைகளை எங்கும் பரப்புதல் வேண்டும் என்ற எண்ணம் முளைவிட்டதும் குரும்பசிட்டியில்தான். எமது ஊரவரின் உடைமையான சுன்னாகம் திருமகள் அழுத்தகம் எண்பத்தைந்துக்கு மேலான பாட நூல்களை ஈழமெங்கும் பரவவிட்டுக் கல்வித் தொண்டு புரிந்தது. நமது கிராமத்து நல்லாசிரியர்கள் பலரின் ஆற்றல் இந்நூல்கள் மூலம் பல இடத்தும் பரவச் செய்தன. தொல்

## எங்கள் கிராமம் – 7

இதன் காரணமாக இருபத்தைந்து ஆண்டுகள் வரை ஈழத்துக்கு விஜயம் செய்த தமிழகத்துப் பிரமுகர்களை இலக்கிய கர்த்தாக்களை விருந்தினராய் வரவேற்ற பெருமையில் பெரும் பங்கு எமது கிராமத்தைச் சாருகிறது. தலைசிறந்த பேரறிஞர் திரு. ஹண்டி. பேரின்பநாயகம் அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'கேசரி' என்ற ஆங்கில வார ஏட்டையும் நம்மவர் பல ஆண்டுகள் நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாடபுத்தகங்கள் யாவும் தென்னகத்து நூல்களாய் இருந்த ஒருகாலம் அது. அந்த நிலையை முறியடித்து நம் நாட்டு மாணவர்கள் நம் நாட்டுச் சூழலில் படிக்கத் தக்கவகையில் இங்

காப்பியம். எழுத்து, சொல் பொருள் அதிகாரங்களை வித்துவ சிரோன்மணி சி. கணேசையர் அவர்களின் சிறந்த அடிக்குறிப்புகளுடன் தமிழகமே வியக்குமளவுக்கு நூலுருப்பெறச் செய்ததும் இந்த நிறுவனமே.

இன்றைய எழுத்தைப் பொறுத்தமட்டில் முன்னணியில் நிற்கும் இரசிகமணி கனக செந்திநாதன், பண்டிதர் வ. நடராசா கவிஞர் வி. கந்தவனம் என்போரும் நம்மவரே. 'வெற்றிமணி' என்னும் சிறுவர்மாத இதழை எட்டு வருடங்களாக வெளியிட்டு வரும் ஸ்தாபனமான சக்தி அச்சகமும் நம்மவர் உடைமையே இதன் ஆசிரியர் திரு. மு.கி. சுப்பிரமணியம் அவர்களும் நமது ஊரவரே. இலக்கிய



ஈழகேசரிப் பொன்னையா அவர்கள்

நூல்களாக ஈழத்து இலக்கிய வளர்ச்சி வெண்சங்கு, 'ஈழம் தந்த கேசரி', பிரபந்தப் பூங்கா, ஏனிந்தப் பெருமூச்சு, கிரிமலையினிலே, இறுதிப்பரிசு, நாடகம் ஓவியக் கலை, சிறுவர் சித்திரம் உட்பட பதினைந்து நூல்களை எமது கிராமத்து எழுத்தாளர்கள் சமீபத்தில் வெளியிட்டுள்ளனர். யாழ். இலக்கிய வட்டமூலம் யாழ். பிராந்தியத்தில் இலக்கிய

விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வரும் அன்பர்கள் பலர் நமது கிராமத்தைச் சேர்ந்தவர்கள், யாழ். இலக்கிய நண்பர் கழக இயக்குநர்களில் ஒருவரும் நம்மவர்தான். கலைக்கழகப் பரிசில்களைத் தட்டிக் கொண்டவர்களும் வானொலி நிகழ்ச்சிகளில் பங்கு கொள்பவர்களும் நம்மத்தியில் உளர். இலக்கியக் கூட்டங்கள் மலிந்த இடமாய் எம் கிராமம் இருப்பதாலிலக்கிய ரசனை பீறிப் பிரவாகிக்கிறது நம்மவர் மத்தியில்.

கலைத்துறையைப் பொறுத்தவரை நாடகக் கலையை நம்மவர் பொன்னெனப் பேணினர். ஐம்பது வருடங்களுக்குமுன் எமது ஊர் அம்பாள் ஆலய முன்றலில் தொடர்ந்து பதினைந்து வாரங்களாகப் 'பொற்கொடியாள்' என்ற நாட்டுக்கூத்தை ஆடினார்கள், ஐந்து ஆறு மைல் சுற்றுவட்டார மக்கள் நாடகம் பார்க்க மொய்த்துவிடுவார்களாம். அந்த நாளில் கூத்து ஆடியவர்களை அவர்கள் நடித்த பாத்திரத்துடன் இணைத்து அழைக்கும் வழக்கம் இன்றும் நம் கிராமத்தில் உண்டு. உக்கிரசேனன் வயித்திலிங்கம். கோமாளி—கந்தையா, காளி குலத்துங்கர் என்றெல்லாம் பலர் உளர்.

நாட்டுக்கூத்து மரபுவந்த கூத்துமுறை மாறி 'டிராமா மோடி' நாடகங்களும் எமது கிராமத்தில் வளர்க்கப்பட்டன. நீண்டகாலமாக எம்மூர் வித்தியாசாலையில் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்த திரு. பொன். பரமானந்த உபாத்தியாயரின் அரவணைப்பில் திரு. சி. கணபதிப்பிள்ளை ஆசிரியர் இதற்கு உயிரூட்டி வந்தார். நவீன நாடகங்களைப் புதிய

உத்தியுடன் நடிப்பித் நடித்த கலைஞர் வே. செல்லையா அவர்கள் கிராமத்தவரே. கலைய டன் அக்காலத்தில் விகட நகைச்சுவை ஞய் இருந்தவர் நமது மத்து விப்டன் சின் துரை அவர்களே! ஹ சியா சின்னத்துரை வும் அழைக்கப்பட்ட கலைக்கழகம் நடாத் அகில இலங்கைப் கூட நாடகப் போட் மகாஜனக் கல்லூரி தடவை முதலிடம் றது. அந்த மன்ற நா களிலும் முக்கிய பாகமே பெரும்புகழ் ஈட்டிய க. கந்தசாமியும் நம்ம கொழும்பில் 'கமலா அமைத்து திருவாள அ. சிவதாசன், இ. ரத்தினம், க. சிவதா என்போர் கலைப்பணி ன்றனர். தாகம், மன் பகையும் பாசமும், ஒளி ந்தது, போன்ற நா களை மேடையிட்ட சு க்க நாடக மன்றத் 'நிறைகுட இரு ந்து தடவைக்குமேல் மான மேடைகளில் நடி பட்டு எமது ஊருக் பெரும்புகழ் தேடித்த ளது. 'இறுதிப்பரிசு' நா இம்மன்ற நாடக நி யாக ஒருமணிவரை வ


# கிருமிப்பீடைகள் ஒன்றும் அணு
# ஒழிந்திட இரு வழிகள்

உங்கள் தாவரங்களைத் தாக்க ஆவலோடு காத்திருக்கின்றன நூற்றுக்கணக்கான புழுக்கள், பூச்
முறியடிக்க முழுநிவாரண, சிக்கனமான, வன்மைமிகு கிருமிநாசினிகள் இரண்டு இன்று நப













என்ட்ரெக்ஸ்'20 – நெல், புகையிலை, காய்கறி பருத்தி ஆகியவற்றைத் தாக்கும் கிருமிப்பீடைகள் முற்றழிப்பிற்கு நம்பகரமானதென நிலையான, வேளாளர் தெரிவு. (1 திரவ அவுன்ஸ் என்ட்ரெக்ஸ் 20 ஐ, 2—4 கலன் நீரில் கலந்து இலைத்தொகுதியில், 3—4 வாரத்திற்கொரு முறை நன்கு தெளிக்கவும்.

அசோட்றின் 60 ஏனைய இரு கிருமிப்பீடைகளின் முற்றழிப் முறை கிருமிநாசினியாகும். ஆகியவற்றைத் தாக்கும் கிரு செய்யப்படுகிறது. (1 திரவ. கலன் நீரில் கலந்து 2–3 வா இலைத்தொகுதியில் நன்கு செ

நெல் புகையிலை, அல்லது காய்கறி விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறீர்களா?
வன்மை மிகு கிருமிநாசினிகள் 'என்ட்ரெக்ஸ' 20 ம், 'அசோட்றின்' 60 ம
கொண்டு அவற்றை ஒழுங்காகத் தெளித்து கிருமிப்பீடைகளுக்கு முற்றழிப்பு அளித்திடுக.

LANKEM

இரசாயன சேவைக்கு மறுசொல் லங்கெம்.

லங்கெம் இலங்

செலிங்கோ ஹவுஸ் த. பெ.

# ...கவுள்ளது
# ...டி

...ன் நடிப்பித்த —
...லைஞர் கே. கே.வி.
...ர அவர்கள் நமது
...வரே. கலையரசவு
...காலத்தில் அகட
...கைச்சுவை மன்ன
...ந்தவர் நமது கிரா
...ப்டன் சின்னத்
...வர்களே! ஹெரோ
...ன்னத்துரை என
...ழைக்கப்பட்டவர்.
...ம் நடாத்திய
...லங்கைப் பள்ளிக்
...கப் போட்டியில்
...க் கல்லூரி மூன்று
...முதலிடம் பெற்
...த ...ன்று நாடகங்
...முக்கிய பாகமேற்று
...கழ் ஈட்டிய திரு.
...ாமியும் நம்மவரே.
...யில் 'கமலாலயம்'
... திருவாளர்கள்
...ாசன், இ. இராச
... க. சிவதாசன்,
...ர் கலைப்பணி புரிகி
... தாகம், மன்னிப்பு
... பாசமும், ஒளி பிற
...போன்ற நாடகங்
...டையிட்ட சன்மார்
...க மன்றத்தின்
... இரு...தை
...க்குமேல் ...ளிச
...டைகளில் நடிக்கப்
...மது ஊருக்குப்
...கழ் தேடித்தந்துள்
...ுதிப்பரிசு' நாடகம்
...ற நாடக நிகழ்ச்சி
...திமணிவரை வாசெ

வியில் இடம் பெற்றது. திருவாளர்கள் க. கோபிநாத், த. புவனேந்திரன் என்போர் நமது கிராமத்து சிறந்த நடிகர்களாகப்புகழைப் பெற்றுர்கள்.

எமது கிராமத்தில் உள்ள ஆலயங்கள் காரணமாக காவடி, கரகம், கோலாட்டம் போன்ற கிராமியக் கலைகளும் நம் மத்தியில் வளர்க்கப்பட்டன. இருபதொரு அடிக்கம்பத்தில் பலவர்ணக் கயிற்றுக்கொடிகளைத் தொங்கக்கட்டி அதன் மூலம் சங்கிலிப் பின்னல், கூடைப்பின்னல், துலாக்கொடி பின்னல் போன்றன நிகழும் வகையில், நாட்டுப் பாடலுக்கமைய மத்தளம் சல்லரி சகிதம் ஆடப்படும் கோலாட்டக்கலையை நம்மவர் நன்கு வளர்த்தனர். திரு. பொன். பரமானந்த உபாத்தியாயர் அவர்கள் இதற்குஉயிரூட்டினுர். காவடிக் கலைக்கும் நமது கிராமம் பேர்போனது. இருபது ஆண்டுகளுக்குமுன் மாவை-கந்தசுவாமி கார்த்திகைத் திருவிழாவென்றல் நமது கிராமத்தில் இருந்தும் நாற்பது ஐம்பதுக்கு மேற்பட்டோர் காவடி எடுத்து நாதஸ்வர இசைக்குஅமைய அழகாக ஆடுவர். தாளக் காவடி வல்லுனர்களாக திரு. ஆ. சின்னத்துரை மற்றும் முருகன், கிருஷ்ணன் என்போர் இன்றும் இருக்கின்றனர்.

சித்திரக்கலையும் நம் கிராமத்தவருக்கு கைவந்தகலை தான். எமது கிராமத்து ஆசிரியர்களில் அநேகர் சித்திரத் தராதரப் பத்திரம் உள்ளவர்கள். இத்துறை வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் காலஞ்சென்ற திரு.வ. பொன்னுக்குமாரு, திரு. க. சுந்தரமூர்த்தி ஆசிரியர்களாவர். இங்கே வதிந்த ஆசாரியர்களும் இத்துறையை வளர்த்தனர். எமது கிராமத்தை நிலையான வசிப்பிடமாய் கொண்டுள்ள வடபிராந்தியசித்திரவித்தியாதிகாரி கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்கள் புரியும் தொண்டும் எமது கிராமத்துக்கு புகழைத் தருகிறது. படப்பிடிப்புக் கலையிலும் நமது கிராமத்தவர் பலர் திறமைமிக்கவர்களாய்இருக்கின்றனர். இத்துறையில் துறைபோகியவர் ஓவியர் கே. கே. வி. செல்லையா அவர்கள். கொழும்பு ஸ்ருடியோ, கலைஞானி ஸ்ருடியோ, தாசன் ஸ்ருடியோ, றெக்ஸ் ஸ்ருடியோ என்பன நமது ஊர் படப்பிடிப்புக் கலைஞர்களாலேயேநடத்தப் படுகின்றன.

**— ஏ. ரி. பொன்னுத்துரை —**

அச்சுக்கலை, புத்தகம் கட்டும் கலை என்பவற்றில் முப்பது வருடங்களுக்கு மேற்பட்ட அநுபவஸ்தர்கள் எம்மிடையே இருக்கிறுர்கள். திருமகள் அச்சக நிர்வாகியாக முன் கடமையாற்றிய திரு. சோ. அப்பாக்குட்டி அவர்களும், இன்றைய அதிபர் திரு. மு. சபாரத்தினம் மற்றும் ஆ. முத்தையா வ. ஐயம்பிள்ளை என்போரும் இத்துறையை முறையாகப் பேணியவர்கள் எனப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் உட்படப் பலரால் பாராட்டப்பட்டவர்கள் சமீபத்தில் பல்கலைக்கழக வெளியீடாய்வந்த 'தக்ஷகாண்டம்' என்ற பெரியநூல் இவர்களின் ஆற்றலுக்கு ஒரு உரைகல்லாய் அமைந்துள்ளது.



பொன் பரமானந்த உபாத்தியாயர்

சங்கீதக்கலையில் நமதுகிராமம் பின்தங்கியதே. இருப்பினும் சாரதா பரதா சகோதரிகள் சென்னையில் சங்கீதம் கற்று மீண்டபின் அக்குறை துடைக்கப்பட்டுள்ளது. இன்னும் ஒருபெண்மணி சங்கீத ஆசிரியர் பத்திரப்பரீட்சையில் ஈழத்திலேயே முதலாவதாக சித்தியடைந்தமையும் குறிப்பிடற்பாலது.

சங்கங்கள் அமைத்துக் கிராமத்தொண்டு புரியும் பண்பு எமது கிராமத்தில் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரேயே வளர்க்கப்பட்ட பண்பாகும். இதனல் நமது கிராமம் பல சமூக சேவையாளர்களை உருவாக்கியது. இதன்காரணமாக மயிலிட்டிக்கிராமசபையின் தலைவர்களாகப் பத்து ஆண்டுகள் வரை எமது கிராமத்தவரான ஈழகேசரி பொன்னையா, திரு. P. S. நடராசா, திரு பொ கிருஷ்ணசாமி என்போர் பணிபுரிந்துள்ளனர். யாழ். குடாநாட்டின் பெரும்பகுதிக்குப் பொறுப்பாகக் கடமைபுரியும் சமூகசேவை உத்தியோகஸ்தர் ஒருவரும் நமது கிராமத்தவரே. சமூகசேவை பற்றி ஆராய (6 மாதங்கள்) அவுஸ்திரேலியாவுக்கு இவரை சென்றஆண்டு அரசாங்கம் அனுப்பியுள்ளது. சமூகசேவையில் இவருக்குள்ள திறமைக்கு நமதுகிராமத்தில் இளமையிலேயே மக்கள்பெறும் சமூக சேவை மனப்பான்மை காரணமாகிறதெனலாம். தொழிற்சங்க இயக்கரீதியில் அகில இலங்கை ஆசிரியர் சங்கங்களில் முக்கிய பதவிகள் வகித்து அரும்பணி ஆற்றுபவர்களும்உளர்.

கல்வித்துறையைப் பொறுத்தமட்டில் கல்லூரி ஒன்று இல்லையே என்ற குறை பெரிங்குறைதான். ஆனல் கல்வி விகிதத்தில் (6 வீட்டுக்கு ஒரு ஆசிரியர்; 9 வீட்டுக்கு ஒரு பட்டதாரி; 25 வீட்டுக்கு ஒரு வைத்தியத்துறை அல்லது பொறியியல் துறை நிபுணர்) எமக்கு திருப்தியுண்டு கல்வியில் உள்ள ஆர்வம் விசேட சித்திகளையும் தந்திருக்கிறது சென்ற ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வைத்தியத் துறையில் மிகக்கூடிய புள்ளிகள் பெற்று சித்தியடைந்த எமது ஊர் மாணவி தொடர்ந்து எவ். ஆர் சி எஸ். நடாத்திய அகில உலக ரீதியான போட்டிப் பரீட்சையில் முதலிடம் பெற்று Nuffield prize பெற்றுள்ளார்! சிலஆண்டுகளுக்கு முன்மிருக வைத்தியப் பரீட்சையில்பல் கலைக்கழகத்தில் முதலிடம் பெற்ற நம்மவர் அங்கேதங்கப்பதக்கம் பெற்று, பின் அரசாங்கத்தால் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டு P. H. D. பட்டமும் பெற்றுள்ளார். இப்போது இவர் ஆராய்ச்சிக்காக கனடா சென்றுள்ளார். விஞ்ஞானம் பற்றிய விசேட துறையில் எம்.எஸ். சி. பட்டம்பெற்று இப்போது லண்டனிலேயே ஆராய்ச்சித்துறையில் இருப்பவர் ஒருவர் உளர். கல்லூரி இல்லை எனினும் விவேகமும் ஆர்வமும் இருக்கதான் செய்கிறது. எமது ஊர் மக்களின் கல்விவளர்ச்சியை முன்னிட்டு ஆசிய பவுண்டேசன் 5000 ரூபா பெறுமதியான நூல்களை சன்மார்க்கசபைக்கு உதவியுள்ளது ஆசிரியபயிற்சிக் கலாசாலை மாணவர்களும் இதை உபயோகிக்கின்றனர்.



வர்த்தகப் பிரமுகர் பூ. சுப்பிரமணியம் அவர்கள்

பல்வேறுதுறைகளிலும் நமது கிராமம் கணிசமான முன்னேற்றமடைந்ததற்கு முக்கிய காரணம் நமக்கு முன்னேடிகளாகத் திகழ்ந்து நம்மை வழி நடத்திய பெரியோர்களாவர். இந்தவரிசையில், ஈழத்திலும் யாழ்ப்பாணத்திலும் எம்மூரைப் பிரகாசிக்கச்செய்த பெருமை திரு. நல்லையா சகோதரர்களைச் சாரும். அவர்களில் மூத்தவர் திரு. T. R. நல்லையா (துரைரத்தினம்). இளையவர் திரு. R.R. நல்லையா (இராசரத்தினம்) ஆவர். யாழ்ப்பாணம் நீதித்தலமே அவர்களின் ஏகபோக உரிமையாய் இருந்தது என்று வியக்குமளவுக்கு வழக்கறிஞர்களாய்ப் புகழீட்டினுர்கள். திரு. R. R. நல்லையா எமது கிராமத்தின் கல்விக்கூடத்துக்கும், அம்பாள் ஆலயத்துக்கும் மனேஜராக கடமையாற்றிக்கல்வியையும் ஆத்மீகத்துறையையும் வளர்த்தார். எமது கிராமம் ஈன்ற சுடர்மணிகளில் ஒருவர் சின்னச்சட்டம்பியார் என அழைக்கப்பட்ட திரு ந. சின்னத்தம்பி அவர்கள். வியாபாரத்துறையில் பெரும் பொருள் ஈட்டி, சுற்றமித்திரர்களைச் செழிப்புறச் செய்த இவர் சமயத்தொண்டைத் தலையாயதொண்டெனக் கொண்டார். இந்தியாவிலே சிறந்த தலமாகிய வேதாரணியமென்னும் திருமறைக்காட்டிலே ஒருசத்திரமமைத்து அன்னதானம் முதலியவற்றிற்காக மூலதனமும் உதவியுள்ளார். மாவை-கந்தசுவாமி கோவிலுக்கு தங்கமுடி வைத்தவரும், குரும்பசிட்டி விநாயகராலயத்தை புனருத்தாரணம் செய்து பதினையாயிரம் ரூபாய்கள் பெறுமதியான ஆஸ்திகளை அர்ப்பணித்தவரும் இவரே. எமது கிராமத்துப் பெரும் பிரமுகர் ஒருவர் ஸ்ரீ S. R. முத்துக்குமாரு (சக்கிடுத்தார்)அவர்கள். சென்னைச் சர்வகலாசாலையார்வெளியிட்ட தமிழ் அகராதி ஆசிரியர்களுக்கு துணையாளராய் இவர் இருந்தார் என, நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் எழுதியுள்ளார். "தற்கால சாத்திரங்கள் எல்லாவற்றிலும் வருகிற இங்கிலீஷ் பரிபாஷைச் சொற்களுள் இருபத்து மூவாயிரத்துக்கு ஏற்ற தமிழ்ச்சொற்களைப் பொறுக்கி எடுத்துக் கடதாசித் துண்டுகளில் எழுதிக் கட்டிவைத்திருந்தார். அதை என்னிடம் ஒப்படைத்தார்' என சுவாமி ஞானப்பிரகாசரவர்கள் குறிப்பிடுகிருர்.

பிற்காலத்தில் வாழ்ந்த பிரமுகர்களில் ஈழகேசரிப் பொன்னையா எமது கிராமத்து அச்சாணிபோல் அரும்பணி ஆற்றினுர்; அவர்பற்றிக் கவிஞர் ஒருவர் பின்வருமாறு பாடுகிருர்.

"பாலர்க்கு வேண்டும்
பழமொழி பாட்டு
பக்குவமான தமிழிற்
கவிதை
சாலச் சிறந்தவர்
கட்டுரைக் கோவை
தமிழில் மலர்ந்த
சிறுகதைச் செல்வம்
கூலிக்கு மாரடிக் காத
முயற்சி
குணம்பல கொண்டு
மலர்ந்த அரும்பு
போலிச் சரக்கல்ல;
ஆண்மையில் வாழ்ந்த
பொன்னைய வள்ளல்
அளித்து மறைந்தான்"

அவர் ஒரு வீர புருஷர்; கொடையால் உயர்ந்தவர் சைவவித்தியாவிருத்திச் சங்கம், மலையாளம் புகையிலை கூட்டுறவுச் சங்கம், பண்டசாலை யூனியன் உட்பட பத்து ஸ்தாபனங்களில் முக

(13 ம் பக்கம் பார்க்க)


# ...அனைத்தும்
# ...கள்

...க்கள், பூச்சிகள். இத்திட்டத்தை
...இன்று நம் கைகளில் உள்ளன.






... 60 ஏனைய கிருமிநாசினிகளால் அழிக்க முடியாத
...களின் முற்றழிப்பிற்கு ஏதுவான ... வன்மைமிகு புதிய, படி
...நாசினியாகும். நெல், புகையிலை, காய்கறி, பருத்தி
...றத் தாக்கும் கிருமிப்பீடைகள் ஒழிப்பிற்கும் சிபார்சு
...கிறது. (1 திரவ. அவுன்ஸ் அசோட்றின் 60 ஐ. 3-5
... கலந்து 2-3 வாரத்திற்கொருமுறை தாவரத்தின்
...குதியில் நன்கு தெளிக்கவும்.

...கம் இலங்கை லிமிட்டெட்
...ா ஹவுஸ் த. பெ. 919 கொழும்பு. டெலிபோன்: 28333

# அமரத்துவம்

(18-ம் பக்கத்தொடர்ச்சி)

(திடீரெனஉள்ளே சென்றவன் சில விஞடிகளிக்கையில் பணத்துடன் அங்கு வந்து அவனிடம் கொடுக்கிருன்.)

என்ஞல் இயன்றது இவ்வளவுதான் ... ... மனமுண்டு. வழிதான் இல்லை.

மாத: 'சிறுதுளி பெருவெள்ளம்' உங்கள் உதவிக்கு நன்றி...

ஞானி: நிறுத்துங்க ...நன்றியை நான் எதிர்பார்க்கவில்லை, நல்லநல்ல சிந்தனைகளையே உங்களிடம் எதிர்பார்க்கிறேன். உங்கள் நூல் விரைவில் வெளிவர ஆசிக்கிறேன்.

மாத: போய்வரட்டுமா...?

ஞானி: கொஞ்சம் இருந்து போங்களேன். இலக்கியங்களைப்பற்றிச் சிறிது சம்பாஷிக்கலாம்.

மாத: மன்னிக்க வேண்டும்.

ஞானி; ஆமாம் ...ஆமாம். பல சோலிகள் இருக்கும். போய்வாருங்கள். (கரங்களைக் குவித்து விடைகொடுக்ருன். கமலம் குமுறிக்கொண்டே உள்ளிருந்துவருகிருள்.)

கம: நீங்களென்ன கல்லா மரமா. ... உங்களுக்கு இதயமே கிடையாதா ...

ஞானி: (சாதாரணமாகவே) அதிலென்ன சந்தேகம் கமலம் ...?

கம: இருந்திருந்தால் நீங்கள் இப்படிச் செயதிருப்பீர்களா? ...— இருந்ததையெல்லாம் இப்படிஅழிச்சுப்போட்டீங்களே! அதஞல் என்னத்தை நீங்க கண்டிட்டீங்க ...? சொல்லுங்க ...? ஒருவேளைச் சோற்றுக்கே பிறர் கையை எதிர்பார்த்து இருக்கிற இலட்சணத்தில் இது வேறு வேணுமா ...? ஞானி, (உரத்துச் சிரிக்கிருன்.)

கம:சிரியுங்க ... நல்லாய்ச் சிரியுங்க ... ... ராலைக்கு ஊர் சிரிக்கிறதுக்கு முந்தி உங்களைப்பார்த்து நீங்களே சிரியுங்க! பைத்தியகாரனைப் போலச் சிரிக்கிறீங்களே: (அழுது) எத்தனை எத்தனை நாளாய் அந்தப் பச்சைக் குழந்தை முகத்தைப் பார்த்துப் பார்த்து ...

ஞானி: (சிரிக்கிருன்)( பின் தாழ்வாரத்தில் சென்று அமர்கிருன்)

கம: பதினைந்து ரூபா பணத்தை இப்படித் தூக்கி தானஞ்செய்து போட்டு சிரிப்பு வேறேயா...? நீங்களும் ஒரு மனுஷரா? எழுதப்போகிறீங்களா? பார்ப்போம் நீங்கள் இனி மேல்எழுதுவதை...? நீங்கள் எழுதிக் கிழிச்சதெல்லாம் போதும். இனி விடமாட்டேன் ...!

(ஆவேசங் கொண்டவளாக, மேசையில் அவன் எழுதி வைத்திருந்த காகிதங்களை எடுத்து சுக்கல்சுக்கலாகக் கிழித்து விசுகிருள்.)

இந்தத் தரித்திரத்தைவிட்டால்தான் நமது வாழ்க்கை விடியும்.

ஞானி: 'கமலம்! ... ...? ஆவேசம்மீறிய நிலையில் கமலத்தின் கன்னத்தில் அறைகிருன்) கமலம்!...

(அவள் நிலைகுலைந்து சுவர் ஓரமாக விழுகிருள், ஞானி களைப்புமேலிட ஆவேசமாகப் பேசுகிருன்)

"நாம் நிகழ்காலத்துக்காக வாழ்வதில் கருத்தில்லை. எமக்குப் பின்னும் எமது வாழ்க்கைநிலைக்கவேண்டும்.

மேடை ஒளி அணைகிறது.)

(கமலத்தின் அலறல் பெரிதாக ஒலிக்கிறது.)

கம: (இருட்டில்ஒலி) அடிக்காதீங்க ... அடிக்காதீங்க ... இல்லை ... வேண்டாம் ... ... அடிக்காதீங்க ... அடிக்காதீ ... ...

(மேடை ஒளி அணைந்து மீண்டும் எரியும் சில விஞடிகளுக்குள் கமலம்முன்பிேமே கிடந்த சுவரடியில் இருந்து அரற்றியபடி மிரண்டு ஓடி வருதல்.)

நீங்கள் சாகவில்லை ... நீங்கள் சாகவில்லை.

(கைலாசம் அறைக்குள்ளிருந்து அவசரமாக கூடத்திற்கு ஓடிவருகிருர்.)

கைலா: கமலம் ... ... என்னம்மா இது ...? என்னநடந்தது ... ஏனிப்படி மிரண்டு கத்தினிட்டாய் ... ...? மணி பன்னிரெண்டாச்சே ... ... நீ இன்னமும் தூங்கவே இல்லையா ...?

கம; (பரிதாபமாக) நாங்க சபிஞ்சு போயிடுவோம் அப்பா!... ஆஞ, அவர் சமியவே மாட்டார் ... அவர் ... (குமுறி அழுகிருள்.)

கைலா: (ஆச்சரியமாக) (கமலம் ... நீ ... நீதாஞபேசுவது...?

கம: காலத்தால் சாகாத அந்தக் கலைஞனுக்கு வாழ்க்கைப்பட்டவள் என்கிற உரிமை இருக்கும்வரை நான் ஒருதடவையல்ல. ஆயிரமாயிரம் தடவை சொல்லுவேன்.

அப்பா! இப்போதே போங்க! ... போய்ச் சொல்லுங்க......? அவர் எழுதின புஸ்தகத்தை, நானேதான் ... இந்தக் கையால்தான் ... அப்பா. எனக்கேதான் ... ... இல்லை அந்தப் பாக்கியம் வேறு யாருக்கும் கிடைக்கக் கூடாது ... போங்க அப்பா போங்க.

கைலா: கமலம்!...ம்

கம: போங்க ...

கைலா: இந்த அர்த்தராத்திரியிலேயா ...! கமலம் நீ மிகவும் குழம்பிப்போய் இருக்கிருய் — ...வந்து படுத்துக்கம்மா ... வா! ... நான் காலையில் முதல் வேலையாகப் போய்ச் சொல்லிவிடுகிறேன் ... வா!

கம: நான் அதுக்குத்தகுதியுள்ளவளா ... அப்பா!

கைலா: மனசு மறுக்கலாம் ... மனச்சாட்சி தயங்கலாம் ... 'மனுஷர்கள்' மறுக்கமாட்டார்கள் ... மறுக்கமாட்டார்கள் — அவர்கள் உன்னைக் கைவிடமாட்டார்கள் ... வா ...

கம: அப்பா! ...

கைலா: மணிபன்னிரெண்டாச்சு ... வா, கமலம் ...

(அவள் அருகில் சென்று அரவணைத்துக்கொண்டு அறைக்குள் செல்கிருர் கைலாசம். அவளது விம்மல் ஒலி தொடர்ந்து கேட்டுக்கொண்டேயிருக்கிறது. அந்தவீட்டின் பழைய ...ரித்தானியச் சுவர்க்கடிகாரம் பன்னிருமுறை ஒலித்துஓய்கிறது )

நள்ளிரவு ... பன்னிரண்டு மணி!

(திரை)

# இரத்தக் கொதிப்பு எப்படி ஏற்படுகிறது?

வைத்திய ஒளி

இரத்தக்கொதிப்பு என்பது ஆங்கிலத்தில் (High Bleed Preasure)என்றுசொல்லப்படுகிறது. சித்த வைத்தியநூல்களில் உருத்திர வாய்வுரோகம் எனப்படும்.

இது தனிப்பட்ட ஒரு வியாதியல்ல. இது பலவியாதிகளில் இருக்கப்பட்ட ஒரு குறியே.

சாதாரணமாக ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு குறிப்பிட்ட இரத்த அமுக்கமுண்டு.

அதாவது சரீரத்திலுள்ள இரத்த நாளங்கள் மூலமாக சுத்தமான இரத்தத்தை செலுத்துவதற்கு இருதயத்திற்கு ஓர்அளவு சக்திவேண்டும். இச்சக்தியைத்தான் நாம் 'இரத்த அமுக்கம்' என்று கூறுகிறோம். இந்த இரத்த அமுக்கத்தை அளப்பதற்கு (Spigmamenametre) என்ற கருவி பிரயோகிக்கப்படுகிறது. இந்த இரத்த அமுக்கத்திலும் இரண்டு பிரிவு உண்டு. 'சிஸ்டோலிக்' என்றும் 'டயஸ்டோலிக்' என்றும் பிரிவுபடும். பொதுவாக சிஸ்டோலிக் அமுக்கத்திற்கும் டயஸ்டோலிக் அமுக்கத்திற்கும் 40 மி. மீ. வித்தியாசமிருக்கும்.

## மாறுபாடு

பல வியாதிகளில் இந்த இரத்த அமுக்கமாவது மாறுபாடு அடைகிறது. இரத்தம் சரியானபடி தசைகளுக்குச் செல்லும் விதத்தில் ஏதாவது வியாதியின் தடைகாரணத்தால் ஊறு ஏற்படுமாயின் இயற்கை தானுகவே அந்த ஊறை தவிர்க்க. அதாவது தடையையும்மீறி சகல அவயவங்களுக்கும் போதுமான அளவு இரத்தத்தைச் செலுத்துவதற்காக இருதயத்தைத் துரிதமாக இயக்கி இரத்தத்தைச் செலுத்தச் செய்கிறது அப்பொழுது இரத்த அமுக்கம் அதிகப்படுகிறது

ஏதாவது ஒரு நோயின் காரணத்திஞல் இரத்தத்தில் வாதம் அதிகரிப்பதாலேயே இரத்த நாளங்களில் இரத்த ஒட்டத்தில் தடையுண்டாகிறது. சித்தவைத்திய நாடி சாஸ்திரத்தில்வாய்வு-வாதம். நெருப்பு - பித்தம், தண்ணீர்-சிலேத்துமம்எனக் கூறப்படுகிறது.

ஆகாரங்களின் ஒழுங்கீனங்களாலும், சில நோய்களிஞலும் குடலில் வாய்வு அதிகரித்து இரத்தத்தில் வாததடிப்பை உண்டாக்கி இரத்தக் கொதிப்பு உண்டாகிறது. இயற்கையாக திரிதோஷ நாடிகளின் மாற்றத்தால் மாறுவதுமுண்டு.

## நீடித்தால்

இரத்தக்கொதிப்பானது ஒருவருக்கு நீடித்திருக்குமாயின் இருதய நரம்புகளையும் மூளை நரம்புகளையும் பாதிக்கச் செய்கிறது. இதஞல் அவருக்குச் சித்தம் புத்தி மாறுதலடைகின்றது. ஆகவே இரத்தக்கொதிப்பு என்பது அதாவது அதிக இரத்த அமுக்கம் என்பது பலவியாதிகளின் இயற்கை தானுகவே சிருஷ்டித்துக் கொண்ட குறியே ஆகும், ஆதலின் இந்தக் குறியை உண்டாக்கின அடிப்படை வியாதிக்கு மருந்து கொடுத்துச் சொஸ்தம் செய்ய வேண்டும். அல்லது இரத்த அமுக்கத்தைக் குறைப்பதற்கு மருந்து கொடுப்பது முற்றிலும் பிசகு.

ஆஞல் இரத்த அமுக்கம் ஓர் அளவுக்குமேல் அதிகப்படக்கூடாது. கூடுதலாக அதிகப்படவிட்டால் வாய்வு பிறி இரத்த நாளங்களை வெடிக்கச்செய்து மரணபயத்தை உண்டாக்கும். அல்லது பாரிசவாதநோயை உண்டாக்கி மரணம் சம்பவிக்கும்.

வாய்வு உருத்திர ரோகுணம்

வாயுவே மிகுந்துதாஞல்
மைந்தவே
மேல் மூச்சேறும்
வாயுவே மிகுந்துதாஞல்
மலர்ந்திடும்
விரணமெல்லாம்
வாயுவே மிகுந்துதாஞல்
மல சலமிரண்டும்
கட்டும்
வாயுவினலேயப்பா.
வளருத்திர ரோகமாமே
ஆமப்பா ருத்திர
ரோகத் தாண்மையை
யுரைக்க கேளு
வேமப்பா வெம்பிப்
பாய்ந்து மிக நெஞ்சிற்
குத் துண்டாகிப்
போமப்பா பித்தந்
தன்னை தப்பியே
போகொட்டாமல்
பாமப்பா பேசும்போது
பதையாமற்
சாவார் தாமே.

பொதுவாக நடுத்தர வயது நடுத்தர உயரம் நடுத்தர வாழ்க்கை உள்ள ஒருவருக்கு 120 மி மீ சிஸ்டோலிக் ப்ரெஷர் இருப்பது வழக்கம். வாழ்க்கையின் வித்தியாசத்தாலும் உயரம் வயது முதலியவற்ருலும் இது சிறிது மாறுபடும். உதாரணமாக ஒருவருக்கு 160 மி மீற்றருக்கு குறையாத இருந்தால் இரத்தக் கொதிப்பு என்றும் 100மி மீ குறைந்து இருந்தால் இரத்தக் குறைவு என்றும் சொல்லப்படும். இந்த இரத்தக் கொதிப்பு 220, 230ஐத் தாண்டிஞல் மண்டையில் சுத்த இரத்த நாளம் வெடித்து மரணமோ, பக்ஷவாதமோ சம்பவிக்கலாம்.

கு. சங்கரப்பிள்ளை
வைத்தியர் — சுழிபுரம்

## நலமோடு பொங்கட்டும்!

கீழ்வானம் சிவக்கிறது
கிள்ளையினம் ஆர்க்கிறது
சூழ்காவில் அலர்கிறது போது—அங்கு
சுழன்று வண்டு சேர்க்கிறது தாது!

கண்ணைப் பிசைந்துகொண்டு
கன்றைத்தை யும்வருடி
விண்தெரியும் கூரையினைப் பார்த்தான்—நாள்
விடிந்துவிட்ட தென்றேயுளம் ஆர்த்தான்!

பக்கத்தே உறங்குகின்ருன்
பாவையவ ளின்கணவன்
திக்கொன்ருய்ச் சென்றுருண்டோர்ஆறு-மேனி
தெரியச் கிடக்குமவை பேறு!

பாலர் கொளுத்துகின்ருர்
பட்டாசு; நாற்றிசையும்
ஓலம்செய் கோவிற்பெரு மணிகள்—முன்றில்
ஒவ்வொன்றும் ஒலிப்பனவை அணிகள்!

பொழுதின்று எப்படித்தான்
போகப்போ கின்றதென
எழுகின்ருன் கூந்தலை முடித்து—அப்போ(து)
எழுந்தபெரு மூச்சுள்ளத் துடிப்பு!

கோலமிட்ட முன்றிலெலாம்
கொலுவேரிருக்கும் பானைகள்;
ஞாலத்தில ஏழைதுயர் தீர—அவை
நலமோடு பொங்கட்டும் சேர!

-பசுவூர் சு மகாலிங்கசிவம்

0 0 0

## வழி காட்டும் தை

தையும் பிறக்க வழியும் பிறக்கும்
உய்யும் வழிகள் உவந்து சிறக்கும்
கையும் நிறையப் பொங்கல் அமுதம்
வையம் வாழ வாழ்த்தி உண்போம்.

—சங்கானை சகபாடி

0 0 0

அன்பெனும் அடுப்பை மூட்டி
பண்பெனும் பானை ஏற்றி
அறம்பொரு ளின்பம் என்னும்
அரிசியை அதனில் கொட்டி
அழித்திடும் துயரை எல்லாம்
அடுப்பினில் விறகாய் மாற்றி
சமைத்திடும் பொங்கல் தன்னை
சன்னதி முன்பாய் வைத்து;

உழவர்கள் உயர வேண்டும்
உணவுடை மலிய வேண்டும்
பழகுதல் நட்பால் மக்கள்
பகைமையை மறக்க வேண்டும்
என்றெலாம் எங்கள் முத்து
மாரிமுன் எடுத்துச் சொல்லி
நன்றெலாம் செய்யும் வண்ணம்
நாளெலாம் வேண்டு வோமே!

-ஜீவா நாவுக்கரசு

சிறுவர் கவி நயம் 18

# கூடித் தொழில் செய்

அன்புள்ள தம்பி தங்கைகளே, மனிதன் கூடிவாழப் பிறந்தவன். தாய், தந்தை, அண்ணன், தம்பி, தங்கை என உங்கள் குடும்பத்தில் எல்லோரும் சேர்ந்துதானே வாழ்கிறீர்கள்? குடும்பத்தில் மாத்திரம் ஒற்றுமை இருந்தால் போதுமா? ஊரில் ஒற்றுமை வேண்டாமா? ஊரில் ஒரு ஆலயம் எழுப்ப வேண்டுமென்றால் தனிமனிதரால் முடியுமா? முடியாது. ஊரில் இருக்கின்ற பலர் சேர்ந்து முயல வேண்டும். உங்கள் கிராமத்திற்கு ஒரு பெரிய தெரு வேண்டும் என்றால் எல்லோரும் கூடி முயற்சிக்க வேண்டும். நமக்கென்ன என்று எண்ணி ஒவ்வொருவரும் பேசாமல்- முயலாமல் இருந்தால் காரியம் நடக்காது. ஊர் முன்னேறாது. ஊர்கள் முன்னேறாவிட்டால் நாடு சிறப்படையாது.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வே' எனப் பாரதியார் பாடியுள்ளார். இது உண்மை ஒற்றுமையாக இருந்த நான்கு எருதுகளைச் சிங்கத்

— இரசிகமணி, கனக. செந்திநாதன் —

தால் கொல்ல முடியவில்லை. அவற்றைக் கோபிக்கச் செய்து தனிமைப்படுத்தி விட்டுத்தான் சிங்கம் அவற்றைக் கொன்று தின்றது.

மிகச் சிறிய பொருள்கள் தனியாக இருந்தால் அவற்றின் பெருமை நமக்குத் தெரிவதில்லை. ஒன்றாகச் சேர்ந்துவிட்டால் மனிதர் கண்டு வியப்படையும் படி ஆகி விடுகின்றன. இதை அழகாக ஒரு கவிஞர் பாடுகின்றார். பாடல் இது.

சின்னச் சின்னக்
கற்களே
சேர்ந் தொன்றாகக்
கூடியே
விண்ணுயர்ந்த
கோபுரம்
வீடு யாவும்
காண்கிறோம்

ஆம் சிறிய கற்கள். சின்னஞ் சிறிய கற்கள். அவை தனியாக இருக்கும்போது நாம் கவனிப்பதில்லை. கடிக்க வரும் நாய்க்கு எறிய கல்லெடுக்கவும் காகத்தைத் துரத்தத்தான் சிலவேளை அந்தக் கல்லை உபயோகிக்கிறோம் ஆனால் அவை ஒன்றாகச் சேர்ந்தால் பெரிய கோபுரம் அழகொழுகும் மாளிகையாகி விடுகின்றன. ஒற்றுமையின் உயர்வு அது. கூட்டுறவின் நன்மையது.

எறும்புகளைப் பார்த்தீர்களா? அவை எவ்வளவு சின்னஞ் சிறியவை. அவை ஒன்றன்பின் ஒன்றாகக் கூட்டமாகப் போகும் கூடித்தொழில் செய்யும். அவை செய்யும் முயற்சியால் பென்னம் பெரிய புற்றுக்கள் உண்டாகின்றன. அவற்றுள் பாம்புகள் கூடக் குடியிருக்கின்றன. அடுத்துக் கவிஞர் இதைக் குறிப்பிடுகிறார்.

சின்னச் சின்ன
எறும்புகள்
சேர்ந்து செய்த
சேவையால்
பென்னம்பெரிய
புற்றுகள்
பெருகிப் பாம்பு
வாழ்வதும்

கற்கள், எறும்புகள் இவற்றைப் பாடிய கவிஞர் நீர்த்துளி, நிமிடம், அட்சரம் இவற்றைக் காட்டி எம்மைச் சிந்திக்க வைக்கிறார். கடலைப் பார்த்து நாம் ஆ! என்று வியக்கிறோம். எவ்வளவு பெரிய கடல் என அதிசயிக்கிறோம். நதியின் ஓட்டத்தைக் கண்டு மனம் மகிழுகின்றோம். நீர்வீழ்ச்சியைப் பார்த்துப் பிரமிப்படைகிறோம். இவற்றைப் பார்க்கும்போது சிறிய நீர்த்துளிபற்றி நாம் சிந்திப்பதில்லை. ஆனால் நாம் வியக்கும் கடலும் மகிழும் நதியும் சின்னச் சின்னத் துளிகளின் கூட்டுறவே.

சின்னச் சின்ன நீர்த்துளி
சேர்ந் தொன்றாகக்
கூடியே
வண்ணக் கடலும்
ஆனதே
வளமார் நதியும் ஆனதே

ஆறுபது செக்கன் சேர்ந்தது ஒரு நிமிடம். கண்ணிமைப்பொழுது கைநொடிப்பொழுது ஒரு செக்கன் என்பர். இந்தச் செக்கன் நிமிடம் பற்றி யாரும் சிந்திப்பதில்லை. எனக்கு ஐம்பது வயது என்று சொல்பவர் செக்கன் நிமிடம் பற்றிச் சிந்தித்தா சொல்கிறார்? அவர் வருடக் கணக்கிலல்லவோ பேசுகிறார்! ஆனால் அந்த வருடம், மாதம் என்பவைதான் என்ன? செக்கன் நிமிடம் என்பவை சேர்ந்த சேர்க்கைதானே.

நிமிஷம் என்னும்
போதிலே
நேரம் சொற்ப மாயினும்
நிமிஷ மெல்லாங் கூடியே
நீண்ட காலம்
பண்ணுதாம்!

இப்படி அட்சரங்கள் (எழுத்துக்கள்) சேர்ந்து சொற்களாகி - சொற்கள் பாடல்களாகி-அன்பு வார்த்தைகளாகி நம்மை மகிழ்விக்கின்றன என்று கூறிய கவிஞர் நல்ல போதனையோடு முடிக்கிறார். பிள்ளைகளுக்குத் தெரிந்த கல், எறும்பு, நீர்த்துளி, நிமிடம் எழுத்துகள் இவற்றைக் கொண்டு அரியபோதனையை வற்புறுத்துகிறார். போதனை இது.

தனியே சிறிசு; கூடினால்
தானே சக்தி கூடுமாம்
மனிதா! வாவா! !கூடியே
மண்ணை விண்ணாய்ச்
செய்குவாய்

நல்ல முடிவு கொண்ட பாடல் இது. குழந்தைகளைக் கூடித் தொழில்செய்ய ஊக்கப்படுத்தும் பாடல் இது. பாடலை இயற்றியவர் பஸீல் காரியப்பர். மட்டக்களப்பு தேனமுத இலக்கிய மன்றம் வெளியிட்டுள்ள கனியமுது என்ற குழந்தைப்பாடல் தொகுதியில் கூட்டுறவு என்ற தலைப்பில் இப்பாடல் இருக்கிறது.

பாடலை ஒருசேர மீண்டும் பாருங்கள்.

சின்னச் சின்னக் கற்களே
சேர்ந் தொன்றாகக்
கூடியே
விண்ணுயர்ந்த கோபுரம்
வீடு யாவும் காண்கிறோம்

சின்னச் சின்ன எறும்புகள்
சேர்ந்து செய்த
சேவையால்
பென்னம் பெரிய
புற்றுகள்
பெருகிப் பாம்பு
வாழ்வதும்

சின்னச் சின்ன நீர்த்துளி
சேர்ந்தொன்றாகக்
கூடியே
வண்ணக் கடலும்
ஆனதே
வளமார் நதியும் ஆனதே
நிமிஷம் என்னும்
போதிலே

நேரம் சொற்ப மாயினும்
நிமிஷ மெல்லாங் கூடியே
நீண்ட காலம்
பண்ணுதாம்!

சின்னச் சின்ன அட்சரம்
சேர்ந்த அன்பு
வார்த்தைகள்
இன்ப மூட்ட வில்லையோ?
இதய மென்னும்
ஏட்டிலே!

தனியே சிறிசு கூடினால்
தானே சக்தி கூடுமாம்!
மனிதா! வா! வா!!
கூடியே
மண்ணை விண்ணாய்ச்
செய்குவாய்!

## மாணவர் மலர்

# மாலையும் மதியமும்

—மேலைப்புலோலி மு.சு. கதிர்காமத்தம்பி

நீலவானம் பார் தம்பி
நிறைந்து வெள்ளி சிமிட்டுதா;
கோலவானில் நிறைகுடம்போல்
குளிர்ந்து மதியும் வருகுதா?
நீலவானம்

வேலையிலே அலை எழுந்து
விரைந்து வாவென்றழைக்குதா?
மாலையிலே மல்லிகையும்
மலர் பரப்பி மணக்குதா?
நீலவானம்

பங்கயமும் பார்க்க அஞ்சிப்
பயந்து கூம்பிக் குனியுதா?
அங்கிருக்கும் ஆம்பலுமே
அழகு காட்டி மயக்குதா?
நீலவானம்

பாலுஞ் சோறும் ஊட்டுதற்குப்
பார்க்கிறாளா பாட்டியும்
காலில்லாது உருண்டுருண்டு
கடுகி முகிலுள் மறையுதா?
நீலவானம்

தேய்ந்து தேய்ந்து மறையுதா?
தேடத் தெரியா தொளியுதா?
ஆய்ந்தால் அதுபின்வளருதா?
அதுவும் திங்கள் ஆகுதா?

# வீ ர ம் எங்கே?

ஒரு நாள் ஒரு வேடனும் அந்தணத்துறவி ஒருவரும் காட்டுவழியாகச் சென்றார்கள்.

வேடன் கையில் வில்லும் அம்பும் இருந்தன. அந்தணர் கையிலோ நன்கொடை வசூலிக்கும் ரசீதுப் புத்தகம் ஒன்று இருந்தது.

இருவரும் சேர்ந்து சென்றுகொண்டிருந்தபொழுது புலி ஒன்று தன் குட்டியுடன் அவர்களுக்கு எதிர்ப்பட்டுக் காட்டில் வந்துகொண்டிருந்தது.

புலியைக் கண்டதும் வேடன், தன் கையில்வைத்திருந்த வில்லாலும் அம்பாலும் புலியை அடிக்கத் தொடங்கினான்.

புலியோ வேடன் அடிப்பதைச் சட்டை செய்யாமல் அவனை அணுகிவந்தது. அந்தணர் பார்த்தார், சிறிதும் தயங்காமல் தம் கையில் வைத்திருந்த நன்கொடை ரசீதுப் புத்தகத்தைப் புலியின்மீது வீசி எறிந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள முயன்றார்.

ரசீதுப் புத்தகத்தைப் பார்த்ததோ இல்லையோ, உடனே புலிதன் குட்டியைக் கௌவிக்கொண்டு ஒரே ஓட்டமாகத் தான் வசிக்கும் குகைக்கு ஓடிவிட்டது.

குகையை அடைந்ததும் குட்டிப்புலி தன் தாயை நோக்கி "அம்மா, இன்று உன் நடத்தையும் போக்கும் விசித்திரமாகிவிட்டனவே ஏன்? வில்லை எடுத்து அம்பு எய்து உன்னைக் கொல்ல வந்தவனிடம் நீ அஞ்சாது சென்றாய்; ஆனால் நன்கொடைப் புத்தகத்தை உன் மீது எறிந்த அந்தணரைக் கண்டதும் ஓடிவந்துவிட்டாயே ஏன்?" என்று கேட்டது.

"குழந்தாய், அம்பும் வில்லும் இருப்பவனிடம் வீரம் இருக்கும். அவனை எதிர்ப்பது நியாயம். ஆனால் நன்கொடை வசூலிக்கக் கிளம்பியுள்ள அந்தணரோ இனிக்க இனிக்கப் பேசி நன்கொடைப் புத்தகத்தை நம்மிடம் நீட்டுவார். நன்கொடை கொடுக்க நம்மிடம் வக்கு ஏது? அதனால் தான் உன்னையும் கௌவிக்கொண்டு ஓடிவந்துவிட்டேன்" என்று கூறியது.

"நீ சொல்வது முற்றும் உண்மை அம்மா!" என்று பதில் சொல்லிவிட்டு குட்டிப்புலி வயிறு குலுங்கச் சிரித்தது.

## கிறுச்சி

நல்ல ஓலை மடித்து
நடுவில் முள்ளைக்குத்தி

செல்லத்துரையன்
செய்த
சிறிய கிறுச்சி பார் நீ

மெல்லச் சும்மா
சுற்றும்
மெதுவாய் ஓடிச்
சென்றால்

காற்றுப் பட்டு உடனே
கறகறென்று சுழலும்

செலவு ஒன்றும் இல்லை,
செய்து தாறேன் ஓடு!

மூத்தண்ணா

## புலவரின் கோபம்

— அ. கனகசூரியர் —

ஒருதடவை காளமேகப்புலவர் கும்பகோணத்திலுள்ள சத்திரமொன்றில் உணவருந்திக்கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்திலிருந்து உணவருந்திக்கொண்டிருந்த ஒரு மனிதனின் குடுமி அவிழ்ந்து சோற்று இலையில் விழுந்தது. உடனே அம்மனிதன் குடுமியை எடுத்து உதறினான். அப்பொழுது குடுமியில் உள்ள சோறு காளமேகப் புலவரின் இலையில் விழுந்தது. உடனே புலவருக்குக் கோபம் வந்துவிட்டது. கோபமிகுதியினால் ஒரு பாடலையே பாடிவிட்டார்.

'சுருக்கவிழ்ந்த முன்குடுமிச்
சோழியா, சோற்றுப்
பொருக்குலர்ந்த வாயா!
புலையா — திருக்குடந்தைக்
கோட்டானே! நாயே!
குரங்கே, உனையொருத்தி
போட்டாளே
வேலையற்றுப் போய்'

## வேண்டுதல்

வாழ்வினில் அன்பு பொங்கி
வையமின் புறுதல் வேண்டும்
தாழ்விலாப் பண்பு பொங்கி
தரணியில் வாழ வேண்டும்
ஏழ்மையின் எதிரி பொங்கி
இகம் செழித் தோங்க வேண்டும்
மாள்விலா கல்வி பொங்கி
மகிதலம் உய்ய வேண்டும்.

ஈசனே! இதற்கு எல்லாம்
நின்னருள் பொங்க வேண்டும்.
நேசர்கள் துன்பம் போக்கி
நிரந்தர சுகமாய் வாழ
பாசமாய் பாரில் வாழும்
பக்தர்கள் மீது; வல்ல
ஈசனே! அருளைப் பொங்கி
என்றுமே பாரைக் காப்பாய்.

-செல்வி அ. திவ்யபூரணம்

மாணவ மாணவிகளே!

நீங்கள் அனுப்பும் கட்டுரை, கவிதை மற்றும் விஷயங்களுடன் இக்கூப்பனையும் நிரப்பி அனுப்புமாறு வேண்டுகிறோம். கூப்பனோடு வரும் விஷயங்கள் மட்டுமே கவனிக்கப்படும்.

மாணவர் மலர்

பெயர் ..........................................

விலாசம்: ..........................................

..........................................

..........................................

பாடசாலை: ..........................................

..........................................

.................................... ....................................

கையொப்பம் வகுப்பு ஆசிரியர்/அதிபர்

(சென்றவாரத் தொடர்ச்சி)

கமலம்: ஆ! அம்மா. (காலில் குத்தியதைக் குனிந்து எடுக்கும் சமயம் கைலாசம் வெளியே இருந்து வேகமாக உள்ளே வருகிறார்)

கைலா: கமலம்... என்ன? காலில் தைத்து விட்டதா அம்மா?

கம: இல்லை. (கீழே குனிந்து சிதறிய துண்டுகளைச் சேகரித்துக் கொள்கிறாள்)

கைலா: உடைந்துபோன இவைகளை இனிமேல் ஒன்று சேர்க்க முடியுமா அம்மா?

கம: அப்பா! (என்று விம்மியபடி)

கைலா: உள்ளமும் இப்படித்தான் அம்மா. ஏதாவது காரணத்திற்காக அதை நாங்களாக உடைச்சிட்டா மீண்டும் அதை ஒன்று சேர்க்க முடியாது. வளமான வாழ்க்கை கிடைக்கவில்லை என்பதற்காக உள்ளத்தை உடைச்சிட்டு வாழ்ந்த உனக்கு உண்மை இப்பவாகுதல் புரிகிறதா?

கம: (கண்ணீர் மல்க) அப்பா...!

கைலா: இந்தப்புகழ்! இந்தப் பெருமை! இந்தக் கௌரவம்! எந்தஒரு பெண்ணுக்கும் எளிதில் கிடைத்துவிடக்கூடியதா? எத்தனை எத்தனை அறிவாளிகள் எத்தனை எத்தனை படைப்பாளிகள்! எத்தனை எத்தனை பிரமுகர்கள் கூடி உன்னை அழைத்து ஞானியிபுத்தகத்தை வெளியிடுகிறதென்றால் ... ச் இதைவிடப் பெரிய பாக்கியம் வாழ்வில் வேறென்னம்மா கிடைக்க முடியும்? இப்ப வந்திட்டுப் போகிறார்களே இவர்கள் யார்? சாமானியமானவர்களா? இந்த நாட்டின் தலை சிறந்த அறிவாளிகள் அல்லவா? அவர்களே இங்கு வந்து எவ்வளவு பண்போடு அழைத்தார்கள்... நீ ஒரு வார்த்தையாவது சொன்னாயா?

கம: (ஆவேசமாக) அப்பா...! என்னால் எதுவுமே சொல்லமுடியவில்லை,

கைலா: 'ஞானி' எழுதிய புத்தகத்தை கையில் வைச்சிருக்கிறியே. அதை ஒருக்கால் பார்த்தபின் சொல்லு! கமலம்...கமலம்... நீ சொல்லம்மா...? காலையில் அவர்கள் வரு முன் இப்பவே நான்போய்ச் சொல்லிப் போட்டு வந்துவிடுகிறேன். உன்முடிவைச்சொல்லம்மா!

கம: ஐயோ... அப்பா, என்னைக் குழப்பாதீங்க.

கைலா: சம்மதமா?

கம: போதும் போங்க...

கைலா: கமலம்!......

கம: போங்க அப்பா. (ஆவேசமாக)

கைலா: போறன் ஆனால் ஒன்று: உலகம் உன்னை உயர்வாக மதிக்கிறது. அதற்கு உன் உள்ளத்தைக் காட்டி விடாதே. ஆமாம் காட்டி விடாதே. (கைலாசம் உள் வாசலால் போய் விடுகிறார். கமலம் சில நிமிஷங்கள் அசைவற்று நிற்கிறாள்)

கம: அவருடைய இந்தப் பெருமையில் பங்கு கொள்கிற உரிமை கடுகளவாகுதல் எனக்குண்டா...? நான் அதற்குத் தகுதியுடையவளா? நான் எந்த உள்ளத்தோடு அங்கு போவேன்... விழாவில் கலந்துகொள்ள எனக்கு என்ன யோக்கியதையுண்டு?

(சோர்வோடு முட்டுக்காலை மடித்து நாற்காலியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு தேம்புகிறாள். பின்னணியில் வேந்தனின் சம்பாஷணை பெரிதாக ஒலிக்கிறது. அவள் மிரண்டு கொள்கிறாள்)

பின் குரல்: 'சமுதாயம் என்னும் வீட்டைச் சூழ்ந்த இருளையழித்து ஒளி உமிழுவதற்கு எண்ணெயும் தூண்டிலுமாக இருந்த உங்களைத் தவிர இதற்கு வேறுயாருமே தகுதியில்லை.

கம: வெருண்டு போய்... இல்லை. நான் தூண்டிலாக இருக்கவில்லை. நான்...

பின் குரல்: சிறந்த எழுத்தாளன் என்ற மாலையைத் தொடுக்க உதவியும் ஒத்தாசையும் புரிந்த நாராக விளங்கிய உங்களைத்தவிர வேறு யாருக்கும் இந்தப் பாக்கியம் கிடைப்பது நியாயமாகாது.

கம; ஐயோ! இதென்ன அநியாயம், மாலையைத் தொடுக்கவா நான் உதவி செய்தேன். நான்... மரணத்தைக் கொடுப்பதற்குத்தானே, நான் (மிக உணர்ச்சி மேலிட சுவர் அருகே சென்று தடுமாறியபடி தலையை முட்டி முட்டிக் குமுறி அழுகிறாள். சில நிமிடங்கள் கழிய அப்படியே சோர்வுடன் வழுகிக் [illegible] அமர்ந்துகொள்கிறாள். உதழ்கள் துடித்துக் கொள்கிறது. கடந்தகால நினைவுகள் அவள் கண்முன் விரிகின்றன)

(இக்காட்சிமேடை ஒளியையணைத்து பின்னணி ஒலியுடன் சில விநாடிகளுக்குள் அமைத்துக்கொண்டு மீண்டும் ஒளியை எரியவிட்டு நடாத்துதல் வேண்டும்)

(ஞானி மிக வேகமாக எழுதிக் கொண்டிருக்கிறான். கமலம் உள்ளிருந்து வந்து அவனருகே நின்று அவனையே வெறித்து பார்த்துக் கொண்டிருக்கிறாள். சில விநாடிகள் செல்கின்றன. கமலம் நீண்ட பெருமூச்சுடன் அவனை அழைக்கிறாள்)

கம: என்னங்க உங்களைத் தான்... (மௌனமாகத் தொடர்ந்து எழுதுகிறான்)

(ஆத்திரமாக) என்னங்க நான் கூப்பிடுகிறது உங்கள் காதில் விழவில்லையா?

ஞானி: (எழுதுவதை நிறுத்தி அமைதியாக) நன்றாக விழுகிறது. இப்ப உனக்கு என்னவேணும்?

கம: இன்றைக்குத் திகதியென்ன?

ஞானி: கலண்டரைப்பார்

கம: பார்த்துவிட்டு வந்துதான் கேட்கிறேன்.

ஞானி: ஆமாம் இன்றைக்கு என்ன திகதி?

கம: (கோபமாக) நல்லாய் இருக்கு! ரொம்ப நல்லாய் இருக்கு! ஏனங்க உங்களுக்கு இந்த உலகத்தைப் பற்றிய எண்ணமே கிடையாதா?

ஞானி: இல்லாமலா? இப்படி இரவு பகலாக எழுதிக் கொண்டிருக்கிறேன். கமலம் காலமும் நேரமும் மிக வேகமாகப் போய்க்கொண்டிருக்கு. அதை விட்டு விட்டால் மீண்டும் இழுத்துக்கொண்டு வந்து கட்டிவைக்க முடியாது. தயவுசெய்து என் சிந்தனையைக் குழப்பாதே. (நாற்காலியின்மீது மீண்டும் அமர்ந்துகொண்டு சிந்தனையில் ஆழ்ந்து விடுகிறான். கமலம் ஆத்திரம் சீறிட குமுறி வெடிக்கிறாள்)

கம: எழுத்து... எழுத்து... எழுத்து... எப்ப பார்த்தாலும் இதே வேலைதானா? என்னங்க இதைவிட வாழ்க்கையிலே வேறெதுவும் இல்லையா? (தொடர்ந்து) இன்றைக்குத் திகதி 29 ஆய்ச்சே நாளைக்கு இந்த வீட்டு வாசலில் எத்தனைபேர் வந்து நிற்கப் போகிறார்கள்.

ஞானி; (அமைதியாக) நாங்கள் எந்தப் பதவிக்கும் விண்ணப்பம் கோரவில்லையே?

கம: ஆமாம்... வெட்டிப் பேச்சில் ஒன்றும் குறைச்சல் இல்லை. நீங்கள் விண்ணப்பம் கோரத் தேவையில்லை. எங்க வயிறு மனுப்போட்டு விடும். கடன்காரர் எல்லாம் வந்து நிற்பாங்கள் வீட்டு வாசலில்! என்னங்க, குழந்தைக்குப் பால் முடிஞ்சு மூன்று நாளாச்சு. மற்றச் சாமான்களும் இல்லை, இப்படிக் குத்துக்கல் வாட்டம் இருக்கிறீர்களே. இவைகளைப்பற்றி கொஞ்சம் யோசிச்சீங்களா?

(அவன் நாற்காலியை விட்டு எழுந்து. மேசையில் இருந்த பாதிச் சிகரெட்டை எடுத்துப் பற்றவைக்கிறான்)

கம: என்னங்க... பேசாமல் இருக்கிறீங்க?

ஞானி: உன் அப்பாவுக்கு ஒரு கடிதம் எழுதிப்போட்டு விடு.

கம: அப்பா... சீ, என்ன வாழ்க்கையிது...? எல்லாவற்றிற்கும் அப்பாதானா...? இன்னொருவர் கையை எதிர்பார்த்து குடும்பம் நடாத்த உங்களுக்கு வெட்கமாயில்லை...?

ஞானி: (புகையை ஊதியவாறு) கொஞ்சம் நிதானமாகப் பேசு கமலம்.

கம: நிதானத்தோடுதான் பேசுகிறேன். நீங்கதான் நிதானத்தை இழந்திட்டீங்க இல்லாட்டி, இப்படிப் பேசவே மாட்டீங்க என்னங்க... உங்க நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்க— உங்களுக்கு வெட்கமாக இல்லை...?

ஞானி: (சிரித்து) கமலம்... கமலம்...

கம: என்னமாதிரி கை நிறைய சம்பளத்தோடு ராஜாபோல இருந்த உத்தியோகத்தையும் உதறித் தள்ளிப்போட்டு. இப்படி வீட்டோடு இருந்து உள்ளதையும் ஒழிச்சு, ஒட்டாண்டியானது மல்லாமல் பிறர்கையை எதிர்பார்த்து வாழ்வதுதான் உங்க இலட்சிய வாழ்வோ?

ஞானி; கமலம், வாழும் வாழ்க்கை நிகழ் காலத்துடன் மட்டும் முடிந்துவிடக் கூடாது. எதிர்காலத்திலும் அது சிரஞ்சீவித்துவம் பெறல்வேண்டும். என்னுடைய இலட்சியத்தை நீ சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.

கம: இல்லை, வாய், வயிறு. உணர்ச்சி எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு வாழ்க்கையும் உண்டு என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை.

ஞானி: இப்ப... உன்னோடு விவாதிக்க எனக்கு நேரம் சரிப்படாது. நான் எழுத வேண்டியவைகள் நிறைய இருக்கு. போ... போய் உன் வேலையைக் கவனி... போ...

கம: நிறுத்துங்க. எப்பப் பார்த்தாலும் போ போவென்றுதான் சொல்லுகிறீர்களே! இந்த உலகத்தை விட்டு ஒரேயடியாக ஒழிந்து போவதற்காவது ஒரு வழி சொன்னீங்களென்றால் உங்களுக்குக் கோடி புண்ணியமாக இருக்கும். இரவும் பகலும் வந்து வந்து பேசய்க் கொண்டிருக்கும் என் வாழ்க்கையோ சர்வமும் ஒரே இருள்மயமாகத்தான் நீண்டு கிடக்கு. என்ன வாழ்க்கை இது...? சீ... (அலுத்துக் கொள்ளல்)

என்னங்க குழந்தைக்குப் பால் வாங்கணும்... சில்லறைக் கடைக்குக் கடன் இறுக்க வேணும்?

ஞானி: (சிறிது கோபமாக அப்பாதான் நேற்றுப் பணம் அனுப்பினதாகச் சொன்னாயே? பிறகேன் என்னை நச்சரிக்கிறாய்? போ... போய் எனக்குக்கொஞ்சம் கோப்பி கொண்டுவா...!போ...

(அவன் ஒரு புத்தகத்தை எடுத்துப் பிரித்துக்கொண்டு எழுந்து உலவுகிறான். கமலம் உட்சென்று சில விநாடிகள் செல்ல, கோப்பியுடன் வந்து அதை அவனுக்கு வழங்குகிறாள். அவன் அதைச் சுவைத்துப் பருகுகிறான். கமலம் பரிவுடன் அவனை நெருங்கி )

கம: என்னங்க...?

ஞானி: ம்...

கம; என்னங்க நான் பொன், பொருள், என்று எதுவுமே உங்களிட்டைக் கேட்கயில்லை. ஆனா, நம்ம குழந்தைக்கு, அது காதில் ஒரு சின்னக் குச்சியும் இல்லாம பொம்பிளைச் சட்டையைப் போட்டுட்டு அது தத்தித் தத்தி வருகிறதைப் பார்க்கப் பெற்ற வயிறு பத்தி எரியுது. அண்டை அயலார் கூட குழந்தையை ஆணு பெண்ணு என்று விசாரிக்கிறார்கள் ...... என்னங்க குழந்தைக்கு ஒரு பவுண் குச்சி தட்டிப்போட்டா எவ்வளவு வடிவாகவிருக்கும், உலகத்தில் என்னென்ன மாதிரியெல்லாம் பிள்ளைகளுக்குச் [illegible]ரித்து அழகு பார்க்கிறாங்க ... (அவர் குமுறி அழுகிறாள் )

ஞானி; கமலம் என்ன இது ...? ஏன் அழுகிறாய் ... கமலம் ... பட்ஜெட்டே உன் கையில்தானே இருக்கு ... — நான் என்னமறுக்கவாபோகிறேன்...?

கம! அப்படீன்னா சில்லறைக்கடைக்காசில் கொஞ்சத்தைப் பிடிச்சு ஒன்று வாங்கிடட்டுமா?...

ஞானி: (சாதாரணமாக) இனிமே நான் எழுதலாமல்ல ...

(அவள் சிரிக்கிறாள். அவன் தேநீர்க்கோப்பையை அவளிடம் தந்து. மீண்டும் நாற்காலியில் சென்று அமர்கிறான். அவள் உட்செல்கிறாள்.

சிலவிநாடிகள் கழிய மாதவன் வெளியே இருந்து அங்கு வருகிறான்.)

மாத: (வந்து) ஞானி ...

ஞானி: (மௌனம்)

மாத: அருகில்சென்றுமுதுகில் தட்டி) அவ்வளவு ஆழ்ந்த சிந்தனையா...?

ஞானி: (திடுக்குற்றுத் திரும்பி) ஓ ... ...மாதவனா ... ...? வாருங்க.

(பூரிப்புடன்) வாருங்க ... (எழுந்து) உட்காருங்க...

(மாதவன் அமர்ந்துகொள்கிறார்.)

எப்படி உங்க இலக்கிய முயற்சிகளெல்லாம் — நீங்க எழுதிய ஒரு கதையைச் சமீபத்தில் 'ஈழநாடு' வார இதழில் படிச்சேன். அற்புதம். ஆழமான கருத்து. (கைகளைப் பிடித்து) என் பாராட்டுக்கள்.

மாதவன்: நன்றி.

ஞானி: சமீபத்தில் நூல் ஒன்று வெளியிடவிருப்பதாக அறிந்தேன்...

மாத: அதைப்பற்றித்தான் இப்போ சிறிது பேச வேண்டியிருக்கு ...

ஞானி: தாராளமாகப் பேசலாம். நல்ல சிந்தனைகள் நூலுருப்பெறுவது மிக மிக அவசியம்.

மாத: ஆனால் ...?

ஞானி: என்னது ... ... ... சொல்ல வந்ததை மனம் விட்டுச் சொல்லுங்க...'

மாத: பணமுடைதான். மிகவும் கஷ்டமாக இருக்கு ... அதனால் எழுத்தாள நண்பர்களைச் சந்தித்து அவரவர் தகுதிக்கேற்ப சிறிதளவாவது உதவும்படி கேட்டு வருகிறேன். பாம்பின் கால் பாம்புக்குத் தெரியாமலா போகும். தங்களிடமும் ...

ஞானி: அப்படியா...? இருங்க வருகிறேன்.

(10-ம் பக்கம் பார்க்க)

இன்றே வருக! நன்றே கொள்க!!

தங்க, வைர நகைகள்

வியாபாரத்தில்

முன்னணியில் நிற்கும் சிறந்த

நாணயமுள்ள ஸ்தாபனம்

ராணி

ஆபரண மாளிகை

224, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

மனேஜர்: A. KARAPUTUGALA.

'ஈழநாடு' பரிசு பெற்ற காவியம்

# தித்திக்கும் தேன் நிலவோ!

— ச. வே. பஞ்சாட்சரம் —

## 12 சித்தன் போக்கிலே

நச்சியின் போக்கில் நாளொரு மாற்றம்!
உச்சம் நோக்கிப் பொழுதோ ருயர்வு
தோட்டத் துள்ளும் வீட்டின் உள்ளும்
சுற்றிச் சுற்றிக் கிடந்த பழக்கம்
சற்றுக் குறைந்து தனியினி யாடும்
அசைத்திடல் இல்லறத் தடைத்திடல் அரிதென
விசைத்தெழுந் துணிவில் வெளியில் மெல்லத்
திரியத் தொடங்கினன் திரிந்தது மெல்லாம்
ஊர்தொறும் கோயில் உறுவிழாக் காண
சட்டி கவிழ்த்த தலையாய்ச் சடையும்
தொட்டுத் தடவும் சும்மைத் தாடியும்
அள்ளிப் பூசிய அழகுநீற் றுடலும்
ஒள்ளிய கண்ணும் ஒருநினை வுள்ளமும்
முழங்கால் மேலே மூடிய ஆடையும்
முழங்கி மெல்ல முத்திக் குய்க்கும்
தேவார திருவாச கம்திருப் புகழ்ப்பா
அருள்மணம் வீசும் அழகிய வாயும்
திருவிளை யாடற் காட்சிச் சிந்தையும்
கொண்டுளன் நச்சி கூடிய வரையும்
தொண்டர் தனக்குத் தோன்று வண்ணம்
தடுத்துக் கொண்டான்! தனிமையை அவர்கள்
கெடுத்தால் இறைவன் கிளர்கொண் டாட்டம்
கெடுமெனும் அச்சம் காரணம்! வீட்டில்
அவனைக் காண அருள்முகம் பார்க்க
சிவனைக் காணும் திருப்பேறு அடைய
கூட்டங் கூடி வருவோர்க் கெல்லாம்.
தோட்டத் துள்ளே சுற்றிலு முளதம்
தோட்டம் விட்டுச் சூழ்பவர்க்கெல்லாம்
அருள்விழி நோக்கை அளித்தனுப் பிடுவான்!
அவன் மனத் துள்ளோ ஆசைகள் அழித்துச்
சிவன்படைத் திட்ட செம்மைச் சாம்பரில்
தெய்விக ஆற்றல் எனும்பயிர்ச் செடிகள்
உய்வன பலவாய்! ஓங்குவ பலவாய்!
போங்கா லத்தவிப் பொருந்துகா லம்இனி
ஆங்கா லத்தவும் அழகாய் மனக்கண்
காணத் தொடங்கிக் கண்டவற் றுயர்ந்தவை
பேணத் தொடங்கிப் பேதை மனிதர்
முத்திக் குழைக்க முனையச் செய்யும்
அத்தகு காட்சிகள் அனைத்தும் வந்தான்!
பக்கத் தூரில் தக்கா னொருவன்
வறுமை யுள்ளும் மனம் வழி தவறான்!
பொறுமை பூண்டே புண்ணிய நெறியில்
வாழ்ந்து மடிந்தான்! வானகம் பெற்றான்!
தாழ் மனத் தொருவன் தன்பிழை கருதான்
பிறர்பிழை பெரிதாய்ப் பேசிப் பேசி
உறுபழி தேடி உற்றான் நரகே!
இச்சை திர இழிந்தவை செய்து
துச்ச மாயுயிர்ச் சுகமிழந் தலைந்தான்!
இம்மையுள் நலிந்தனன்; அம்மையும் நரகே!
நினைவு பேச்சு வினைகள் தம்மை
தினமும் விடியச் சிவனுக்காக்கிப்
பழிகள் குறைந்து பண்பு நிறைந்து
அழிவில் முத்தி அடைந்தா னொருவன்!
கோயிற் சொத்தைக் கொள்ளை யிட்டு
வாயிற்போட்டு வருவோ னொருவன்
நாயிற் கடையாய் நரகத் துறுவன்!
போயங் கெவரோ புத்தி சொல்வர்
இன்னுங் கிழமை இரண்டில் நாட்டில்
மின்னி இடித்து மிகுமழை பொழியும்!
ஐந்து நாட்கள் அடுத்துப் பெய்யும்!
அந்த மழையில் இவ்வூ ரறிவுக்
கூடம் ஒன்று கொண்டடி வீழும்
சாடல் கூடும் சார்கில் சிறுவர்!
என்றிவ் வாறெடுத் தியம்ப நச்சி
சென்றது ரெல்லாம் செய்தி! கிழமை
இரண்டில் வானம் இருண்ட திடித்த
திரவாய்ப் பகலாய் இரைந்து குளிர்ந்து
பெருமழை பெய்தது! பிள்ளைகள் பள்ளி
சென்றிலர்! இப்படிச் சென்றன இருநாள்!
மூன்றும் நாளில் முழங்கக் கூடி
ஆன்றவன் சொல்போல் அடித்தது புயலும்!
பள்ளிக் கட்டடம் பட்டிடி சாய்ந்துார்
உள்ளவர் நெஞ்செலாம் ஒடுங்க அதிர்ந்தது!
கடமை உணர்வாற் கடவுளை நம்பிப்
பள்ளி வந்த பலவா சிரியர்
பிள்ளைகளின்மையாற் பேசா தேகி
உயிர்பிழைத் தார்கள்! பெயலிடை யேயும்
நிகழ்ச்சியும் நச்சி புகழ்ச்சியும் இலங்கை
எங்கும் பரந்தது! இளந்துற விதனை
தங்கள் குருவெனச் சாற்றத் தானே
நச்சியா சிரியரும் நச்சினர் அன்றே!
'அட' என் றழைக்க அம்மா அப்பா
அடைந்தார் அச்சம்! கவன்றான் நச்சி!
நச்சி என்று நாளும் அழைப்பவர்.
அச்சங் கொண்டனர் அப்படி அழைக்க!
தலையைத் தாழ்த்திச் சாமி என்றனர்
ஊரா ரெல்லாம் ஒருவிதக் களிப்பில்
சீரார் சிந்தைய ராகி இங்கே
ஒருமடம் கட்டி உயர்நச் சியினை
இருத்தா விட்டால் இன்னோர் ஊரார்
முந்திக் கொள்வர் முயல்வோ மென்று
சொந்தமாக்கத் துடித்தனர்! கொடியோ
வானுற ஓங்கிய நச்சியின் வளர்ச்சி
தானுறு வளர்ச்சியாய்த் தாவி மகிழ்ந்தனன்!
ஆயினும் அவனைக் காணும் வாய்ப்புந்
தேய்வது நினைந்தே சிந்தை நொந்தாள்!
பலருந் தன்னைப் பற்றி நினைவதை
இலகு வாக எண்ணத் துணரும்
நச்சி மனத்திரை நடுங்கும் வண்ணம்
பிச்சி கொடியின் பெருந்துயர் தெரியும்
(தொடரும்)

# கனவில் கண்ட 'கிருஷ்ணு'வை நேரில் தரிசித்த அன்னை

[உழைப்பே யோகம். அதுவே உலகை உய்விக்கும் என்று போதிக்கும் அரவிந்த ஆச்சிரமத்து அன்னையின் பெருமைகளைப் பற்றி பேசுகின்றது இக்கட்டுரை.]



தொண்ணூற்று இரண்டு ஆண்டுகளுக்குமுன் பிரான்ஸ் தேசத்துத் தலைநகரான பாரிஸ்மா நகரில் 1878-ம் ஆண்டு 2-ம்மாதம் 21-ம் திகதி பாண்டிச்சேரி அரவிந்த ஆச்சிரமத்தின் அன்னை அவதரித்தார். சிறுவயதிலிருந்தே தன்னந்தனியே இருந்து தன்னை அறிவதில் ஈடுபட்டார். காலந்தாழ்த்தியே பள்ளிப் படிப்புக்கு அனுப்பப்பட்டார். எனினும் கல்வி கற்பதில் விரைவிலேயே ஆர்வம் காட்டியதுடன் அதில் முன்னேறியும் வந்தார். ஓவியத்திலும் சங்கீதத்திலும் திறமையுள்ளவராகத் திகழ்ந்தார் உடன் மாணவர்கள் இவரிடத்தில் ஒரு விசேஷத் தன்மையைக் கண்டார்கள். தமது முறைப்பாடுகளையும் பிரச்னைகளையும் அவரிடம் எடுத்துக்கூறி, அவர் கூறும் முடிவுகளை ஏற்று அதன்படி நடந்தார்கள்.

சிறுமியாக இருக்கும் பொழுதே அவர் அண்மையிலுள்ள காட்டில் உலாவுவது வழக்கம். குறிப்பிட்ட ஒரு பெரிய மரத்தடியிலிருந்து மணிக்கணக்கில் இயற்கை அன்னையுடன் ஒன்றிப்போய் விடுவார். பட்சிகள் அணில்கள் போன்ற பிராணிகள் அவருடன் அச்சமின்றி உறவாடும்.

பன்னிரண்டுவயது தொடங்கியே திவ்வியதரிசனங்களைக் கண்டுவந்தார். அவர் 'கிருஷ்ணு' என்றழைத்த ஒரு முகம் திரும்பத் திரும்ப அவருக்குத் தரிசனமளித்தது. உலகத்தின் பாரம் தன்னை அமர்த்தியதுபோலவும், அப்பாரத்தினைத் தாம் தொட்டதும் அது நீங்கியதுபோன்றும் அவர் கனவு காணுவது வழக்கம். கனவில் கண்ட பெரியோர்களை பின் நேரில் சந்தித்தார். 'கிருஷ்ணு' என்றவரைமாத்திரம்அநேக ஆண்டுகளின்பின்பே அவர் கண்டார்.

அவரது கணவன்போல் றிச்சாட் ஸ்ரீ அரவிந்தரைப் பாண்டிச்சேரியில் 1910-ல் கண்டார். மகான்களில் ஸ்ரீ அரவிந்தர் மிக்கப் பெரியவரென்றும் அவர் எதிர்கால வீரனென்றும் குறிப்பிட்டார். அம்மையார் 1914-ல் பாண்டிச்சேரிக்கு வந்து ஸ்ரீ அரவிந்தரைச் சந்தித்தார் தான் கனவில் அடிக்கடி கண்ட 'கிருஷ்ணு' ஸ்ரீ அரவிந்தர்தானென அறிந்துகொண்டார். 'எனது ஆத்மீகத்துணை இவர்தான்' என ஒருவருக்கொருவர் அறிந்துகொண்டனர்.

1914-ம் ஆண்டு தொடங்கப்பெற்று ஆறு ஆண்டு காலத்திற்கு மேலாக மாதா மாதம் வெளிவந்த 'ஆரியா' என்ற தத்துவஞான மாதப் பத்திரிகை வெளியிடுவதற்கு உறுதுணையாக அம்மையார் இருந்துவந்தார் முதலாவது உலக யுத்த காலத்தில் அம்மையார் பிரான்ஸ் திரும்பினார். பின் ஜப்பானில் சிறிது காலம் கழித்தார் 1920-ல் அம்மையார் பாண்டிச்சேரி திரும்பி ஸ்ரீ அரவிந்தருடனும் அவரது சீடர்களுடனும் நிரந்தரமாக வாழத் தொடங்கினார் 24-11-26 ல் ஸ்ரீ அரவிந்தர் ஒருவரையும் காணாத முறையில் தனது தவத்தைத் தொடங்கிய காலந் தொடக்கம் ஸ்ரீ அரவிந்த ஆச்சிரமத்தின் அன்னையாக அம்மையார் திகழ்கின்றார் 1926 ல் இருபத்தைந்து சாதகர்கள்வரை இருந்தனர் தற்சமயம் ஆச்சிரமம் 1500க்கு மேற்பட்ட சாதகர்களைக் கொண்டுள்ளது சர்வதேசக் கல்வி நிலையம் ஆச்சிரமத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது

அம்மையார் நாற்பது ஆண்டு காலம் நடாத்திவந்த ஆச்சிரமம் உலகத்தில் ஒரு தனி உலகமாகத் திகழ்கிறது கல்வி சித்திரம் தொழில்கள் விவசாயம் ஆகியவை ஆச்சிரமத்தில் இடம் பெறுகின்றன இவையாவும் யோகமாகக் கருதப்படுகின்றன ஸ்ரீ அரவிந்தர் யோகம், வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் அடக்கியுள்ளதெனஎடுத்துரைத்தனர் தான், தன்னுடையது என்ற எண்ணம் முளைப்புக் கொள்ளாது கடவுளுடையது என்னும் எண்ணத்துடன் எல்லா முயற்சிகளையும் கடவுளுக்கு அர்ப்பணம் செய்து வாழ்வதே தெய்வீக வாழ்வென அம்மையார் எடுத்துரைக்கின்றார் ஆச்சிரமத்தில் சாதகர்கள் இந்த அடிப்படையிலேயே தங்கள்

(14ம் பக்கம் பார்க்க)

## அன்னையின் அருள் மொழிகள்!

நன்நம்பிக்கை, நல்லார்வம், உள்ளத் துணிவு இவைகளே நோய்களுக்கெல்லாம் மிகச் சிறந்த ஔஷதங்களாகும்.

0 0 0

நமது முயற்சி இப் புவியின்கண் ஒற்றுமை, ஞானம், உணர்வு, சத்தியம் இவைகளை நிரந்தரமாக நிலை கொள்ளச் செய்வதே.

0 0 0

முக்கியமானது இது தான். இறைவனுடைய சத்தியத்தை. அன்புடனும், மகிழ்ச்சியுடனும் பின்பற்றுவதே.

0 0 0

பிறர்செய்வது. நினைப்பது, சொல்வது, நம்மைத் தீண்டுமாயின் அது நமது பலவீனத்தையே குறிக்கும்

0 0 0

ஒரு மக்களிடை அல்லது ஒரு நாட்டில் குழப்பம் நிலவும்போது அதை சமாளித்து வெல்வதற்கான மிகச் சிறந்தமுறை உண்மையின்பால் ஆர்வமுற்று அதற்குப் பணியாற்ற தயாராயிருப்பதே.

## கலைக்கு ஒரு

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

கிய பதவிவகித்தவர். எமது ஊருக்கூடாகச் செல்லும் முக்கிய தெரு 'ஈழகேசரிப் பொன்னையா வீதி என இன்றும் அழைக்கப்படுகிறது.

எமது கிராமத்தைக் கல்வித்துறையிலும் ஆத்மீகத் துறையிலும் உயர்வடையச் செய்த பெருந்தகை திரு. பொ. பரமானந்த உபாத்தியாயர் அவர்கள் 19 0-ம் ஆண்டு சைவப் பாடசாலையை அமைத்து சைவ முறைப்படி அதை நிர்வகித்தமையால்தான் எமது கிராமத்தவர் அனைவரும் சைவ நெறியில் நின்கின்றனர். எமது கிராமம் ஒரு சுத்தச் சைவக் கிராமம் என்றால் அந்தப் பெருமையில் பெரும் பங்கு திரு பொன். பரமானந்தர் அவர்களையே சாரும்.

எமது கிராமத்தவர்களது ஆங்கிலக் கல்வியை வளம் செய்த பெரியார் திரு மா. சின்னப்பு ஆசிரியர் ஆவர். ஆங்கில உச்சரிப்பு- அடிப்படை இலக்கணம் என்பவற்றைக் கற்பிப்பதில் இவருக்கு நிகர் இவரே. இவரிடம் ஆங்கிலம் கற்றவர்கள் பலர் வலி வடக்கில் சுத்தமாக ஆங்கிலம் பேசுகின்றவர். நமது கிராமம் ஈன்ற வல்லுனர்களில் இவரும் குறிப்பிடத்தக்கவர்.

ஒருநாட்டின் சீரிய வாழ்வு அந்நாட்டின் செல்வத்தைப் பொறுத்தே இருக்கிறது. கிராமங்களைப் பொறுத்த மட்டிலும் இது பொருந்தும். இதை உணர்ந்தோ என்னவோ 1912-ம் ஆண்டிலேயே கெக்கரா என்னும் காட்டுப்பகுதியில் வியாபாரத்தை ஆரம்பித்து விவேகத்தாலும் திறமையாலும் பொருளீட்டியவர் வர்த்தகப் பிரமுகர் திரு. பூ. சுப்பிரமணியம் அவர்கள் 'சுப்பிரமணிய மஹால்' என்ற வியாபார மாளிகை இன்றும் அவர் ஞாபகமாய் கெக்கராவில் நிமிர்ந்து நிற்கிறது. அவர் காட்டிய வழியில் சென்ற பலர் வர்த்தகத்தில் மேம்பட்டு எமது கிராமத்துப் பொருளாதார வளத்தைப் உயர்த்திவிட்டனர்.

ஒரே கண்ணோட்டத்தில் எமது கிராமத்தை ஆழ்ந்து அவதானித்தால் கல்வி, செல்வம், கலை சமயம், சமூகம் போன்ற எல்லா முக்கிய துறைகளிலும் திருப்திகரமான அளவு வளர்ச்சியை அவதானிக்க முடிகி

# ஐக்கிய ரேகையும் குடும்ப விவகாரமும்

## கைரேகை அனுபவம் — 8

பலர் தங்கள் வாழ்வில் குடும்பத்துடன் சந்தோஷமாக வாழ்கின்றார்கள். அப்படிப்பட்டவர்களின் ஐக்கிய ரேகை நன்றாயமைந்திருக்கும். அதாவது புதன் மேட்டடியில் ஐக்கிய ரேகையானது எதுவித வெட்டோ, பிளவோ, தீவோ அதில வளைவோ இல்லாமல் இருக்கும். அத்துடன் பெரும்பாலும் ஒரேயொரு ஐக்கிய ரேகை மாத்திரம் இருக்கக் காணலாம். இருதயரேகையிலிருந்து கிளைகளோ அல்லது வெட்டோ இல்லாமலிருக்கும்.

ஓர் ஆணினுடையதோ அல்லது பெண்ணினுடையதோ வாழ்க்கை நன்றாகப் பிரகாசிப்பது குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்ட பின்பாகும். இவர்கள் தனித்தனியே வாழும்பொழுது பொறுப்புக்களும், வாழ்க்கை அனுபவங்களும் குறைவாகவேயிருக்கும். குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்ட பின்னர் அநேகரின் வாழ்க்கை நிலைமையில் மாறுதல் ஏற்படுகின்றது. செல்வச் செழிப்புடன் வாழ்ந்தவர்கள் தொடர்ந்தும் செல்வத்தோடும், செழிப்போடும் வாழ்கின்றனர். சிலர் துரதிஷ்டவசமாக நோய்வாய்ப்பட்டும் தொழிலையிழந்தும் குடும்பத்தைப் பிரிந்தும் வாழுகின்றனர். ஆண்களுள் சிலர் எதுவித முன்னேற்றமும் இல்லாமலிருந்து விவாகம் செய்த பின்னர் நல்ல நிலையை அடைகின்றனர். பெண்களுடைய பலன் குடும்பத்தில் ஈடுபட்ட பின்னர் ஆணினுடைய பலனுடன் சேர்ந்து தொழிற்படுகின்றது. சில ஆண்களினுடைய கையில் தொழிலுக்குரியதான விதிரேகையோ, செல்வாக்குக்குரிய சூரியரேகையோ இல்லாதிருக்க காணலாம். ஆனால் அன்னாரின் மனைவியின் கையில் தொழிலுக்கும், செல்வாக்குக்கும் உரிய ரேகை இருக்கக் காணலாம். இதனால் கணவன் செழிப்புள்ளவராகவிருப்பர். இதனால் ஏற்படும் சீர்சிறப்பெல்லாம் மனைவிக்கும் உரியதாகின்றது. சில ஆண்களினுடைய கையில் தொழிலுக்கும், செல்வாக்குக்கும் உரியரேகைகளிருக்கக் காணலாம். ஆனால் அவர்களுடைய மனைவிமார்களின் கைகளில் செல்வச் செழிப்புக்குரிய ரேகைகள் இல்லாமலிருக்கும். இவ்வாறு இருந்தும் அவர்களுக்கு ஏற்படும் சுகம், துக்கம் ஆகியவைகள் அவர்கள் இருவருக்கும் உரியதாகவேயிருக்கின்றது. (விளக்கத்திற்கு கைரேகைப் படத்தையும் முன்னைய தொடர்களையும் பார்ப்பது நன்று.)

புதன் மேட்டில் (ரேகை இலக்கம் - 4 d - பகுதி) இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட ரேகைகளோவிருப்பது விரும்பக்கூடியதல்ல. அவ்வாறு இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட ரேகைகளிருப்பவர்கள் பலதரமான துன்பத்தை அனுபவித்துள்ளனர். அதற்கான சில உதாரணங்களை எடுத்துப் பார்ப்போம்.



(அ) பெண்களுக்கு இரண்டு ஐக்கிய ரேகைகள் இருப்பது நல்லதல்ல. ஒரு பெண்ணினுடைய கையில் இரண்டு ஐக்கிய ரேகைகள் இருந்தன. அந்தப் பெண்ணுக்கு பிறதேசத்தில உத்தியோகம் பார்க்கும் ஒருவருக்கு விவாகம் நிச்சயிக்கப்பட்டது. விவாகமும் வெகு சிறப்பாய் நடந்தேறியது. விவாகம் முடிந்து சில காலங்களுக்குள் குடும்பத்தில் சண்டை சச்சரவு உண்டானது. கணவன் மனைவியருக்கிடையே ஒருவரில் ஒருவருக்கு மனக்கசப்பு ஏற்பட்டது. அந்தப் பெண் உறவினர் ஒருவருடைய அன்பிற்குரியவராக வாழ்ந்தாள். கணவனுக்கு விடயம் விளங்கிவிட்டது. கணவனைத் தன் வசப்படுத்த மனைவி பெரிதும் முயன்றாள். இறுதியில் முயற்சி தோல்வியில் முடிந்தது. முடிவில் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் கணவனிடம் ஜீவனாம்சம் பெற்றார். (கணவன் என்ற பெயரளவில் வாழ்ந்தான்) இரண்டு ஐக்கியரேகைகள் உள்ள பெண்களிற் சிலர் பெயரளவில் ஒரு துணையையும், மறைமுகமாக ஒரு துணையையும் வைத்திருக்கக் காணலாம். ஆண்களின் கரத்தில் இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட ரேகைகளோவிருப்பது விரும்பக் கூடியதல்ல. அவ்வாறான ஆண்கள் சிலர், பிறர் மனைவி விரும்புபவர்களாகவும், மது அருந்தியும், வேறு தீங்கான அலுவல்களைச் செய்தும் குடும்பத்தில் அமைதியின்மையை ஏற்படுத்துவர்.

(ஆ) ஓர் ஆணின் கையில் இரண்டு ஐக்கிய ரேகைகள் இருந்தன. அந்த ஆணுக்குத் திருமணம் பேசினர். ஆரம்பத்தில் திருமணம் முற்றாக்கப்படவில்லை. பலவிதமான பேச்சுவார்த்தைகளின்பின் திருமணப் பதிவுக்கு நாள் நிச்சயித்தனர். மணமகனுக்குச் சீதனமாக ஒரு வீடு கட்டித்தருவதாகப் பேசியிருந்தது. மணமகன் திருமணப் பதிவுக்குமுன் ஒரு பொழுதும் வீட்டைப் பார்க்கவில்லை. திருமணப் பதிவு நாளன்று இரு பகுதியினரும் எல்லா ஆயத்தமும் செய்திருந்தனர். மணமகன் தமது புதிய இல்லத்தைப் பார்த்தார். முன்பு பேசப்பட்டிருந்தபடி திருமணப் பதிவிலன்று வீடு அமைந்திருக்கவில்லை. இதனால் மணமகன் மனமுடைந்து திருமணப்பதிவுக்கு இணங்கவில்லை. பின்பு இரு பகுதியினரும் கலவரமான பேச்சுவார்த்தைகளுடன் காரியம் கைகூடாது பிரிந்தனர்.

(இ) ஒரு பெண்ணின் கரத்தில் இரண்டு ஐக்கிய ரேகைகள் இருந்தன. அந்தப் பெண்ணுக்கு விவாகம் நிச்சயித்தது. விவாகமும் வெகு சிறப்பாக நடந்தது. ஆண்டுகள் சில உருண்டோடின. சிலகுழந்தைகளும்பிறந்திருந்தனர். கணவன், மனைவி பிள்ளைகள் எல்லோரும் சில ஆண்டுகள் சந்தோஷமாகவும் எதுவித குறைவுமின்றியும் வாழ்ந்தனர். காலம் சென்றபின் கணவனுக்கு திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டது. அன்னார் மாரடைப்பினால் இறந்தார். பெண்ணினது, பிள்ளைகளினதும் நிலையும் அந்தரமாயமைந்தது. இரண்டு ஐக்கிய ரேகைகள் இருந்தால், ஏதோ ஒரு காரணத்தினால் முதல் விவாகம் குழம்பும். அவ்வாறில்லாமல் விவாகம் நடந்தால் அவர்கள் வாழ்க்கை சந்தோஷமின்றியே கழியும். நோய்வாய்ப்படுதல், அழகின்மை, அந்தஸ்தின்மை என்ற காரணங்களாலும் விவாகம் குழப்பமடையும். இவற்றிற்கெல்லாம் ரேகைகளின் அமைப்பே காரணமாகின்றது. ரேகைகளின் அமைப்பு விதிவசமானதே

படத்தில் தெரிவதுபோல p பகுதியாகிய மேடு புதன் மேடு எனப்படும். இந்த மேட்டில் ஐக்கிய ரேகைகள் இரண்டு இருக்கின்றன. ரேகை இலக்கம் 4 ஐப் பார்க்கவும். படத்தில் இரண்டு ஐக்கிய ரேகைகளும்,(ரேகை இலக்கம் 3) இருதய ரேகையிலிருந்து கிளைகள் கீழேயும் செல்வதைக் காணலாம். இவ்வாறு ரேகைகள் அமைந்திருப்பதனால் தீய பலனே ஏற்பட ஏதுவாகின்றது. இவ்வாறு இருந்தால் அன்னார் காதலில் ஈடுபட்டுத் தோல்வியுற்று பெரிதும் துன்பமடைவர். வீட்டிலுள்ளவர்களுக்கும், ஊரிலுள்ளவர்களுக்கும் செய்தி அம்பலமாகிவிடும். மக்கள் இதைப் பெரும் அவமானமாகக் கதைப்பர். காதலர்கள் பெரிதும் துன்பமடைவர். ஆனால் பரிகாரம் தேடமுடியாது தத்தளிப்பர். இந்த நிலையில் விதிரேகையும் இலேசானதாக சனிமேட்டில் காணப்பட்டால் அன்னார் அவமானத்துக்குப் பயந்து தூரதேசங்களிலும் சென்று வாழ்வர். இவர்களுடைய காதல் நிறைவேறுவதில்லை. அநேக தொந்தரவுகளின் பின், காலங்கள் கழிந்தபின் மீண்டும் திருமணப் பேச்சுக்கள் நடக்கும். திருமணம்வேறொருவருக்கே நடக்கும்.

படத்தில் தெரிவதுபோல c பகுதியாகிய மேடு சுக்கிர மேடு எனப்படும். சுக்கிர மேட்டிலிருந்து ஒரு புள்ளிக் கோடு d பகுதி மேடாகிய புதன் மேட்டிற்குச் செல்வதைக் காணலாம் இவ்வாறு புள்ளிக்கோடு சுக்கிரமேட்டிலிருந்து உற்பத்தியாகும் பொழுது அன்னாருக்கு விவாகப் பேச்சுக்கள் துரிதமாகவும், வெகுவிமரிசையுடனும் பேசப்படும். அதாவது அன்னாரை தெய்வம் எனக் கருதியே பேச்சுக்களும் கதைகளும் நடக்கும். எதிர்பார்த்தமுறையிலும்பார்க்க திருமணம் சிறப்பாக நடக்கும். ஐக்கிய ரேகையை இந்தப் புள்ளிக்கோடு வெட்டிக்கொண்டு செல்கின்றபொழுது குடும்பத்தில் தகராறு ஏற்படும். அத்தகையவர் நீதிமன்றமூலம் சென்று, அதாவது விரோதமனப்பான்மையினாலோ அல்லது சுமூகமான பேச்சுவார்த்தையினாலோ விவாகரத்துச் செய்வர்.

— மு. குணரத்தினம் —

# கனவில் கண்ட

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

சாதனைகளைச் செய்துவருகின்றனர்

இந்த அடிப்படை மாற்றம் முதலியன ஆச்சிரமத்திலும் இரண்டாவது இந்தியாவிலும் பின் உலகத்திலும் ஏற்படவேண்டும் என்பதே ஸ்ரீ அரவிந்தரின் விருப்பம்.

தனது சிஷ்யப் பிள்ளைகளுக்கு கண்கண்ட தெய்வமாக அம்மையார் இருந்தபோதிலும் தனது உடல் - அதனுள் இருக்கும் ஆத்மாவும் சக்தியற்றதுதானே ஒன்றும் செய்ய இயலாதது என்றும் கடவுளே சக்தியுடையவர். அவரே சகலதையும் ஆஞ்ஞாபிக்கிறார், அவரே சகலதையும் செய்கிறாரென அம்மையார் கூறுகின்றார்

அதற்காகவே அவர் தொண்டாற்றினார் அவருக்குப்பின் இப்பொழுது அம்மையார் தொண்டாற்றி வருகின்றார்

இந்த மாற்றம் அற்புதத்தால் அன்றி குறுக்கு வழியால் அடையமுடியாததென்றும் தன் மாற்றமும் உலக மாற்றமும் மிக்க சிரமமானதென்றும் குறுகிய காலத்தில் அடைய முடியாததென்றும் அம்மையார் அறிவர். அம்மையார் தமது சொற்களாலும், எழுத்துக்களாலும், தமது தவத்தாலும் இந்த மாற்றத்திற்கு வழிவகுப்பதுடன், தெய்வீகம் ஒன்றுள்ளது, அது நமது வாழ்க்கையை வழிப்படுத்துகிறதென்ற உண்மையை நமக்கு அறிமுகப்படுத்துகின்றனர். இந்தியா தனது முயற்சியினால் தன்னையும் உலகத்தையும் காப்பாற்றுமெனவும் அம்மையார் கூறுகின்றார்.

## நமது நூல் நிலையம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தரமான கட்டுரைகள், கதைகள், கவிதைகளைக் கொண்டு விளங்கும் இப்பத்திரிகை அமைப்பின் பொலிவிழந்திருப்பதைச் சுட்டிக்காட்டாமலிருக்க முடியவில்லை. அத்துடன் முன்னைய காலத்துப் பத்திரிகைகளை நினைவூட்டும் வகையில் குறுக்கெழுத்துப் போட்டியும் இடம்பெற்றுள்ளது.

—'ஈனு'

## விவசாயம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கூடிய விளைவு பெறுகிறார்கள். மேலும் இளம் விவசாயிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், நெற்காணிக் குழுக்கள், சிரமதானங்கள் போன்றவற்றில் ஈடுபட்டு நாட்டின் முன்னேற்றத்துக்கு ஒத்துழைக்கிறார்கள். இளைஞர் விவசாய கழகங்கள் 'விவசாய இலாகாவுடனும். அவற்றின் விருத்தி முயற்சிகளிலும், நிகழ்ச்சிகளிலும்' ஒத்துழைக்கும் குறிக்கோளை இங்ஙனம் அடிப்படையாகக் கொண்டு இயங்கி வருகின்றன.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

செவ்வாய் 19- -71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 பௌத்த நற்சிந்தனை, 6-40 துதிப் பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரை கானம், 8-00 இசை வேளை 8-15 பேச்சு, 8-30 சைவநீதி.

344 மீ. அன்ட் 49 மீ.

9-30 முஸ்லிம் நிகழ்ச்சி, 10-00 தொழிலாளருடன் 10-30 படத்திலிருந்து 11-15 சிறுவர் மலர், 12-00 எமது அதிதிகள், 1-05 பெண்ணுலகம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு, 4 45 சங்கமம், 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 பாட்டு, 6-15 மெல்லிசைப் பாடல்கள், 6-30 பெண்ணுலகம், 7-00 கத்தோலிக்க நிகழ்ச்சி, 7-30 விவேகச் சக்கரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 செய்தித் தொகுப்பு, 9-45 பாட்டு, 10-30 செய்தி தொகுப்பு.

## இரண்டடுக்குச் சுரங்கப்பாதை

உப்பர்தால் (டாட்)- ஐரோப்பாவில் முதன் முதலாக ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் இரண்டடுக்கு சுரங்கப் பாதை அமைக்கப்பட்டிருக்கிறது. உப்பர்தால் என்னுமிடத்தில் 1043 மீட்டர் நீளத்திற்கு மலையில் குடைந்து இந்தச் சுரங்கப் பாதை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. தொழில் வளமும் மக்கள் நெருக்கமும் மிகுந்த டஸ்ஸல்டார்ப் நகருக்கு இங்கிருந்து செல்லும் நேரம், இச் சுரங்கப்பாதைமூலம் கணிசமாகக் குறைகிறது. 1,80,000 ருத்தல் வெடி மருந்தைப் பயன்படுத்தி 1,35,000 கன மீட்டர் மலைப்பாதைகளை அப்புறப்படுத்திச் சுரங்கப்பாதைகளில் கடும் வேகத்துடன் கார்களைச் செலுத்தக் கூடாது. இதனைக் கண்காணிக்க டெலிவிஷன் காமிராக்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. வேகத்தை அளக்கும் கருவிகளும் அமைக்கப் பட்டிருக்கின்றன.

வெ ஸ்லி சினிமா (மானிப்பாய்)
தினசரி 3 காட்சிகள்
விஜயன் - ஜெயலலிதா
நடித்த
ஸீ. ஐ. டி. - 116
(புதிய தமிழ் வெளியீடு)

ராணி சினிமா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜிகணேஷன் -சரோஜாதேவி
நடித்த
அ ன் ப ளி ப் பு

மனோகரா- யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள் போயா நாட்கள் 10-30 மெற்னி



ராஜ்குமார் - ராதிகா - ஜோதிலட்சுமி
நடித்த
ஜாக்பாட்டில் ஸீ. ஐ. டி. 999

கடைசி வாரம்
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள். போயாநாட்களில் 4 காட்சிகள்
ஏ சு நா தர் - தமிழ்
இப்படத்துடன்
அண்ணாவின் இறுதியாத்திரை
எல்லாக்காட்சிகளிலும் காண்பிக்கப்படும்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயாநாட்கள் 4 காட்சிகள்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (கொழும்பு) மைலன் (கொழும்பு)



சிவாஜி - காஞ்சனா
எம். என். நம்பியார்
நாகேஷ் முத்துராமன்
இன்னும் பலர் நடித்த
சிவந்த மண்
(ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்)

கடைசி வாரம்
கிங்ஸ்லி 2-00, 6-00, 9 30
ஏ. வி. எம். ராஜன் வாணிஸ்ரீ சிவகுமார் நடித்த
அன்னையும் பிதாவும்

— சினிமா விமர்சனம்

# அன்பளிப்பு

நண்பர்களென்றால் எப்படியிருக்க வேண்டும்? என்னிடம் கேட்டால்—

'அன்பளிப்பு' சிவாஜிகணேசனையும் ஜெய்சங்கரையும் போல் இருக்க வேண்டுமென கண்மூடிக்கொண்டு பட்டெனச் சொல்லிவிடுவேன்!

'சின்னையா...சின்னையா...' என்று கூப்பிட்ட சிவாஜியைப் பார்த்த ஜெய்சங்கர் 'டேய் ராஜா' என்று கூப்பிடடா, இல்லாட்டி நான் போயிடறேன்' என்று சொன்னபோது—

'டேய் ராஜா' என்று கூறியபடியே கண்ணீர் உகுத்து என்ன செய்வது என்று தெரியாது திணறிய சிவாஜி அப்படியே ஜெய்சங்கரைக் கட்டித்தழுவிய காட்சி—

ரசிகர்கள் நெஞ்சை நிச்சயமாகத் தொட்டிருக்கும்!

விவசாயத்துக்கும் கைத்தொழிலுக்குமிடையே மோதலை ஏற்படுத்திக் கதை போகிறது!

கன்னடத்துப் பைங்கிளி சரோஜாதேவி சிவாஜிக்கு ஜோடியாக வருகிறார். சிவாஜி விவசாயியாக வந்தாலும் 'தேவி'யுடன் காதல் பாட்டுப்பாடி சக்கை போடுகிறார்! ஜெய்க்குப் பொருத்தமாக 'அலேக்' நிர்மலா கவர்ச்சியான ஜோடிகள்!

நாகேஷ், ராமசாமி. சச்சு சிரிக்கவைக்கிறார்கள். பாட்டுக்கள் இனிக்கின்றன.

யாழ். ராணித்திரையில் ஓடிக்கொண்டிருக்கும் 'அன்பளிப்பு'—

ரசிகர்களுக்கு நல்ல அன்பளிப்பு!

-யோகி

## அரிய சந்தர்ப்பம்

நம்மவர்களில் வலது குறைந்தவர்களாகிய வாய் பேச இயலாதவர்கள், காதுகேளாதவர்கள் ஆகிய இளம் வயதுள்ள ஆண்கள் பெண்களுக்கு எங்கள் ஸ்தாபனத்தில் நெசவுத் தொழில் பயிற்சி அளித்து அவர்கட்கு புனர்வாழ்வு அமைத்துக் கொடுக்க முன்வந்திருக்கின்றோம் விபரங்கட்கு 'வசந்தபுரம் சில்க்ஸ்' 7. 2-ம் ஒழுங்கை, பிரவுண் வீதி. யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு நேரில் வரவும்.

2731

## வரி விளம்பரம்

### தேவை

ஆசிரியர்:

H, S, C. பெண், G. C. E. ஆண் இருவருக்கும் ஆங்கிலம், தூயகணிதம் மாலையில் வீட்டில் கற்றுக் கொடுக்க திறமையும் அனுபவமும் வாய்ந்த ஆசிரியர் உடனே தேவை தகுந்த சம்பளம் கொடுக்கப்படும். யாழ்ப்பாணப் பட்டின எல்லைக்குக் கிட்ட உள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர் விரும்பத்தக்கது. விரும்புவோர் தொடர்பு கொள்ளவும், விளம்பர இலக்கம் 2650 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.

2650

### தேவை

சமையல் ஆள்

மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை தாதிமார் விடுதிச்சாலைக்கு அனுபவமுள்ள (பெண்) சமையல் ஆள் தேவை. விபரங்களுக்கு வைத்தியசாலை காரியாலயத்துடன் தொடர்புகொள்ளவும்.

2659

### ரியூசன்

சிங்களம்:

பத்து வருஷ அனுபவமுள்ள ஆசிரியையால் தமிழ் மூலம் சிங்களம் வார இறுதி நாட்களில் மாணவர்களுடைய நேரத்திற்கேற்ப கற்பிக்கப்படும். 383 A, நாவலர் வீதி, நல்லூர்.

2663

### விற்பனைக்கு

காணி

யாழ்ப்பாணம் கச்சேரி—நல்லூர் வீதியில் ஆசீர்வாதப்பர் கோயிலின் வலதுபுற எல்லையில் அமைந்திருக்கும் இரு கடைக்கட்டடங்களைக் கொண்ட இரு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. மற்றும் விபரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்- J. J. அற்புதராஜா, 'கிளவ் வளவு', மானிப்பாய்

2645

1 மாதக் கோழிக்குஞ்சுகள், 1 1/2 மாதக் கோழிகள் (14) முட்டையிடும் நிலையில், விபரங்களுக்கு 68, ஆஸ்பத்திரிவீதி, கொட்டடிச் சந்தி, யாழ்ப்பாணம்

2664

காணி

இயக்கச்சி - கண்டிரோட்டில் 10 ஏக்கர் தென்னையும் 20 ஏக்கர் திருத்தாத காணியும் வேறு பயிர்கள் உட்பட விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். நாகரத்தினம். 3/9, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை.

2662

A 40 ரேடியேற்றர் தாங்கிகளுடன் விற்பனைக்குண்டு தொடர்புகொள்ளவும் சி. தியாகராசா, 7. சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை.

2666

### கல்வி

சித்தி நிச்சயம் பகல் மாலை வகுப்புகளுக்கான பிரவேசங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஜீ.சி.ஈ சாதாரண கலை / விஞ்ஞானம் / வர்த்தகம், உயர்தர / வர்த்தகம், சிங்களம், சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கணக்கியல், வர்த்தக [illegible], உடுப்புத்தயாரித்தல். விடுதி வசதி உண்டு. யூனைட்டெட் மகளிர் கல்லூரி. நெல்லியடி, கரவெட்டி.

2574

# உதைபந்தாட்டச் சாம்பியன் போட்டி

யாழ்ப்பாணம், செவ்

இலங்கைப் பாடசாலைகளின் தெரிவுக்கோஷ்டிகளுக்கான உதைபந்தாட்டச் சம்பியன் போட்டிகள் இம்மாதம் 25, 26, 27-ந் திகதிகளில் யாழ்ப்பாணம் விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கின்றன.

25-ந் திகதி விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. கே. பி. இரத்நாயகா விளையாட்டுப்போட்டியை ஆரம்பித்து வைப்பாரென்றும் 27-ந் திகதி நிதிமந்திரி டாக்டர் என்.எம். பெரேரா வெற்றிக்கேடயங்களை வழங்குவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

பதுளைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சாம்பியன் கோஷ்டியான தர்மதூத்தா கோஷ்டி, தெல்லிப்பழை மகாஜன கோஷ்டி, கொழும்பு சாம்பியன் சாகிராக்கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, திருக்கோணமலை சென். ஜோசப்ஸ் கல்லூரி, நாவலப்பிட்டி சென். மேரிஸ் கல்லூரி ஆகிய கோஷ்டிகள் இப்போட்டிகளில் கலந்துகொள்கின்றன.

REGAL
Jaffna
Daily 4-45, 7, 9-45 p. m.
Poya days 4 shows
Peter Sellers
in
THE PARTY
(Technicolor)

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
சிவாஜி - கே. ஆர். விஜயா
நடித்த
திருடன்

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன் - சௌகார் ஜானகி
நடித்த
சக்கரம்

கல்கத்தாவில்

## இரு கட்சி மோதலில் 16 பேர் பலி

கல்கத்தா, ஜனவரி 18

கல்கத்தாவிலேற்பட்ட வன்முறைச் செயல்கள், வெடிகுண்டு வீச்சு, இரு கட்சியினருக்கிடையே ஏற்பட்ட மோதல் ஆகியவற்றால் 16பேர் கொல்லப்பட்டனர். 86 பேர் காயமடைந்துள்ளனர். கடந்த 12மணி நேரத்திற்குள் இக்கொலைகள் நடைபெற்றுள்ளன.

காங்கிரஸ் கட்சிக்கும் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளர்களுக்குமிடையே ஏற்பட்ட மோதலில் பலர் இறந்தனர். பொலிசார்மீது வீசிய குண்டு வெடித்ததால் பொலிஸ் ஒருவர் கொல்லப்பட்டார். பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஓர் இளைஞர் கொல்லப்பட்டார்.

கடந்த நாலு மாதங்களுள் மேற்கு வங்காளத்தில் 400 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மணி மொழிகள்

தீமை, தீங்கு செய்யாதவரை முட்டாள் அதைத் தேனாக நினைக்கிறான். தீமை, தீங்கு விளைவிக்கும்போது அவன் துன்பத்தில் உழல்கிறான்.

0 0 0

உயிர்கட்குத் துன்பம் செய்யும் எவனும் உயர்ந்தவன் ஆவதில்லை; உயிர்கட்குத் துன்பம் செய்யாதவனே உயர்ந்தவன்.

0 0 0

சில மலர்கள் கண்ணைக் கவரும் வண்ணங்கள் கொண்டவை. ஆனால் அவற்றில் மணம் இருக்காது. சொல்வதுபோல் நடக்காதவனுடைய சொற்களும் இம்மலர்களைப் போன்றவையே. கேட்பதற்கு இனிமையாக இருக்கும். ஆனால் பயன் இருக்காது.

0 0 0

குழம்பிலேயே தோய்ந்துள்ள கரண்டிக்குக் குழம்பின் சுவை தெரியாது; வாழ்க்கை முழுதும் அறிவாளியோடு பழகினாலும் முட்டாளுக்கு உண்மை புலப்படாது.

—புத்தர்




## பிரகடனம் தயாரிப்பதில்

# சாம்ராஜ்யப் பிரதமர்கள் மாநாட்டில் கருத்து வேறுபாடு

சிங்கப்பூர், ஜன. 18

சிங்கப்பூரில் நடைபெறும் சாம்ராஜ்யப் பிரதமர்கள் மகாநாட்டின் பிரகடனத்தைத் தயாரிப்பதில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

சிங்கப்பூரில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சாம்ராஜ்யப்பிரதமர்கள் மகாநாட்டின் பிரகடனத்தைத் தயாரிப்பதற்கு 31 அங்கத்தவர்களைக்கொண்ட செயற்குழு கூடி ஆராய்ந்தது. அங்கத்தவர்களிடையே கருத்து வேறுபாடு காணப்பட்டதாகவும், இவ்விஷயத்தை பெருந்தலைவர்கள் கூடி விரைவில் விவாதிக்கவிருப்பதாகவும் தெரிகிறது. சாம்ராஜ்ய நாடுகளின் பாதுகாப்பு, இன ஒதுக்கல் கொள்கை, சாம்ராஜ்யநாடுகளிடையே பொருளாதார உதவி பரஸ்பரஒத்துழைப்பு ஆகியவிஷயங்களில் கருத்து வேறுபாடு ஏற்பட்டதாக அறியவருகிறது. இக்கருத்து வேறுபாடு சாம்ராஜ்ய பிரதமர்கள் மகாநாட்டில் ஏற்பட்ட முதல்தோல்வி எனச் சொல்லப்படுகிறது

இன்று உலகப்பொருளாதார நிலைபற்றி மகாநாடு ஆராயவிருக்கிறது. சாம்ராஜ்ய நாடுகளின்எதிர்கால நிலைமை, இந்துமகாசமுத்திரத்தின் பாதுகாப்பு, தென் ஆபிரிக்காவிற்கு பிரிட்டனின் ஆயுதஉதவி ஆகியவை பற்றி செவ்வாய்க்கிழமை மகாநாடு ஆராயும். ஒரு நாட்டிலுள்ள முதலாளிகள் இன்னொரு நாட்டில் முதலீடு செய்தல், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு அபிவிருத்தியடைந்த நாடுகள் உதவிசெய்தல் போன்ற கருத்துக்களில் இந்தியா பலமான கருத்துக்கொண்டிருப்பதாக அங்கிருந்து வந்த செய்திகள் தெரிவித்தன.

## பிரிட்டனில் பயிற்சி இலங்கை வைத்தியருக்கு

(நமது நிருபர்)

கொழும்புத்திட்ட நுண்தொழில்உதவித்திட்டத்தின் கீழ் பிரிட்டிஷ் அரசாங்கம் அளிக்கும் மேற்படிப்புப் பயிற்சிகளைப் பெறவென பிரிட்டன் செல்லவிருக்கிறார் இலங்கை வைத்தியரான திரு. ராஜேந்திரம் ரவீந்திரன், தற்போது கொழும்பு அரசாங்கவைத்தியசாலையில் அங்கவீன அறுவைச்சிகிச்சைப் பிரிவில் ஆலோசக வைத்தியராகக் கடமையாற்றும் திரு. ரவீந்திரன், பிரிட்டனில் ஒருவருடப்பயிற்சி பெறுவார்.

லண்டன், எடின்பரோ அறுவை வைத்தியர்களுக்கான ரோயல் கல்லூரியில் பட்டம்பெற்றுள்ள திரு. ரவீந்திரன், பிரிட்டனில் முதல் சிலமாதங்கள் பயிற்சி பெற்றுவிட்டுப்பின்னர் பிரபல பிரிட்டிஷ் அறுவைவைத்திய நிபுணரான திரு. கை பல்வரப்ட் அவர்களின் கீழ் பயிற்சி பெறுவதுடன் பல ஆராய்ச்சிகளிலும் ஈடுபடுவார்.

## கோரிக்கைகளை வழங்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு ஆதரவளிக்கமுன்வந்துள்ளோம்.

தமிழ்காங்கிரஸ் தலைமைப் பீடமோ, தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணியோ இதற்கு இதுவரை எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. கடந்த தேர்தலில் போட்டியிட்ட தமிழ் காங்கிரஸ் அபேட்சகர்கள்கூட இதற்கு எதர்ப்புக்காட்டவில்லை. பெரும்பாலான தமிழ்மக்கள் எமது முடிவை ஆதரிக்கிறார்கள். வடபகுதியை சேர்ந்த பல தமிழ் காங்கிரஸ்வாலிபமுன்னணிகள் எமது முடிவை ஆதரித்து தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளது.

நல்லூர் எம்.பி திரு சி. அருளம்பலம் கூறியதாவது- அரசாங்கத்தை ஆதரிப்பதென்ற தமிழ் காங்கிரஸ் பாராளுமன்ற குழுவின் முடிவை பல வாலிப முன்னணி கிளைகள் ஆதரித்துள்ளன. ஒரு சிலவிஷமிகள்தான் இதற்கு எதிர்ப்புத்தெரிவித்துவருகின்றனர். இதைநாம் பொருட்படுத்தவில்லை. கட்சியில் பெரும்பாலானோர்எமது முடிவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்

தமிழ்க்காங்கிரஸ்கொழும்புக் கிளை செயற்குழு உறுப்பினர் திரு ச புலேந்திரசிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: தமிழ் காங்கிரஸ் எம் பிக்களை வெளியேற்ற வேண்டுமென்று தமிழ் காங்கிரஸ் வாலிபமுன்னணி கொழும்புக்கிளை செயற்குழு தீர்மானித்திருப்பதாககூறப்படுவது தவறாகும்.

1970-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நிறுவப்பட்ட இந்தக் கிளையோ, செயற்குழுவோ எக்காலத்திலும் கூடி இத் தீர்மானத்தை நிறைவேற்றவில்லை இதுசம்பந்தமாக வெளியிடப்பட்ட அறிக்கையில் தான் கையெழுத்திடவில்லை. இது சில விஷமிகளின் செயலாகும்.

—

## நாத்பாய்

### மாரடைப்பால் காலமானார்

பம்பாய், ஜன. 18

பிரஜா சோஷலிஸ்ட்கட்சி தலைவர்களில் ஒருவரான திரு. நாத்பாய் பெல்காமில் நேற்று நள்ளிரவில் மாரடைப்பால் காலமானார். பம்பாயிலிருந்து கூட்டமொன்றுக்குச் செல்கையில் இம்மாரடைப்பு ஏற்பட்டு அவர் காலமானதாக பம்பாய் பிரஜா சோஷலிஸ்ட் கட்சிக் காரியாலயத்துக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. திரு. நாத்பாயின் திடீர்மரணத்திற்கு ஜனாதிபதி வி வி கிரி, பிரதமர் இந்திராகாந்தி, பி. சோ. கட்சித்தலைவர் என். ஜே. கூரோ ஆகியோர் அனுதாபம் தெரிவித்துள்ளனர்

ஈழநாடு

சாதாரண வருடம் தை மாதம்
6-ந் திகதி [19-1-71]

## தமிழரின் அபிமானம்

தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நீர்சக்தி மின்சாரம் கிடைக்கமுடிந்ததையும் இதை ஆரம்பித்துவைக்க கவர்னர் ஜெனரல், பதில் பிரதமர் முதலியவர்கள் நேரில் வந்ததையும் ஈழத்தமிழர் அனைவரும் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர்.

இதைவிட அவர்களுக்கு அதிக மகிழ்ச்சியும் ஆறுதலும் அளித்தது. பதில் பிரதமர் மைத்திரிபால சேனநாயகா யாழ்ப்பாண மாநகரசபை வைபவத்தில் தமிழ்மொழியில் நன்றி தெரிவித்துப் பேசியதுதான்.

ஒருவருக்கு உணவைவிட மானம்தான் பெரிது. யாழ்ப்பாணத்துக்கு நீர் சக்தி மின்சாரம் வந்ததால் இங்கு சமூக வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் அது உதவுவதாகும். ஆனால் தங்கள் மொழிக்குச்செய்யப்பட்ட சிறுமை காரணமாக பொதுவாக இந்நாட்டில் தமிழர் மனம் உடைந்து, புண்பட்டிருக்கையில், பதில் பிரதமர் மைத்திரிபால சேனநாயகா தமிழில்பேசி, அம் மொழியையும், அம்மொழிபேசும் மக்களையும் மதித்து கௌரவித்துள்ளது அவர்களது மனப்புண்ணை சற்றே ஆற்றி அவர்களுக்குப் புதுநம்பிக்கையும் தெம்பும் அளிப்பதாகும்.

தமிழ் விசேஷ உபயோகச் சட்டத்தையும் நீக்க வேண்டுமென்று ஒரு சாரார் கிளர்ச்சி செய்யும்போது இந்நாட்டில் தமிழின் எதிர்காலம்பற்றி தமிழ்பேசும் மக்களிடையே கவலை ஏற்பட்டுள்ளது இயற்கையே. இச்சமயம் மைத்திரிபால சேனநாயகா அவர்கள் துணிச்சலுடன் தமிழில் பேசி, அவர்களது மனப்புண்ணை ஆற்றியுள்ளார்.

இதைத்தொடர்ந்துகாரியபூர்வமாக என்னசெய்யப் படப்போகிறதென்பதே கேள்வி அரசியலமைப்புச் சபை ஆரம்பவிழாவில் சிங்களமும் தமிழும் சரிசமமாகப் பாவிக்கப்பட்டன. அந்த உணர்ச்சியுடன் அரசாங்கம் இவ்விஷயமாகக் காரியம் செய்வதாயின் முன்னிருந்ததுபோல் தமிழுக்கு அரசியல் சட்டத்தில் உரிய இடம் கிடைக்கவேண்டும். அதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் செய்தால் தமிழரின் அபிமானத்தை அமோகமாகப்பெற்று தேசிய ஒற்றுமையையும் பலப்படுத்துவதாக இருக்கும்.

# உடுப்பிட்டி எம். பி. யின் கருத்தை ஏற்றனர்

(பருத்தித்துறை நிருபர்)

உடுப்பிட்டி எம். பி. திரு. க. ஜெயக்கொடி, தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள நீதிமன்றங்களில் தமிழ் மொழியே நீதிமன்றமொழியாக இருக்கவேண்டுமென தமிழ் வழக்கறிஞர் ஏகோபித்துக் குரலெழுப்பவேண்டும் என்ற வேண்டுகோளை ஏற்று பருத்தித்துறை வழக்கறிஞர் சங்கச் செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தின் படி கூட்டப்பட்ட கூட்டத்தில் திரு ஜெயக்கொடியின் கருத்து ஏற்றுக்கொள்ளப் பட்டது.

இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் உட்படஅனைவரும் திரு. ஜெயக்கொடியின் கருத்தை ஏற்று அதற்குச் சாதகமாக வாக்களித்தனர்.

நீதிமன்றங்களும் நீதிபதிகளும், வழக்கறிஞரும் தமிழர்களாக இருக்கும்போது பிறமொழிகளில் நீதிமன்ற அலுவல்கள் நடப்பது ஜனநாயகத்துக்கும் நீதிக்கும் விரோதமானது என்ற அவரது கருத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

இதுபற்றி திரு. ஜெயக்கொடி கூறியதாவது:

'இதுசிலர்கருதும் சமஷ்டி அல்லது பிரிவினை விடயமல்ல. நீதிக்குக் கட்டுப்பட்ட ஒரு தீர்மானத்தையே நாம் நிறைவேற்றியிருக்கிறோம். இடதுசாரி நண்பர்களே இதை ஏற்றுக்கொள்கின்றனர்' சிங்கள மொழி நீதிமன்ற மொழியாகச் சிங்களப் பகுதிகளில் இருப்பதுபோலத் தமிழ்ப் பகுதியில் தமிழ்மொழி நீதிமன்றமொழியாக இருப்பது நியாயமாகும்'.

## நன்றிநவிலல்

சென்ற 31-12-70 வியாழக்கிழமை சிவபதமடைந்த திருமதி அன்னலட்சுமி கணபதிப்பிள்ளை அவர்களின் கிரியைகளில் பங்கு பற்றியோருக்கும் ஆறுதல் தெரிவித்திருந்தோருக்கும் எங்கள் நன்றி

ச கணபதிப்பிள்ளையும், மக்களும் மருமக்களும். சரசாலை, சாவகச்சேரி.

2665

இப் பத்திரிகை 'ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63 - ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு தை மாதம் 19-ந் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

## பதில் நிரந்தரக் காரியதரிசி

(நமது நிருபர்)

திரு டபிள்யு ரி ஜெயசிங்கி பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் பதில்நிரந்தரக் காரியதரிசியாக கடமையாற்றுகின்றார். திரு. ஆர்தர் இரத்தினவேல் சிங்கப்பூரில் நடைபெறும் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்துகொள்வதற்காகச்சென்றுள்ளதால் திரு. ஜெயசிங்கி அவருக்குப் பதிலாகக் கடமையாற்றுகிறார்.

—

## வேம்படியில் ஊர்வசி!

யாழ்ப்பாணம், செவ்.

வேம்படி மகளிர் கல்லூரி கட்டட நிதிக்காக இம் மாதம் 26-ம் 27-ம் தேதிகளில், 'ஊர்வசி' என்ற நாட்டிய நாடகம் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. மாணவர்களுக்காக இந்நாடகம் இம்மாதம் 23-ந் தேதி நடைபெறவிருக்கிறது.